

கல்கி
KALKI 28 JAN 62.
30
காசு

உங்களுக்கு



உங்களுக்கு

உங்களுக்கு

உங்களுக்கு

உங்களுக்கு

மற்றும்

ஆயிரக்கணக்கானவர்களுக்கு...

அதிவிசேஷ ஆடையணிகள்

அரிய அழகானவை... நீடித்துழைப்பவை...
...கண்கவர் வண்ணங்கள், தேர்வுகள்,
அமைப்புகளோடு பல்வேறு ரகங்களில்
தயாராகி, வருகின்றன.

- ★ பாப்லின்கள்
- ★ மல்கள்
- ★ வாயில்கள்
- ★ புடவைகள்
- ★ வேஷ்டிகள்
- ★ ஷர்ட்டிங்குகள்
- ★ பைஜாமாக்கள்
- ★ உயர்ந்த ரகத்தில் அச்சிடப்பட்ட, சாயம்தோய்க்கப்பெற்ற ஆடைகள்.

சாயாஜீ மில்ஸ் நம்பர். 1

பழைய ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே, பரோடா.

பிலவ, தை 15 — கல்கி — ஜனவரி 28, 1962

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

மிகப் பழங்கால முதலாகவே அமெரிக்கப் பூர்வீகக் குடிகள் புகையிலையைப் பரம் பொருளிடமிருந்து பெற்ற வரப்பிரசாதமாகப் போற்றித் தொழுததுண்டு. விசேஷச் சடங்குகளின்போது புகையிலையை யாகத் தீயிலிடுவதும், மழையற்ற வரட்சியின் போது பொடித்த புகையிலையைக் காற்றில் தூவிவிடுவதும், மீன்கள் கிடைக்காத போது கடலில் புகையிலைத் தூள்களை இறைப்பதும் அவர்களிடமிருந்த சம்பிரதாயம்.



புகையிலையின் வரலாறு... 2



மலர் 21

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
—பாரதியார்

இதழ் 26

காந்தீயக் குடியரசை உருவாக்குவோம்

குடியரசுத் திருநாளாகிய ஜனவரி இருபத்தியாறும் தேதிக்கும் சர்வோதய தினமாகிய ஜனவரி முப்பதுக்குமிடையே இந்த இதழ் வெளியாகிறது. இன்று, 'நாம் வாழ்வது காந்தியடிகள் விரும்பிய ஜனநாயக வாழ்வுதானா?' என்ற வினா எழுவது இயல்பு.

காந்தி அடிகள் என்ன சொன்னார்? 'அந்நிய அரசாங்கமாயினும் சரி, சுதேச அரசாங்கமாயினும் சரி, அதன் வரம்பு மீறிய அதிகாரத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு இடையறாமல் முயன்று கொண்டிருப்பதுதான் உண்மையான சுயாட்சியாகும். மக்கள் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கத்தையே எதிர்பார்க்க நேரிடுமானால் அப்போது சுயராஜ்யம் என்பதே ஒரு வருந்த வேண்டிய விஷயமாகிவிடும்' என்றார்.

காந்தியடிகள் உருவாக்கிய காங்கிரஸ் கட்சியோ இன்று அவருடைய இந்த இலட்சியத்துக்கு முற்றிலும் முரணான முறையிலேயே செயல்பட்டு வருகிறது. காங்கிரஸ் அரசாங்கம் தலையிடாத துறையே இப்போது கிடையாது. பெர்மிட் - லைசென்ஸ் கடிவாளத் தினால் தொழில் துறை என்ற குதிரையைத் தன் இஷ்டப்படி ஓட்டுகிறது. சர்க்கார் உத்தியோக நியமனம், உத்தியோக உயர்வு இவற்றிலெல்லாம் ஆளும் கட்சிக்காரர்கள் வைத்ததே சட்டமாக இருப்பதால் பொதுப்பணியும் அதன் வசமாகி விட்டது. நீதி பரிபாலனம், கல்வி இவையும் ஆளும் கட்சியின் ஆதிக்கத்துக்கு இலக்காகி விட்டன. மொத்தத்தில் எல்லாவற்றுக்கும் எல்லாரும் ஆளும் கட்சியையே எதிர்பார்த்து வாழும் பலவீன வாழ்க்கையே இந்தியக் குடியரசு என்றாகி விட்டது. 'அரசாங்கம் அதிகமாகத் தலையிடாமலேயே மக்களின் வாழ்க்கை பயனுள்ள முறையில் நடைபெற்றால் அதுவே உண்மையான ஜனநாயகம்; இல்லையேல் பெயரளவில்தான் ஜனநாயகம் நடைபெறுவதாகும்' என்ற அண்ணலின் வாக்கை நாம் நினைவு கூர்ந்தால் இன்று இந்தியா ஒரு குடியரசுதானா என்றே ஐயமுறுவோம்.

'அகிம்சை அடிப்படையில் அமைந்த சமுதாயமும் அதிகாரத்தை ஓரிடத்தில் மையப்படுத்தும் முறையும் ஒன்றுக்கொன்று எதிரானவை' என்று காந்தியடிகள் கூறியதைக் கொண்டு நோக்கினால் இன்று ஓர் எதேச்சாதிகாரத்தின் கீழ்தான் நாம் வாழ்கிறோம் என்பது புலனாகும்.

'அஸ்திவாரத்திலிருந்தே நமது கருத்துக்களுக்கு முற்றிலும் வேறுபட்ட சில கொள்கைகளின் மீதே சோஷலிஸம், கம்யூனிஸம் முதலிய மேற்கத்திய முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மனித இயல்பின் சாரம் சுயநலமே என்று அவை கருதுகின்றன. இதை நான் ஏற்கவில்லை' என்றார் மகாத்மா. பொருள் வசதி மிக்கவர்களின் தர்ம சிந்தனையை வளர்த்துத் தங்கள் செல்வத்தை அவர்கள் சமூகத்துக்குப் பயனுக்குமாறு செய்யவேண்டும் என்று வலியுறுத்தினார் அவர். ஆனால் இன்று நேரு அவர்களோ பலவந்தத்தை ஆதாரமாகக் கொண்ட சோஷலிஸம் என்ற மாயையின் மீதே நாட்டின் எதிர்காலத்தை எழுப்பக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்.

காந்திஜி தமது ஆயுட்காலம் முழுதும் வற்புறுத்தி வந்த அகிம்சைக் கொள்கையையும் அடியோடு புறக்கணித்து விட்டுப் பலாத்காரமே முறை என்ற கொள்கையைப் பல வழிகளில் வெளிப்படுத்தி விட்டது காங்கிரஸ். கோவா அவசர நடவடிக்கையினால் அகில உலகின் எதிரிலும் காந்திஜி இந்தியாவுக்கு அளித்த தர்ம பலத்தைச் சிதைத்துவிட்டது.

இவ்வாறு காந்திஜியின் கருத்துக்களையெல்லாம் காங்கிரஸ் கட்சியானது காற்றில் பறக்க விட்டதற்குக் காரணம் என்ன? அந்தக் கொள்கைகளைக் கடைப்பிடித்துப் பார்த்து அவை பயனற்றவை என்று அது கண்டு கொண்டு விட்டதா, என்ன? அல்லவே அல்ல. சர்க்கார் சர்வாதிபத்தியம் என்பதன் மூலம், இன்று ஆட்சி புரியும் கட்சியின் சர்வாதிபத்தியத்தை ஏற்படுத்தி, அதனால் அக்கட்சியையே நிரந்தரமாக அதிகாரத்தில் இருத்த வேண்டும் என்ற மடமை கலந்த துராசைக்காகவே, கண்ட்ரோல் கட்டுப்பாடுகளையும், சோஷலிஸக் கெடுபிடியையும் கையாள்கிறார் நேரு அவர்கள். காந்தியடிகளோ இந்தக் காங்கிரஸ் ஸ்தாபனம் தொடர்ந்து ஓர் அரசியல் கட்சியாக இருக்க வேண்டும் என்பதையே விரும்பவில்லை. காந்திஜி சற்றும் விரும்பாத கொள்கைகளை, கலைக்கப்படவேண்டும் என்று அவர் கருதிய ஒரு கட்சி செயலாக்குவதற்கு நாம் இடமளித்து விட்டோம். தனிநபர் சுதந்திரத்தை யெல்லாம் நாம் இழந்து விட்டோம். இந்நிலையில் குடியரசு தினமும், காந்தி நினைவு நாளும் கொண்டாடுவதில் என்ன பொருள் இருக்கிறது?

போனது போகட்டும்; இப்போதாவது ஒரு சங்கற்பம் செய்து கொள்வோம். அடுத்த ஆண்டு வரும் குடியரசு தினத்தை மக்களின் உண்மைச் சுதந்திர நாளாகவும், அண்ணலின் திதியைக் காந்திய தத்துவத்தின் வெற்றித் திருவிழாவாகவும், கொண்டாட வழி காண வேண்டும் என்று உறுதி பூணுவோமாக. அதாவது நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்குப் பெருத்த ஆதரவளித்து ராஜ்ய சட்ட சபைகளிலும், பாராளுமன்றத்திலும் அண்ணல் உபதேசித்த அறநெறிகளைப் பரவச் செய்வோம்.

சுதந்திரக் கட்சி உண்மையான காந்தியக் கட்சி. பொருளாதாரத்தை ஆன்மீகத்துக்கு அடிப்படையாகக் கருதுவது, தனி மனிதன் மாண்பை மதிப்பது, வசதியுள்ளவர்களின் தர்ம உணர்ச்சிக்கு ஊட்டமளித்து அவர்களைப் பொதுச் சொத்தின் பாதுகாவலராக்குவது, பகட்டை நீத்து எளிமையான திட்டங்களை வகுப்பது போன்ற காந்திய கொள்கைகளைப் பின்பற்றும் ஒரே கட்சி சுதந்திரக் கட்சிதான்.

இவற்றை விட முக்கியமாக, குடியரசைக் குடிகளின் அரசாகவே செய்யும் திருப்பணியில் காந்திஜியின் ஆணையைத் தலைமீது வைத்துத் தாங்குவது சுதந்திரக் கட்சி. உழவர், தொழிலாளர் இவ்வாறு பற்பல பிரிவினருக்கும் இக் கட்சி செய்யவிருக்கும் நன்மைகளை முன்பு கல்கி இதழ்களில் கூறினோம். இவ்வித நன்மைகள் எந்த அரசியல் அமைப்பின் கீழும் நடைபெறக்கூடும். எந்த அரசியல் கட்சியும் அவற்றை நிறைவேற்றியும் வைக்கலாம். ஆனால் மற்றெந்த அரசியல் கட்சியும் கூறாத ஒரு கொள்கையைத் தீரத்துடன் எடுத்தியம்புகிறது சுதந்திரக் கட்சி. அதுதான் சர்க்காரின் அதிகாரமே குறைய வேண்டும்; இருக்கும் சிறிது அதிகாரமும் பரவலாக அமைய வேண்டும் என்பது. இன்று எவ்வளவு நல்ல முறையில் நடக்கும் அரசியல் கட்சியும் ஆட்சிக்கு வந்தால் அதிகார போதையால் தரம் குன்றிப் போகக் கூடும். சுதந்திரக் கட்சியும் இதற்கு விலக்கல்ல என்பதை உணர்ந்து சர்க்காரின் அதிகாரத்தையே குறைத்துவிட வேண்டும், மக்களின் சுதந்திரத்தை வளர்த்து உண்மைக் குடியாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று அடித்துக் கூறுகிறது அது. 'எந்த அரசாங்கம் மிகக் குறைவாக அதிகாரம் செலுத்துகிறதோ, அதுவே தலைசிறந்த அரசாங்கம்' என்ற காந்திய சித்தாந்தமே இது. 'ஆட்சி செய்வது என்பது ஒரு மாபெரும் பொறுப்பு; ஆட்சியாளர் அதிகாரத்தைத் தங்களிடம் குவித்துக் கொண்டு அவற்றை துஷ்பிரயோகம் செய்து ஆதாயம் பெறும் காரியம் அல்ல அது' என்ற நிலை ஏற்படும்போது நாட்டு நலனில் உண்மையாகவே அக்கறை கொண்ட யோக்கியர்கள்தாம் ஆட்சி பீடத்திலிருப்பார்கள் என்பதைப் பற்றிச் சிறிதும் சந்தேகம் வேண்டாம். அத்தகைய நேர்மையான நல்லாட்சியை நிறுவுவது குடியரசின் பெயராலும், காந்திஜியின் ஆக்ஞையாலும் மக்களுக்கு ஏற்பட்ட மாபெரும் பொறுப்பாகும். 'சுயராஜ்யம் என்பது அதிகாரத்தைச் சிலர் கைப்பற்றி வைத்துக் கொண்டிருப்பதல்ல. அந்த அதிகாரம் துஷ்பிரயோகமாகும் போது அதனை எதிர்க்க எல்லா மக்களும் சக்தி பெற்றிருப்பதே சுயராஜ்யமாகும்' என்றார் அண்ணல். மக்கள் தங்கள் சக்தியை நிரூபித்துக் காட்ட வருகிற பொதுத் தேர்தல் ஓர் அருமையான வாய்ப்பாகும்.

குடியானவர்களே! நிலத்துக்குக் கிஸ்திக் கட்டணத்தை ஒழித்துவிட முன்வந்திருக்கிறது சுதந்திரக் கட்சி. அந்தக் கட்சியை ஆதரியுங்கள்!

அபாண்டமான குற்றச்சாட்டு

சீனவிடம் காட்ட முடியாத தமது வீரப் பிரதாபத்தை வெளிப்படுத்துவதற்காகப் பாரதப் பிரதமரவர்கள் மானசீகக்கோட்டைகள் கட்டி அவற்றை முற்றுகை இட்டு மகிழ்கிறார். 'பழைய மன்னர்கள் மீண்டும் ஆட்சி உரிமை பெறுவது நடக்காத காரியம்; அவர்களுக்குப் பழைய சம்ஸ்தான ஆதிபத்தியத்தை வாங்கித்தர முயற்சி செய்யும் சுதந்திரக் கட்சிக்கு வோட்டளிக்காதீர்கள்' என்று பேசி வருகிறார் நேரு அவர்கள். பிரதம மந்திரி ஒருவர் வாயிலிருந்து இவ்வளவு ஆதாரமற்ற அநீதமான குற்றச்சாட்டு வருவது அந்தப் பதவிக்கே இழுக்காகும்.


பழைய மன்னர்களுக்கு ராஜ்யாதிகாரம் வாங்கிக் கொடுப்பது பற்றி இன்று யாரேனும் எண்ணிப் பார்க்க முடியுமா? அப்படிச் செய்வதாகச் சுதந்திரக்கட்சி ஏதும் குறிப்புத்தான் காட்டியிருக்கிறதா? இவ்வளவு கேவலமான முறையில் பழி சுமத்த நேருஜி எப்படித் துணிந்தார் என்பது வியப்பாகத்தான் இருக்கிறது. சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை எதிர்க்கத் துணிவில்லாமல், இல்லாத பொல்லாத கருத்துக்களை அதன் மீது சுமத்தி அவற்றை எதிர்ப்பது அவருக்கும் அவர் தலைமை தாங்கும் கட்சிக்கும் சற்றும் அழகாகாது.

முன்னாள் மன்னர்களும் இன்றைய சுதந்திரப் பிரஜைகள்; முன்பு அநுபவித்த விசேஷ உரிமைகள் இல்லாவிடினும் எல்லா மக்களுக்கும் உரிய ஜனநாயக உரிமைகள் அவர்களுக்கும் உண்டு என்றுதான் சுதந்திரக் கட்சி கருதுகிறது. அவர்களும் தங்களுக்குப் பிடித்த கட்சியை ஆதரிக்கலாம் என்பதைக் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பது அந்தக் கட்சிக்கு ஜனநாயக உரிமைகளை எல்லாருக்கும் வழங்க விருப்பமில்லை என்பதையே காட்டுகிறது.

பழைய மன்னர்களுக்குப் பதிலாக அங்கங்கே காங்கிரஸ் மன்னர்களை ஏற்படுத்தி அவர்கள் இட்டதே ஆணையாக்கி யிருக்கிறது காங்கிரஸ் என்பது பிரத்தியட்ச உண்மை.

பிரதமரின் பேச்சைக் கேட்டு யாரும் ஏமாற மாட்டார்கள். காங்கிரஸிலிருப்பதுதான் தங்களுக்கு இலாபகரமானது என்பது தெரிந்தும் எதிர்க்கட்சியில் சேர்ந்துள்ள பழைய மன்னர்கள் ஜனநாயகத்தில் கொண்டுள்ள நம்பிக்கையை மக்கள் போற்றவே செய்வார்கள்.

நிதிக்குப் பணம் – நெஞ்சுக்குச் சுருக்கு!



தென் சென்னைத் தேர்தல்

தென் சென்னை நகர வாக்காளர்கள் அதிருஷ்டசாலிகள்! அறிவுமிக்க ஒருவர், ஆக்கத் திறனும் நேர்மையும், நாணயமும் நிறைந்த ஓர் அபேட்சகர் அவர்களுக்குக் கிடைத்து விட்டார்.

புகழ் பெற்ற என்ஜினியர் ஸ்ரீ எம். கணபதி அவர்கள் தென் சென்னை லோக சபைத் தொகுதிக்குச் சுயேச்சை அபேட்சகராகப் போட்டி யிடுவதைப் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

இந்த நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டங்களை நிறைவேற்றிக்காட்டக்கூடியவர்களின் தேச சேவையானது சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்களின் பணிக்கு ஒரு சிறிதும் குறைந்ததல்ல. இவ்விதத்தில் ஸ்ரீ எம். கணபதி அவர்களின் தேசப் பணியானது பல மகோன்னதமான திட்டங்களாக உருப்பெற்று நின்று இன்று கண்ணுக்கு மெய்யாக நாட்டுக்கு நன்மை அளித்து வருகிறது.

நேர்மைக்கும், புத்தி கூர்மைக்கும், சுறுசுறுப்புக்கும், சிக்கனத்துக்கும் பெயரெடுத்தவர் ஸ்ரீ எம். கணபதி அவர்கள். அவருடைய பொறி இயல் சாதனைகள் பிரமிப்பூட்டுபவையாகும்.

1943-ம் ஆண்டு உலகமகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தென் கிழக்கு ஆசியாவின் முக்கிய தளமாகிய கல்கத்தா, தாமோதர நதி வெள்ளத்தால் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்ட போது இரவு பகல் அயராது உழைத்து ரயில் போக்குவரத்தைச் செப்பனிட்டவர் ஸ்ரீ கணபதி அவர்கள்.

காசியிலுள்ள கங்கைப் பாலத்தில் தினமும் சென்று கொண்டிருந்த ஐம்பது ரயில்களின் போக்கு வரவுக்கு ஓர் இடையூறும் இல்லாதபடியே பழைய தண்டவாளத்தை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக இரண்டு இருப்புப் பாதைகள் சமைத்துப் பஸ்போக்குவரத்துக்காக இந்தப் பாலத்தின் மீது மற்றோர் மேம்பாலமும் எழுப்பி மக்களை அதிசயிக்க வைத்தவர் ஸ்ரீ கணபதி. மாளவியா பாலம் என்று பெயர் சூட்டப்பட்ட இந்தப் பாலத்தைத் திறந்து வைத்த ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் இதனைக் கணபதி பாலம் என்றே அழைக்கலாம் என்று கூறி அவரைப் பாராட்டினார்.



இந்தியா சுதந்திரம் பெற்ற பின் சித்தரஞ்சனில் என்ஜின்கள் தயாரிக்க உத்தேசித்த போது அந்தப் பொறுப்பை நிர்வகிக்கக் கூடியவர் ஸ்ரீ கணபதி அவர்கள்தாம் என்று கருதியது சர்க்கார். குறிப்பிட்ட காலத்துக்கு முன்பாகவும், எதிர்பார்த்ததை விடக் குறைவாகச் செலவிட்டும் அங்கு தொழிற்சாலை நிர்மாணித்தது மட்டுமின்றி, எழில் கொழிக்கும் ஓர் ஊழியர் பேட்டையையும் உருவாக்கினார் ஸ்ரீ எம். கணபதி அவர்கள். சித்தரஞ்சனில் தயாரான என்ஜின்கள் எல்லாம் இன்று அவருடைய பெருமையையே கூவிக் கொண்டு செல்வதாகச் சொல்லலாம்.

பெரம்பூரில் இருக்கிறதே, ஆசியாவின் மாபெரும் ரயில் பெட்டி கட்டும் நிலையம், அதுவும் இந்தப் பொறி இயல் நிபுணர் வகுத்த திட்டத்தின் மீது உருப்பெற்றதுதான்.

1955 வரையில் கண்ட்லா துறைமுக நிர்மாணத்தில் முழுமூச்சுடன் பணியாற்றிய கணபதி அவர்கள் அங்கு அமைத்த எண்ணெய் இறக்கும் துறைமுகத்தைக் கண்ட ஸ்டான்வாக் கம்பெனியின் ஜெனரல் மானேஜர் 'இந்தியாவுக்கு ஓர் என்ஜினியர்' என்று அவரை வாயாரப் பாராட்டினார். அதன் பிறகு மேற்குப் பிராந்திய ரயில்வே ஜெனரல் மானேஜராக ஸ்ரீ கணபதியின் அரிய பணி சிறப்புற்று விளங்கிற்று. பல போக்குவரவுச் சிக்கல்களை யெல்லாம் எளிதில் தீர்த்துப் புகழ் கொண்டார்.

1958-ல் ரூர்கேலா உருக்காலை வேலைகள் தாமதமாகி வருவதைக்கண்டவுடன் சர்க்காருக்கு ஸ்ரீ கணபதியின் நினைவுதான் வந்தது. அவர்கள்நம்பிக்கை வீண் போகவில்லை. துறைமுக வேலை நிறுத்தம், வெள்ளக் கொடுமைகள் இவற்றுக்கு இடையே எதிர் நீச்சல் அடித்துத் திட்டமிட்ட காலத்துக்குள் ரூர்கேலாத் திட்டத்தின் உற்பத்தியைச் சீராக்கி வைத்து யாவருடைய மதிப்புக்கும், வியப்புக்கும் உரியவரானார் ஸ்ரீ கணபதி அவர்கள். ரூர்கேலா திட்டத்தைச் சேர்ந்த பல உலைகளும், அழகிய தொழில் நகரமும் முறையே பொறி இயலில் அவர் எவ்வளவு பெரிய நிபுணராக விளங்கினார் என்பதற்கும் அவரது கலாரசனைக்கும் சான்றாகும்.

ஸ்ரீ கணபதி அவர்களைத் தேடி வந்த விருதுகள் எத்தனை எத்தனையோ. பத்ம பூஷணம் என்ற விருதும் அவருக்கு அளிக்கப்பெற்றது. ஆனால் அவர் பெயரையும் புகழையும் பொருட்படுத்துவதில்லை. நேர்மையினின்று பிசகாமல், கடமையே கண்ணாக, உழைப்பே இலட்சியமாக, பல பெரிய எஞ்சினீயரிங் காரியங்களை வெற்றிகரமாக முடித்து வந்தார்.

அரசாங்க உத்தியோகங்களிலிருந்து ஓய்வு பெற்று விட்ட ஸ்ரீ கணபதி அவர்கள் இன்று தென் சென்னை லோக சபைத் தொகுதியில் வெற்றி பெற்றால் லோக சபைக்கு ஒரு சிறந்த அங்கத்தினரை அளித்த பெருமை வாக்காளர்களைச் சாரும். அரசியலைத் தொழிலாகக் கொள்ளாமல், ஆக்க ரீதியில் தொழில் புரிந்து நாட்டுப் பொருளாதாரத்தைச் செழிக்கச் செய்த கணபதி போன்றவர்கள் பார்லிமெண்டில் இடம் பெற வேண்டியது இன்றைய இன்றியமையாத தேவையாகும். தேர்ந்த ஞானமுள்ளவர்கள் சர்க்கார் திட்டங்களை நுணுகி ஆராய்ந்து அறிவு புகட்ட வேண்டியது அவசியமல்லவா? இந்த நாட்டுத் திட்ட நிர்மாணங்கள் குறித்து அத்தகைய யோசனைகளைக் கூறவல்ல ஸ்ரீ கணபதி அவர்களுக்குத் தங்களது வாக்குகளை அளிக்க வேண்டியது தென் சென்னைவாசிகளின் கடமையாகும்.


தென் சென்னைத் தேர்தல் நிதி மந்திரி உத்தியோகத்துக்கு ஒரு வாசற்படியல்ல; யார் நிதி மந்திரியாக இருக்க வேண்டும் என்பதல்ல தென் சென்னை வாக்காளர்களின் பிரச்னை. யாரை பார்லிமெண்டுக்கு, சர்க்கார் காரியங்களுக்கு ஒரு மேற்காவலாக அனுப்ப வேண்டியது என்பதே கேள்வி.

ஸ்ரீ எம். கணபதி அவர்களுக்கு வோட்டளிப்பதற்கு இதுவரை கூறியவற்றைவிட இன்னொரு முக்கியமான காரணமும் உண்டு: தென் சென்னைப் பார்லிமெண்ட் தொகுதிக்குச் சுயேச்சையாக நிற்கும் ஸ்ரீ கணபதியைத்தான் உங்கள் பேரபிமானத்துக்குரிய சுதந்திரக் கட்சியும் ஆதரிக்கிறது.

காந்திஜி காட்டும் வழி

நவீன விஞ்ஞானம் அளித்துள்ள வாழ்முறையிலும் அரசியல் சூதாட்டங்களிலும் சிக்கித் தவிக்கும் மனித குலம் இன்று அமைதியையும் உள்ளத் தெளிவையும் தேடித் தவிக்கிறது. காந்தி மகானின் நினைவு நாளாகிய இன்று எத்தனை எத்தனையோ சிக்கல்களைத் தீர்க்க வேண்டிய நிலையிலும் இந்தச் சாந்தத்தையும் பிரசன்னமான மனத்தையும் அவர் எப்படிப் பெற்றிருந்தார் என்று எண்ணிப் பார்க்கிறோம். அதற்கு விடை கூறுகின்றது இந்த இதழ் அட்டையில் திகழும் ஆர். நடராஜனின் ஓவியம். அரசியலிலும் பொருளாதாரத்திலும் உள்ளத்தையும் அறிவையும் ஈடுபடுத்தினாலும் இவற்றுக்கு மேம்பட்ட ஆத்மாவை இராமபிரானது இணையடிகளிலேயே லயமுறச் செய்ததால்தான் அடிகள் அவ்வளவு அமைதியுடன் வாழ முடிந்தது. இதய முடிச்சுக்களை அவிழ்க்கும் இறை உணர்ச்சியை அன்றி இன்றைய சிக்கல்களைத் தீர்க்க வழிதான் வேறு எது?

அமைதி பெற்ற வாழ்க்கையில், எந்தப் பிரச்னை வந்தாலும் அதன் சிக்கல்கள் தாமாகவே அவிழ்ந்து விடுகின்றன. ஓரிரு அழுத்தமான காரணங்களும் சிற்சில நுணுக்கமான உப காரணங்களும்தான் எந்தப் பிரச்னைக்கும் அடிப்படை என்ற உண்மையை உணர்ந்து அவற்றைத் தீர்க்கும் உபாயத்தையும் அப்போது காண முடிகிறது. ஓரிரு அழுத்தமான கோடுகளாலும் சிற்சில நுணுக்கமான வளைவுகளாலும் இங்கு உயிர் பெற்றுக் காணும் காந்திஜி இவ்வாறு உணர்ந்து தான் மாபெரும் பிரச்னைகளையும் தீர்த்து வைத்தார். உள்ளம் குழம்பி அலைப்புறும் நாமும் தம்மைப் பின்தொடர வேண்டும் என்பதைத்தான் இந்தச் சித்திரத்தில் அவர் கூறுகிறாரோ?



முறைகேட்டின் எல்லை

இன்றைக்கு ஆட்சியிலுள்ள காங்கிரஸ் கட்சியும், எந்தக் கட்சி இருந்தாலும் போனாலும் நிலையாக இருக்கும் அரசாங்கமும் ஒன்றே என்ற ஒரு மாயத்தைத் தோற்றுவித்து வருகிறது காங்கிரஸ். தேசியக் கொடியைப் போலவே தோன்றும் கட்சிக் கொடியைக் காட்டி மக்கள் மனத்தில் சர்க்கார் என்பது காங்சின்னமான நுகத்தடி பூட்டிய இரண்டு மாடுகளும் 'காங்கிரஸ்' என்று தேவநாகரி லிபியில் வாசகமும் பொறித்த தபால் தலைகளை 1955–ம் ஆண்டு சர்க்கார் வெளியிட்டிருக்கிறது. இந்தத் தபால் தலைகளின் பெரிதாக்கப்பட்ட புகைப்படத்தையே அடியில் பிரசுரித்திருக்கிறோம். இவ்விஷயத்தை இந்நாள்வரை மக்கள் கவனிக்காததே அவர்கள் எவ்வளவு குழம்பியிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. வானொலியில் நடந்து வரும் கட்சிப் பிரசா



ஜனவரி 23ந் தேதி வெளியான 'ஸ்வராஜ்யா' மலரில் இடம் பெற்றுள்ள இக்கட்டுரையைக் கல்கி வாசகர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அளிக்கிறோம்.

ராஜாஜி

ஜயப்ரகாஷ் நாராயண்

ராஜாஜி மீது புகழைக் குவிக்க இந்தியாவில் யாரும் முயலுவதில் அர்த்தமில்லை. அதேசமயத்தில் அவரைப் பற்றி எழுதும்போது இதைத் தவிர்ப்பதும் கஷ்டமான காரியம். ஆகவே மேற்கொண்டு சுற்றி வளைக்காமல் ராஜாஜி இந்தியாவின் புதல்வர்களுள் தலைசிறந்த ஒருவர்—இந்தக் காலத்துக்கு மட்டுமல்ல, எந்நாளுக்கும் — என்பதைச் சொல்லி விடுகிறேன். மக்களை மாக்களிடமிருந்து வேறுபடுத்தும் அறிவு, இதயம் என்னும் இரண்டும் அவரிடம் பூரண வளர்ச்சியை எய்தியிருக்கின்றன. அதனால், ஆன்மீகம், அறப் பண்புகள் ஆகிய செல்வங்களைக் குறைவறப் பெற்ற மகாமேதை ஒருவரை நாம் கண்ணெதிரே காண்கிறோம்.

அரசியல் துறையில் அவர் உன்னதமான ஓர் அந்தஸ்தைப் பெற்றிருக்கிறார். எனினும் எதிர்காலத் தலைமுறையினர் அவரை மனிதப் பண்பைப் போதித்த ஆசானாகத்தான் நினைவிருத்திக் கொள்ளப் போகிறார்களே யன்றி ஓர் அரசியல் தலைவர் என்ற முறையிலல்ல. மனித இயல்புகளை ஊடுருவிப் பார்க்கும் திறன், அசாதாரணமான அறிவு, பழுத்த ஞானம், காடாகச் சூழ்ந்து விடக் கூடிய அனாவசியமான விஷயங்கள், புறத் தோற்றங்கள் இவற்றினூடே புகுந்து வழி ஏற்படுத்திக் கொண்டு, எந்த ஒரு பிரச்னையானாலும் நேராக அதன் இதயத்தைச் சென்றடையக் கூடிய ஆற்றல் ஆகியவை அவரைக் கால எல்லைகளைக் கடந்த ஒரு மனிதகுல குருவாக விளங்கச் செய்கின்றன. அரசியலில் ஈடுபட்டு அவர் சாதித்துள்ளவற்றைக் காட்டிலும் சமஸ்கிருதம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலுமுள்ள புராதன நூல்களுக்கு அவர் எழுதியுள்ள விமர்சனங்களும், விளக்கங்களுமே சரித்திரத்தில் அவருக்கு ஒரு முக்கிய ஸ்தானத்தை அளிக்கும்.



அரசியல் விவகாரங்கள் மங்கி மறைந்து விடக் கூடியவைதான். என்றாலும் இந்த விஷயத்தில் அவைதான் நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. இறைவனோ பூமியோ அல்லது மனிதனுடைய உழைப்போ உணவைத் தருவதாக யாரும் கருதுவதில்லை. அரசியல்தான் ஆகாரம் போடுவதாக எண்ணுகிறார்கள். எனவே அரசியல் தலைவர் என்ற முறையில், குறிப்பாக ஜவாஹர்லால்ஜியிடமிருந்தும் காங்கிரஸிலிருந்தும் பிரிந்து வந்த ராஜாஜியைப் பற்றி ஏதேனும் சொல்லித்தாக வேண்டும். இந்தச் சம்பவம் நிகழ்வதற்கு முற்பட்ட அவரது அரசியல் வாழ்க்கையை மதிப்பிடுவது எளிதான காரியம்.

அப்போது தலைசிறந்த தேசியத் தலைவர்கள் ஐவருள் ஒருவராய் அவர் விளங்கினார் என்று சொன்னாலே போதுமானது. காந்திஜிக்கு அடுத்தபடியாக இந்திய அரசியலை மிகுந்த செல்வாக்கோடு முப்பது வருஷங்களுக்கு நடத்திச் சென்ற இந்த ஐவர், சர்தார் படேல், பண்டித நேரு, ராஜாஜி, ராஜன் பாபு, மௌலானா ஆஸாத் ஆகியோராவர். காந்திஜி என்னும் சூரியனைச் சுற்றி வந்த கிரகங்கள் இந்த ஐவர்தான். இவர்களிலும் அறிஞர் என்ற முறையிலே மற்றவர்களைக் காட்டிலும் பிரகாசித்தவர் ராஜாஜியே.

அவரது பிற்கால அரசியல் வாழ்க்கைதான் சுவாரசியமானது. இதனை மதிப்பிடுவதும் கஷ்டமான காரியம். சுதந்திர இயக்கத்தின் போது அவர் ஆற்றிய பணி முக்கியமானதுதான், பெரு மதிப்புக்குரியதுதான், என்றாலும் அதே போன்ற திறமையுடன் மற்றவர்களும் சேர்ந்து செய்த மாபெரும் சேவையின் ஒரு பகுதிதான் அவருடையது. ஆனால் சுதந்திரத்துக்குப் பிறகு இந்நாட்டு அரசியலில் ராஜாஜி புரிந்துவரும் பணியை அவர் ஒருவரால்தான் செய்ய முடியும். இதை இன்னும் அநேகர் தெளிவாகத் தெரிந்துகொள்ளவில்லை.

அவரது சாதனைகளுள் முதலாவது, பயத்தை அவர் களைந்து விட்டிருப்பதுதான். அச்சம் அறப் பண்புகளை அரித்துத் தின்று விடும். பயத்தைப்போல் மனிதத் தன்மையை உருக் குலைக்கக்கூடியது வேறு எதுவும் கிடையாது. அது மனிதர்களைக் கோழைகளாகவும் முரடர்களாகவும் மாற்றுகிறது; பண்பாட்டை இழிவுபடுத்துகிறது; வாழும் மனிதனைத் தாழ்வடையச் செய்கிறது. இந்தியாவில்—பெரும் வல்லமை வாய்ந்த அந்நிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கே அஞ்சாத இந்தியாவில்—சுதந்திரம் பெற்றபின் இந்தப் பயம் வளர்ந்துவரலாயிற்று. மிகப் பெரிய மனிதர்கள் கூட அரசாங்கத்தையோ, பிரதம மந்திரியையோ, அல்லது காங்கிரஸையோ எதிர்த்து உள்ளதை உள்ளபடி பேசத் துணிவற்றவர்களாயிருந்தார்கள். இந்த நிலையில்தான் ராஜாஜி போர்க்களத்தில் புகுந்தார். தன்னலமின்மைக்கே உரித்தான வீரம் படைத்திருந்தார் அவர். எதிராளியைத் திணற அடிக்கும் வகையில்

குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டும் அபாரமான திறமையும் ஆயுதமாகத் தாங்கி அவர் அரசியலில் இறங்கியதும் நிலைமையானது ஏதோ நாடகத்தில் காண்பது போல் திடீரென மாறி விட்டிருக்கிறது. என்றாலும் காலை வாருவதும், பாசாங்குப் பேச்சும், ஏமாற்று வித்தைகளும் இன்னமும் நிறைய இருப்பது ஆண்டவனுக்குத் தெரியும். இவை எல்லாவற்றுக்கும் வலிமை மிக்கவர்களிடம் உள்ள பயம்தான் காரணம். இரண்டாவதாக ராஜாஜி, ஆளும் கட்சிக்கு எதிர்ப்பு இருக்க வேண்டியது அவசியமே என்ற உணர்வை உருவாக்கியுள்ளார். இந்த எதிர்ப்பை வெளிப்படையாகக் காணவும் முடிகிறது. மற்ற அரசியல் எதிர்க் கட்சிகளெல்லாம் தங்கள் கொள்கைகளின் வாயிலாகப் பல்வேறு அளவுகளுக்கு ஆளும் கட்சியின் சாயல்களிலேயே ஒன்றி விடுவதால் அவை ஆளும் கட்சியின் பிரதிபிம்பங்களே என்று நினைக்கும்படி இருக்கிறது. பாராளுமன்றத்தில் இரு பக்கங்களிலுமிருந்தவர்கள் கூடத் தங்கள் கொள்கைகள் மூலமாக ஒன்று கலந்து இணைந்துதான் இருந்தார்கள். ராஜாஜி அரசியலில் புகுந்து எதிர்ப்பளித்தது அந்த நிலையை மாற்றி விட்டிருக்கிறது. இப்போது நமக்குத் தெளிவான முறையில் ஆளும் கட்சியுடன் மாறுபட்ட கொள்கைகளை உடைய உண்மையான எதிர்க் கட்சி கிடைத்திருக்கிறது.

அந்தக் கட்சி 'கன்ஸர்வேடிவ்' கட்சியாக இருப்பது இயல்பே. எந்தச் சமுதாயத்திலும்- குருஷேவ், மாவோவும் இவர்களுடைய சமுதாயங்கள் உள்பட - வலது சாரி இடதுசாரிக் கட்சிகள் உண்டு. எப்போதாவது இவ்விரண்டில் ஒரு கட்சிக்கு மட்டுமே தன் கருத்துக்களை வெளியிட வாய்ப்பு கிட்டுகிறதென்றால் அந்தச் சமுதாயத்தில் ஜனநாயகம் நடைபெறவில்லை என்பதுதான் பொருள். சுதந்திரத்துக்குப் பிறகு நம் நாட்டின் நிலைமை ஏறத்தாழ இந்தமாதிரி யாகத்தான் இருந்தது. தீவிரவாதம், முற்போக்கு இந்தக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களாகத் தங்களை மக்கள் கருதவேண்டும் என்பதில் எல்லாக் கட்சிகளுமே கவனம் கொண்டன. ஆகவே ராஜாஜி, இந்தியாவின் இந்நாளைய கன்ஸெர்வேடிவ் சக்திகளின் சார்பில் பேச முன்வந்தபோது அவர்களுக்கு அவர் பேருபகாரம் செய்து விட்டார். கன்ஸர்வேடிஸம் என்றாலே ஒரேயடியாக எதிர்த்துக் காரசாரமாகப் பேசுவதில் பயன் இல்லை. கன்ஸர்வேடிஸம் என்பது குறிப்பிட்ட ஓர் அரசியல் அல்லது பொருளாதாரத் தத்துவத்தின் பெயரல்ல. அவ்வப்போதிலும் என்றும் நிலைத்திருக்கக் கூடிய சில அம்சங்கள் கன்ஸர்வேடிஸத்தில் உண்டு. எந்த விதமான திடீர் மாறுதலையும் எதிர்ப்பது, அல்லது மாறுதலுக்குரிய பிரச்னையை மிகவும் ஜாக்கிரதையாக அணுகுவது இவற்றில் ஒன்று. நிலைபெற்ற நன்னெறிக் கோட்பாடுகளை மதித்து நடப்பதால் கன்ஸர்வேடிஸத்துக்கு தார்மீக ரீதியில் ஒரு பூரணத்துவமும் உண்டு. இளைஞர்களும் அவசர புத்திக்காரர்களும் செலுத்தும் படகு மிகவும் ஆபத்தான முறையில் ஆடிக் கவிழ்ந்து விடாதிருப்பதற்காகப் படகில் வைக்கப்பட்ட பாரம்தான் கன்ஸர்வேடிவ் கொள்கை. கன்ஸர்வேடிவ்கள் இல்லாத சமுதாயம் ஒவ்வொரு நாளும் விடிந்தெழுந்ததும் இன்று நம் தலையில் என்ன எழுதியிருக்கிறதோ என்று கணிக்க முடியாத நிலையை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

சுதந்திரக் கட்சி தோன்றிய உடனேயே இதையெல்லாம் நான் சொன்னபடியாலும் இந்தக் கோணத்தில் அதை நான் வரவேற்றபடியால் நான் அந்தக் கட்சியில் சேர்ந்து விடப் போகிறேன் என்று பலர் நம்பினார்கள். ராஜாஜி நான் அப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்பினார் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் கன்ஸர்வேடிஸத்துக்கு ஜனநாயகத்தில் முக்கியமான பங்கு உண்டு என்பதையும் அதன் மதிப்பையும் நான் உணருகிறேனேயன்றி நானே ஒரு கன்ஸர்வேடிவ் அல்ல. அறிவாலும், மனத்தாலும் நான் இடதுசாரியைச் சேர்ந்தவன். அரசியல் கட்சி ஒன்றினில் நான் சேருவதாய் இருந்தால் அக்கட்சி ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட ஒரு சோஷலிஸ்ட் கட்சியாகத்தான் இருக்கும். இத்தகைய கட்சிகளோ இன்று அரசியலின் வண்ண விசித்திரங்களுக்கிடையே சிதறிக் கிடக்கின்றன. ஆனால் நான் இப்போது கட்சி அரசியலிலேயே இல்லை. இன்னும் சொல்லப் போனால் ஜனநாயகம் இயங்குவதற்குக் கட்சிகளே அவசியம் இல்லை என்று சாதிப்பவன் நான். அரசியல் - பொருளாதாரத் துறைகளில், பொது நலனை நாடும் கூட்டமைப்புகளாகச் சமுதாயத்தைச் சீர்திருத்தி அமைத்தால் கட்சி அரசியல் என்பது தேவையில்லாத ஒன்றாகி விடும். அரசாங்கம் மிகவும் சுருங்கிச் சிறுத்துவிடும். சமூகம் விஸ்தாரமான ஒரு குடும்பத்தைப் போலாகி, அரசாங்கத்தின் அலுவல்களைத் தானே ஏற்றுக் கொள்ளும். விஷயத்தை விட்டுவிட்டு வேறெங்கோ போகிறேனே!

இதை முடிப்பதற்கு முன்னால் ராஜாஜியினுடைய கன்ஸர்வேடிஸத்தின் ஓர் அம்சத்தை உங்கள் கவனத்துக்குக் கொணர விரும்புகிறேன். தனி மனிதனின் சுதந்திரத்தை நடுநாயகமாகக் கொண்டே ராஜாஜி தமது அரசியல் தத்துவத்தை உருவாக்கியிருக்கிறார். அதன் மூலம் மனித சமுதாயத்துக்கு அவர் அளப்பரிய சேவை புரிந்திருக்கிறார். ஆனால் அதே சமயத்தில் இந்தத் தனி மனிதர்கள் தங்கள் சுதந்திரத்தைக் கொடுமைப் படுத்தவும் ஏமாற்றிப் பிழைக்கவும் பயன்படுத்தினால் அது உண்மைச் சுதந்திரத்துக்கே ஆபத்து விளைவிக்கும் என்பதை வலியுறுத்தி யிருக்கிறார். ஆகவேதான் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றாகத் தர்மகர்த்தா முறையினைப் புகுத்தியிருக்கிறார். எல்லா உடைமைகளும் தன் நலத்துக்காகவே பயன்படக் கூடாது. பொது நன்மைக்குத்தான் அவை உபயோகமாக வேண்டும் என்று கூறி யிருக்கிறார் அவர். ராஜாஜியின் கன்ஸர்வேடிஸத்தைத் தனித்தன்மை கொண்டதொரு சித்தாந்தமாக மாற்றியமைப்பது அதில் அடங்கியுள்ள இந்தக் காந்தீயப் பொருளாதாரத் தத்துவமே. இந்த அம்சமே தனிப்பட்ட முறையில் என்னை அவரிடம் கவர்ந்திழுக்கிறது.




மெல்லிளம் சருமத்திற்குப் போஷாக்கு அளிக்க
மெரோலின்
சுகாதார டியோடரண்ட் டாய்லட் சோப்
பூரண சருமப் பாதுகாப்பு இப்பொழுது கைக்கு எட்டியுள்ளது. சுத்தம் செய்வது தவிர, மெரோலின் உடல் நாற்றங்களை நீக்குகிறது. சரும ஆரோக்கியத்தைப் பூர்த்தி செய்கிறது. அழகு மிளிரச் செய்கிறது. அதன் மருந்து சக்தியும் நாற்றம் போக்கும் சக்தியும் உடல் சுத்தத்துடன் ஆரோக்கியமும் அளிக்கின்றன.
MEROLIN
தயாரிப்பு
வெஜிடபிள் சோப் ஒர்க்ஸ்
கன்னிக்கோட்டை

மணிபல்லவம்

20. காளிகோட்டத்துக் கதவுகள்

நா. பார்த்தசாரதி



நள்ளிரவு நெருங்க நெருங்கப் பூம்புகாரின் பட்டினப்பாக்கத்து வீதிகளில் ஓசை ஒலிகள் சிறிது சிறிதாய் அடங்கி மௌனம் கவிந்து கொண்டிருந்தது. தொலைவில் எங்கோ ஒரு கூத்தரங்கத்தில் பதினாறு மாத்திரைக் கால அளவு ஒலிக்கும் மிகப் பெரிய பார்வதிலோசனம் என்ற தாளத்தை யாரோ ஆர்வம் மிக்க கலைஞன் ஒருவன் வாசித்துக்கொண்டிருந்தான். ஆளரவமற்று வெறிச்சோடிக் கிடந்த அகலமான தெருக்களில் ஏதோ பயங்கரமான காரியத்துக்குச் சங்கேதம் போல இந்தத் தாளத்தின் ஓசை எதிரொலித்து அதிர்ந்து கொண்டிருந்தது. 'திடுதிம்' 'திடுதிம்' என்று குடமுழாவில் இந்தத் தாளம் வாசிக்கப்படும் ஒலியைக் கேட்டபடியே இதற்கேற்ப வேகமாகப் பாதம் பெயர்த்து நடந்து பெருமாளிகைக்குச் சென்று கொண்டிருப்பது போல் தனிமையான வீதியில் அருவாளனும் அவனுடைய கூட்டாளியும் மிக விரைந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

'நள்ளிரவுக்கு இரண்டு நாழிகை இருக்கும் போதே வந்து விடுகிறேன்' என்று பெருநிதிச் செல்வருக்குக் கொடுத்து விட்டு வந்திருந்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகத் தன் மனம் அப்போது நினைத்துக் கொண்டு தவிக்கிற வேகத்துக்கு ஏற்பக் கால்களால் நடக்க முடியவில்லையே என்ற பரபரப்போடு போய்க் கொண்டிருந்தான் நாகர் குலத்து அருவாள மறவன்.

'பிறரைப் பயமுறுத்துவதற்காகவும், கொலை செய்வதற்காகவும் நான் எத்தனையோ முறை

கருவியாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறேன். ஆனால் இன்று மாலை என்னைக் கூப்பிட்டனுப்பி என்னிடம் பெருநிதிச் செல்வர் வேண்டிக்கொண்ட காரியமோ என்னையே பயமுறுத்தி விட்டதே!' என்று அப்போது அருவாள மறவனுடைய மனம் எண்ணியது. கொடுமைக்கு எல்லாம் பெரிய கொடுமையாகிச் சூழ்ச்சிக்கு எல்லாம் பெரிய சூழ்ச்சியாகித் தங்களைப் போன்றவர்களுக்கு வழிகாட்டும் மாபெரும் கொடிய சக்தியாயிருந்த நகைவேழம்பரையே கொன்று தீர்த்துவிடச் சொல்லித் தன்னை அவர் தூண்டுவதை எண்ணிய போதே அருவாளனுக்கு உடம்பு சிலிர்த்தது. வாழ்க்கையில் எதற்காகவும் பயப்படுகிற நிலை அருவாளனுக்கு இன்று வரை ஏற்பட்டதில்லை. இவ்வளவு பெரிய பூம்புகார் நகரத்தில் இரண்டே இரண்டு பேர்தான் அவனுக்கு வியப்பையும், மலைப்பையும் உண்டாக்கியிருக்கிறார்கள். அந்த இருவரில் ஒருவரை அவன் இன்று இரவு தன் கையாலேயே கொல்லப் போகிறான். இந்தக் கொலையைச் செய்வதன்மூலமே மற்றொருவருக்கு நன்றி செலுத்தப் போகிறான். கடைசியில் இந்த நகரில் இனிமேல் அவனுடைய மலைப்புக்குரியவராக ஒரே ஒருவர்தான் மீதமிருக்கப் போகிறார். அந்த ஒருவர் யாரோ அவருக்கு இனி அவன் ஆட்பட்டுத்தான் ஆகவேண்டும். ஏனென்றால் நீண்ட நாட்களாக அவன் அவருக்குச் செஞ்சோற்றுக் கடன்பட்டிருக்கிறான். சோற்றுக் கடனும் நன்றிக் கடனும் படுவது பொருட்கடன் படுவதை விட வேதனையானது என்று இந்த விநாடியில் தான் செய்வதற்குப் போய்க் கொண்டிருந்த காரியத்தினால் நன்றாக உணர்ந்திருந்தான் அருவாளன். இந்த அருவருப்பும், உணர்ச்சியும் அவன் மனத்தினுள் ஏற்பட்ட கணத்தில் தொலைவாக எங்கோ ஒலித்துக் கொண்டிருந்த பார்வதிலோசனம் என்ற தாளம் குபீரென்று முன்பு ஒலித்ததை விடக்கடுமையாகிப் பெரிதாய் அதிர்ந்து பூம்புகார் நகரத்தையே கிடுகிடுக்கச் செய்வது போலப் பிரமையை உண்டாக்கிற்று. அருவாளனால் அந்த நேரத்தில் கேட்டுப் பொறுத்துக்கொள்ள முடியாத கொடுமையான ஒலியாயிருந்தது அது.

அந்த இராப் போதில் அருவாளனும் அவனுடைய கூட்டாளியும் பெருமாளிகையை நெருங்கியபோது அது நிசப்தமாயிருந்தது. அன்று மாலையில் அருவாளனை அழைத்துப் போவதற்காக வந்திருந்த அதே காவலன் பெருமாளிகை வாயிலில் இவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அருவாளனையும் அவனோடு வந்தவனையும் தன்னைப் பின்தொடர்ந்து வருமாறு சைகைகள் செய்து அழைத்துக் கொண்டு போய் ஓசையற்று இருண்ட மாளிகையின் முன் கூடங்களைக் கடந்து பெருநிதிச் செல்வருடைய அந்தரங்கமான பகுதியில் கொண்டு சேர்த்தான் அந்தக் காவலன்.

பெரிய விளைவை எதிர்பார்த்துக் காத்திருக்கிற பரந்த மௌனம்தான் அங்கு நிலவியது. அருவாளன் தன்னோடு உடன் வந்திருந்த நாகனை வெளியே இருக்கச் செய்து விட்டுப் பெருநிதிச் செல்வரும் அருவாளனும் தனியே சிறிது நேரம் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள். சிறிது நாழிகைக்குப் பின்பு முன்னேற்பாடாகத் திட்டமிட்ட கொலை எண்ணத்தோடு நகைவேழம்பர் அடைக்கப்பட்டிருந்த நிலவறைக்குள் அவர்கள் மூவரும் இருண்ட நிழல்களை இருளில் படியிறங்கிச் செல்வது போலச் சென்ற போது அந்தக் காரியத்தைப் பார்க்க இரவுக்கே வெட்கமாக இருந்ததோ, என்னவோ? எங்கும் அடர்ந்து செறிந்து கொண்டு இருளே நாணத்தோடு இந்தச் செயலைக் கூர்ந்து கவனிப்பது போலிருந்தது அது.

அருவாளனும், பெருநிதிச் செல்வரும் தத்தம் கைகளில் உருவிய வாளுடனும், உள்ளே அடைபட்டுக் கிடக்கிறவனுடைய வரம்பில்லாத எதிர்ப்பை எந்தக் கணமும் தங்களுக்கு மிக அண்மையில் எதிர்பார்க்கிற கவனத்துடனும் நிலவறையில் இறங்கிய பின் மூன்றாமவன் அவர்கள் செய்யப் போகிற காரியத்துக்கு ஒளி தருவதற்காகத் தன்னிடம் அவர்களே சொல்லி ஏற்பாடு செய்திருந்தபடி நிலவறைக்காகக் கீழே இறங்கும் வழியில் மூன்றாவது படியிலோ, நான்காவது படியிலோ நின்று கொண்டு தீப்பந்தத்தைக் காண்பித்தான்.

ஆனால் அந்தத் தீப்பந்தத்தின் ஒளி நிலவறைப் படிகளுக்குக் கீழே பரவிக் கண்களுக்குப் புலப்பட வைத்த காட்சியைப் பார்த்த பின்புதான் அருவாளனுக்கும், பெருநிதிச் செல்வருக்கும் அப்போது தாங்கள் செய்யவேண்டிய காரியத்துக்காக எடுத்துக் கொண்ட கவனமும், அடைந்திருந்த பரபரப்பும் அநாவசியமானவை என்று புரிந்தது. அந்தச் சமயத்தில் அவ்வளவு மிகையான முயற்சி செய்து தாங்க வேண்டிய எதிர்ப்பையோ, தாக்குதலையோ, — அங்கிருக்கும் எதிரியிடமிருந்து பெற வழியில்லை என்று அந்த எதிரி கிடந்த சூழ்நிலையிலிருந்தே தெரிந்து கொள்ள முடிந்தது. பெருநிதிச் செல்வர் அருவாளனின் காதருகே மெல்லச் சொன்னார்:-

''இந்த ஒற்றைக் கண்ணனை எதிலும் முழுமையாக நம்பி விடுவதற்கு இல்லை. நீயும் நானும் அருகில் வருகிற வரை இப்படிச் சோர்ந்து சுருண்டு விழுந்து கிடப்பது போலப் பொய்யாகக் கிடந்து விட்டு நாமிருவரும் பக்கத்தில் நெருங்கியதும் திடீரென்று எழுந்திருந்து பாய்ந்தாலும் பாய்வான்! உலகத்தில் உள்ள தீமைகள் எல்லாம் இவன் நினைவிலிருந்து தான் தொடங்க முடியும் என்பதை நீ மறந்து விடாதே, அருளாளா!''

அப்போது அவருடைய இந்தச் சொற்களைக் கேட்டுவிட்டு, 'யாரைத் தான் இந்த உலகில் நம்ப முடிகிறது?' என்று தன் மனத்துக்குள்ளேயே நினைத்துச் சிரித்துக் கொண்டான் அருளாளன்.

''இவர் விழுந்து கிடக்கிற நிலையைப் பார்த்தால் எனக்கு அப்படித் தோன்றவில்லை ஐயா! அடிபட்டு விழுந்திருப்பது போல் தான் தெரிகிறது. அதோ பாருங்கள்; குருதி கசியும் காயங்கள் தெரிகின்றன. தரையிலும் குருதி வடிந்திருக்கிறது. நீங்கள் கூறிய விவரங்களிலிருந்து கடலில் கற்பூர மரக்கலம் தீப்பற்றியதால் நீந்திக் கடந்து வந்தது தொடங்கி இவர் இந்த விநாடி வரை பட்டினி கிடக்கிறார் என்றும் தெரிகிறது. ஆகவே பொய்யாக நடித்து ஏமாற்ற வேண்டிய அவசியம் இப்போது இவருக்கு இல்லை. உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால் நீங்கள் விலகி நிற்கலாம். இவரை நான் கவனிக்கிறேன்'' என்று பெருநிதிச் செல்வரிடம் கூறி விட்டுக் கீழே குனிந்து நோக்கினான் அருளாளன். பெருநிதிச் செல்வர் விலகியே நின்றார். அருளாளன் பார்த்ததில் நகைவேழம்பர் பிரக்ஞையின்றித் துவண்டு கிடந்தார். உடலின் பல பகுதிகளில் ஆழமான காயங்களும், ஊமை அடிகளும் பட்டிருந்தன. முழங்கால் மூட்டில் இரத்தம் பெருகி வடிந்து தணிந்திருப்பதைப் பார்த்துப் புரிந்து கொண்டான் அருளாளன்

நகைவேழம்பருடைய முழங்காலில் அந்த இடத்தை அருளாளன் தொட்ட போது கிணற்றுக்குள்ளிருந்து மரண வேதனையோடு பேசுகிறது போன்ற தணிந்த குரலில் வலியோடு அவர் முனகினார். 'மூச்சு இன்னும் இருக்கிறது' என்பதைத் தவிர அதிகமான பலம் எதுவும் அந்த உடம்பில் அப்போது இருந்ததாகத் தெரியவில்லை. கற்பூரத் தீயினால் காந்திப் போய்க் கருகி, எரிந்த புண்களும் அங்கங்கே அந்த உடலிலே தெரிந்தன. மூடி அவிந்து போகாமல் பார்ப்பதற்கு மீதமிருந்த ஒரே ஒரு கண்ணும் கூடத் தளர்ந்து குழிந்து வாடிச் சொருகி இமையின் கீழ் இடுங்கியிருந்தது. புண்ணைப் பார்ப்பது போல் விகாரமாகத் தோன்றிய அந்தப் பூத உடம்பின் அருகேயிருந்து விலகி மெல்ல எழுந்து நின்று கொண்டு இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத ஏதோ ஒரு மாற்றம் தன்னுடைய குரலில் ஒலிப்பதைத்தானே தவிர்த்துக் கொள்ளவோ, மாற்றிக்கொள்ளவோ, முடியாமல் பெருநிதிச்செல்வரிடம் பேசினான் அருளாளன்.

''எந்த உயிரை இந்த உடம்பிலிருந்து நீக்கி விட வேண்டும் என்று இவ்வளவு முன்னேற்பாடும், திட்டமும் செய்தீர்களோ அந்த உயிருக்குரியவர் இப்போதே முக்கால்வாசி இறந்து போய் விட்டார் போலத் தோன்றுகிறதே ஐயா...!''

அருளாளன் கூறிய இந்தச் சொற்களைக் கேட்டு இவற்றுக்காகப் பெரிதும் மகிழ வேண்டும் போல ஆசையாயிருந்தும் கூட அருளாளனுக்குத் தெரியும்படி இந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது நல்லதல்ல என்று தந்திரமாக மாற்றிக் கொண்டார் அவர்.

'அப்படி முடிந்த முடிவாகச் சொல்லி விடாதே அருளாளா! இப்படிப்பட்ட மனிதர்களுக்குச் சாவதற்கு விநாடி நேரம் இருக்கும் போது கூட ஆவேசம் வருவதுண்டு.''

''முக்கால்வாசி தனக்குத் தானே செத்து போய் விட்ட உயிரை மேலும் வலிந்து கொல்ல வேண்டுமென்று கருதி வாளெடுப்பது வீரமுள்ளவர்களுக்குத் தகுமா என்றுதான் நான் தயங்குகிறேன், ஐயா!'' என்று கூறிவிட்டுப் பதிலை எதிர்பார்த்துத் தன் முகத்தை நோக்கிய அருளாளனைத் தனது பார்வையாலேயே அளந்தார் பெருநிதிச் செல்வர். அவருடைய சந்தேகத்தைப் புரிந்து கொண்ட அருளாளநாகன் அதை மாற்றி விட வேண்டும் என்ற தீர்மானத்தோடு மேலே படியில் தீப்பந்தத்துடனே நின்ற தன் தோழனை இன்னும் கீழிறங்கி மிக அருகே வந்து விடுமாறு கையை ஆட்டி அழைத்தான்.

'சந்தேகமும் அவநம்பிக்கையும் இரட்டைப் பிறவிகள். இரண்டும் மனத்தின் பலவீனத்திலிருந்து தான் பிறக்கின்றன' — என்று எதிரேயிருந்த பெருநிதிச் செல்வருடைய முகத்தில் காணும் உணர்வுகளைக் கொண்டு நினைத்தான் அருளாளன்.

எதிர்த்துப் போரிடவோ, பாய்ந்து தாக்கவோ, நகைவேழம்பருடைய உடலில் அப்போது சிறிதளவு கூடத் தென்பில்லை என்பதை அருளாளநாகன் அவருக்கு நிதரிசனமாக நிரூபித்த பின்புதான் அவனை நோக்கி வேறு ஒரு கட்டளையிட்டார் அவர்.

''அருளாளா இது இந்த மாளிகையின் நிதியறை! இவரைப் போல் மிகக் கொடிய ஒருவர் 'இங்குதான் இறந்து

போனார்' என்ற கெட்ட நினைவோடு இந்த இடத்துக்குள் நுழையும் போதெல்லாம் எனக்கோ, என்னுடைய இந்தச் செல்வத்தை ஆளப் போகும் வழிமுறையினருக்கோ சிறிதும் பயமோ அமங்கலமான எண்ணமோ ஏற்படக் கூடாது. நீயும், உன் கூட்டாளியும் பாவப் புண்கள் நிறைந்த இந்த உடம்பை இங்கிருந்து கடத்திக் கொண்டு போய்ச் சக்கரவாளத்தைச் சுற்றியிருக்கும் காடுகளில் எங்காவது போட்டு விட்டால் நல்லது. ஆனால் அப்படிப் போட்டு விட்டு உடனே திரும்பி வந்துவிடாதே. இந்த மனிதரின் உடம்பில் இருந்து உயிர் பிரிந்து நீங்கிவிட்டது என்று முடிவாய் அறிந்துகொண்டு வந்து நீ எனக்குத் தெரிவித்த பின்புதான் என் மனத்தின் எல்லையிலிருந்து கவலைகள் பிரிந்து நீங்கும். விடிகிறவரை எவ்வளவு நேரமானாலும் நீ வந்து சொல்லப் போகிற செய்திக்காகக் காத்துக் கொண்டிருப்பேன் நான்......''

இதைக் கேட்ட பின்பு தன் மனம் எந்த உணர்வுகளையும் சிந்திக்க முடியாதபடி தான் அவருக்குப் பட்டிருந்த சோற்றுக் கடனைத் தீர்ப்பதற்கு முற்படுவது போல் எந்திரமாக மாறினான் அருவாளன். அவர் சொல்லியதைச் செயற்படுத்துகிறவனாகித் தன் வலிமையை எல்லாம் பயன்படுத்தி நகைவேழம்பருடைய உடம்பைத் தூக்கித் தோளில் சார்த்திக் கொண்டான். தீப்பந்தத்தை அங்கேயே வைத்து விட்டுத் தன்னோடு பின் தொடருமாறு தன் கூட்டாளியிடம் கூறிவிட்டுப் படிகளில் ஏறினான் அருவாளன். திண்மை வாய்ந்த அவனுடைய தோள்களின் பலம் நகைவேழம்பருடைய உடம்பாகிய சுமையைத் தாங்குவதனால் குறையவில்லை. அந்தச் சமயத்தில் தன் மனம் சுமந்து கொண்டிருந்த நினைவுகளின் சுமைதான் பலத்தைக் குறைக்கும் பெருந் துன்பமாயிருந்தது அருவாளனுக்கு.

நகைவேழம்பரைச் சுமந்து கொண்டு அருவாளனும் அவனுடன் வந்தவனும் பெருமாளிகையிலிருந்து வெளியேறுமுன், ''அருவாளா! நினைவு வைத்துக் கொள். நாளைக்குப் பூம்புகாரில் கதிரவன் உதிக்கும் போது இந்த ஒரு கண்ணுக்குப் பார்க்கும் ஆற்றல் இருக்கக் கூடாது'' என்று தம் கையிலிருந்த ஊன்றுகோல் நுனியினாலேயே அலட்சியமாக அவன் தோளில் சுமையாகியிருந்த நகைவேழம்பரின் உடம்பைச் சுட்டிக் காட்டினார் பெருநிதிச் செல்வர்.

''செய்கிறேன், ஐயா! நாளைக்கு உங்களுக்கும் எனக்கும் பொழுது விடியும். இவருக்கு மட்டும் விடியவே விடியாது. அவ்வளவு செய்தால் போதும் அல்லவா?'' என்று ஒரு முறை திரும்பி அவரிடம் கேட்டு விட்டு மேலே நடந்தான் அருவாளன். அதன் பின் அவன் அங்கிருந்து நடந்த வேகத்தை நடையா, ஓட்டமா என்று பிரித்துச் சொல்ல முடியாது.

நான்கு நாழிகைக்குப் பின் சக்கரவாளக் கோட்டத்துக் காட்டின் உள்ளே பாழடைந்த காளி கோட்டம் ஒன்றில் போய்த் தான் தன்னுடைய தோள் சுமையை அவனால் இறக்குவதற்கு முடிந்தது. நரிகள் குறுக்கும் நெடுக்கும் பாய்ந்தோடும் அடர்த்தியான புதர்கள் சூழ்ந்த அந்தக் காளி கோட்டத்தின் முன்புறத்தில் தான் சுமந்து வந்த உடலைக் கிடத்தி விட்டு, 'முடிந்து போய்க் கொண்டிருக்கிற இந்த உயிரை நாமே இன்னும் விரைவில் முடித்து விட்டு அறிவிக்க வேண்டியவரிடம் போய் அறிவித்து விடலாமா? அல்லது தானே முடிகிறவரை இதைக் கவனித்துக் கொண்டிருந்து விட்டுப் போகலாமா?' என்று தயங்கிய போது வேறு ஒரு புதிய யோசனையும் அவனுக்கு உண்டாயிற்று.

'இவரோ இன்று நிச்சயமாகச் சாகப் போகிறார். அதற்கு முன்னால் இவரைக் கொஞ்சம் வாழச் செய்து பார்த்தால் என்ன? அப்படிச் செய்தால் சாவதற்கு முந்திய இவரது எண்ணங்களையாவது நான் அறிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுமே?' என்று நினைத்தான் அருவாளநாகன். தான் நினைத்ததைச் செயற்படுத்துவதற்கு அந்த இடத்துச் சூழ்நிலை ஏற்றதுதானா என்று அறிந்துகொள்ள முயல்வது போலச் சுற்றும் முற்றும் பார்த்தான் அவன்.

'நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள்! எனக்கு என்ன வந்தது?' என்று அவனுக்குத் தன் மொழியில் எடுத்தெறிந்து பதில் சொல்வதைப் போலக் காளி கோட்டத்துத் திரிசூலத்தின் நுனியில் உட்கார்ந்திருந்த கோட்டான் ஒன்று நாலைந்து முறை தொடர்பாகக் கத்தி விட்டு விருட்டென்று எழும்பிப் பறந்து சென்றது. மனிதத் தலைபோல் தலையும் பருந்து உடலும் கொண்டு மயானங்களில் திரியும் ஆண்டலை எனப்படும் கொடிய பறவைகள் நாலைந்து காளி கோட்டத்து இடி சுவரில் இருந்தன. பிரம்மாண்டமான மண் பிரதிமை ஒன்று கோட்டத்துக்குள் நுழைகிற இடத்தின் வலதுபக்கமாகத் தன் குழித்த கண்களை உருட்டி விழித்தபடி யிருந்தது. வேறு எந்த அந்நிய மனிதர்களின் அரவமும் அப்போது அங்கே இல்லை.

''தம்பி! காளி கோட்டத்தின் உட்பக்கம் யாராவது இருக்கிறார்களா என்று போய்ப் பார்த்து வா'' என உடனிருந்த

தோழனை ஏவி னான் அருவா ளன். அவன் போய்ப் பார்த்து விட்டு வந்து உள்ளே காளி சிலையைத் தவிர வேறு ஒன்று மில்லை என்பதாகச் சொன்னான்.

அப்போது கீழே கிடத்தியிருந்த நகைவேழம்பரின் உடல் மெல்ல அசைந்தது. ஈன சுவரத்தில் அவர் ஏதோ முனகுவதும் கேட்டது. அவரருகே சென்று மண்டியிட்டு அமர்ந்து கொண்ட அருவாளன், ''தம்பி! இப்போது இவருக்குச் சற்றே சக்தியூட்டிச் சிறிது நேரம் இவரைப் பேசச் செய்தால் ஏதாவது பயனுள்ள செய்திகள் இவரிடமிருந்து நமக்குத் தெரியலாமென்று நான் எண்ணுகிறேன். நீ போய்ப் பக்கத்தில் எங்காவது தண்ணீர் இருந்தால் கொண்டு வா. தண்ணீர் மட்டும் போதாது. இதோ இந்தத் திரிசூலத்துக்கு மேலே உள்ள நெல்லி மரக்கிளையில் அம்மானைக் காய்களைப் போல் முற்றிக் கனிந்த பெரிய பெரிய நெல்லிக் கனிகள் சரம் சரமாய்த் தொங்குகின்றன. இவற்றில் நாலு கனிகளைப் பறித்துக் கல்லில் தட்டி நீரில் கலந்து அந்தச் சாற்றை இவருடைய வாயில் ஊற்றிப் பார்க்கலாம். இந்த இடத்தில் இதை விட அதிகமாகச் சத்துள்ள உணவு எதையும் இப்போது நாம் இவருக்குத் தருவதற்கு வழியில்லை'' என்று அங்கே அருகில் தன்னுடன் இருந்தவனை ஏவினான். 'பெருநிதிச் செல்வருக்கும் நகைவேழம்பருக்கும் என்ன காரணத்தினால் இத்தனை பெரிய முறிவு ஏற்பட்டது? இவரைக் கொன்று தீர்த்து விட்டுத் தாம் மட்டும் தனியே நிமிர்ந்து நிற்க வேண்டுமென்று ஆசைப்படும் அளவுக்கு அவர் இவர்மேல் வைரம் கொண்டது ஏன்?' என்பனபோல் தன் மனத்தினுள் விடை பெறாத மலட்டு வினாக்களாய் நிற்கும் பல சந்தேகங்களைச் செத்துப் போவதற்கு இருக்கும் இந்த ஒற்றைக் கண் மனிதர் உயிருடனிருக்கும் போதே இவரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்டு விடவேண்டு மென்று அந்தரங்கமாக உண்டான தைப்பாசையை அருவாளனால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

'கொடுமையின் இலக்கணமாக விளங்கிய இந்த ஒற்றைக் கண் மனிதருக்கும் இப்படி ஒரு பரிதாபகரமான சாவா?' என்று எண்ணும்போதே இதன் இரகசியத்தை அறிந்துகொண்டு விட வேண்டும் என்ற ஆவல் அவனுடைய மனத்தில் உந்தியது.

நகைவேழம்பரது முகத்தில் தண்ணீர் தெளித்தும், வாயில் இனிய நெல்லிக்கனிச் சாற்றோடு கலந்த நீரை ஊற்றியும் அந்த முகத்திலிருந்த ஒற்றைக் கண் விழித்துக் கொண்டு தன்னைக் காணச் செய்வதற்காக அருவாளன் செய்த முயற்சிகள் வீண் போக வில்லை. அவர் கண் திறந்தார். மெல்ல மெல்ல வாய் திறந்து பேசவும் செய்தார். தன் எதிரே நிற்கிற கொலை மறவர்கள், தான் அப்போது கிடத்தப்பட்டிருந்த இடம், தன் நிலை, எல்லாவற்றையும் பார்த்துக் கேள்வி கேட்டு ஒவ்வொன்றாகத் தெரிந்துகொள்ளாமல், தனக்குத் தானாகவே புரிந்து கொண்டு ஒரு நிதானத்துக்கு வந்த பின் கிடத்தப்பட்ட இடத்தில் இருந்தே தலையை மட்டும் மெல்ல நிமிர்த்தி,—

''நீ அலைவாய்க்கரை யவனப்பாடியைச் சேர்ந்த நாகர் குலத்து அருவாள



மறவன் அல்லவா?'' என்று அவனை நோக்கி அவன் பெயரோ, ஞாபகமோ சிறிதும் குன்றாமல் தம் குரல் மட்டும் குன்றிப் போய்க் கேட்டார் அவர். 'ஆமாம்' என்பதற்கு அறிகுறியாக அவரை நோக்கித் தலையாட்டினான் அருளாளன். அடுத்தகணம் அவனை நோக்கி வேகமாக அவரே மேலும் சொல்லலானார்:

''நான் இப்போது எந்த நிலையில் இங்கே கொண்டு வந்து எதற்காகக் கிடத்தப்பட்டிருக்கிறேன் என்பதைப் பற்றி நீ எனக்கு விளக்கிச் சொல்லுவதற்கு ஆசைப்படாதே, அப்பனே! அதற்கு அவசியமே இல்லை. சொல்லாமல் எனக்கே எல்லாம் புரிகிறது. இந்த ஒரே ஒரு கண்ணுக்கு உலகத்தைப்



பார்க்கும் ஒளி எந்தக் கடைசி விநாடி வரை இருக்கிறதோ, அது வரை எல்லாமே புரியும். கண்ணெதிரே பார்ப்பவற்றில் எல்லாம் ஒருவன் தன்னுடைய சாவைமட்டுமே காண்பது போல் தவிக்கின்ற தவிப்புத்தான் மரண வேதனையாக இருக்குமானால் அதையே இப்போது நான் அடைந்து கொண்டிருக்கிறேன் என்று நீ புரிந்து கொள்ளலாம். இந்த வேதனையை மீறிக் கொண்டெழுந்து நிற்க இப்போது எனக்கு வலிமை இல்லை. காலிலும் எலும்பு முறிந்திருக்கிறது. என்னுடைய இயல்பைப் பற்றி உனக்கும் நன்றாகத் தெரியும். தெரியாதவற்றைக் கேள்விப்பட்டும் இருப்பாய். என்னைப் போன்ற ஒருவனுக்கு இந்த நிலை ஏன் ஏற்பட்டதென்பதை தெரிந்து கொள்ள நீ ஆசைப்படலாம். அப்படி ஆசைப்படுவது மனித இயற்கைதான். நானே என்றும் என்னை மனிதனாகவே நினைத்துக் கொண்டதில்லை. என்னை ஒரு பெரிய அரக்கனாகப் பாவித்துக் கொண்டு அந்தப் பாவனையிலேயே நான் பல முறை பெருமைப்பட்டிருக்கிறேன். கடைசியாக இப்போதும் எனக்கு அந்தப் பெருமை இருப்பதைத்தான் நான் உணர்கிறேன். பல பேரைத் துடிக்கத் துடிக்கக் கொன்று பழகிய எனக்கு நான் சாக வேண்டும் என்றும் செத்துப் போய்க்கொண்டிருக்கிறேன் என்றும் உணர்வது கூடப் பெரிதாக எதையும் இழக்கப் போவது போல் ஒரு மலைப்புக்குரிய விஷயமாகத் தோன்றவில்லை. சாகவேண்டியதுதான். ஆனால் இப்படி நான் வஞ்சகமாக ஏமாற்றப்பட்டுச் செத்துப்போக வேண்டாம் போல என்னுள் நானே வளர்த்துக் கொண்டிருக்கிற அரக்கத் தன்மை எனக்கு நினைவூட்டுகிறது. பல பேரை நான் கொன்றபோது கூட இப்படி வஞ்சகமாக ஏமாற்றித்தான் கொன்றிருக்கிறேன். என்றாலும் நானே இப்படிச் சாக வேண்டிய அவசியம் எனக்கு வந்திருக்கக் கூடாதுதான். நான் பிறருக்குத் தீமைகள் புரிவதற்காகக் கடைப்பிடித்த வழிகளை என்னைத் தவிரப் பிறர் புரிந்து கொண்டு என்னிடமே செயற்படக் கூடாது என்று நினைக்கிற பேராசைக்காரனாகவே இதுவரை வளர்ந்து விட்டேன் நான். இன்னும் சிறிது காலம் வாழவேண்டும் என்று எனக்கு ஆசை இருந்தது. காரணம் என்ன தெரியுமா? நான் அப்படி வாழ்ந்தால் இப்போது இப்படி நான் சாவதற்கு ஏற்பாடு செய்தவரை வாழ விடாமல் நமனுலகுக்கு அனுப்பியிருப்பேன். அதுவும் முடியாமல் போய் விட்டது. முடியவில்லையே என்பதற்காகவும் நான் வருத்தப்படக் கூடாது. இன்னும் வாழ்வதற்கு முடியவில்லையே என்பதற்காகவே வருத்தப்படாமல் மிகவும் தைரியமாகச் சாக வேண்டும் என்று தான் நான் நினைக்கிறேன். ஆனால் என் நினைப்பில் இப்போது ஏதோ ஒன்று குறைகிறது. அப்பனே! 'நான் அரக்கனாகவே என்னை இதுவரை பாவித்துக் கொண்டிருந்தது தவறு; நானும் ஏதோ ஒரு வகையில் 'வெறும் மனிதன்தான்' என்று பொல்லாத குறும்புக் குரல் ஒன்று என் மனத்திலிருந்து இந்தச் சாவு வேளையிலே எனக்குக் கேட்டுக் கொண்டேயிருக்கிறது!

இதோ இந்தக் காளிகோட்டத்தின் பாழடைந்த கதவுகளைப் பார்! எவ்வளவு பழமையடைந்து விட்டன இவை? சாகும் போது நானும் இப்படித்தான் ஆகி விட்டேன். என்னால் எவற்றையும் மூடி மறைக்க முடியவில்லை. என் மனத்தில் இறுகிப் போயிருந்த பல எண்ணங்கள் இப்போது உடைகின்றன.... என்னால் எதையும் பாதுகாக்க முடியவில்லை. இந்தப் பழைய கதவுகளைப் போலவே எதையும் மறைத்துக் காக்க முடியாமல் நான் உடைந்திருக்கிறேன்.''

தொடர்ந்து பேசிக் கொண்டே வந்தவர் பேச்சை நிறுத்திவிட்டு அருவாள மறவனையும் அவனுடைய தோழனையும் உற்றுப் பார்க்கலானார்.

சில கணங்கள் மூன்று பேர்களுடைய கண் பார்வையும் ஒன்றிலொன்று இணைந்து பிரியாமல் இலயித்திருந்தது. காற்றின் ஓசை மட்டும்தான் அப்போது அப்பகுதியில் கேட்டது.

மறுபடியும் அவரே பேசத் தொடங்கினார் :

''தெரிந்தோ தெரியாமலோ இப்போது இந்தக் காளி கோவிலில் நீ என்னைக் கிடத்தியிருக்கும் இடம் நான் சாவதற்கு மிகவும் பொருத்தமானதுதான்! சந்தேகமாயிருந்தால் நீயே மறுபடி பார்! இப்போது நான் சாய்ந்து கொண்டிருக்கிற இடம் இந்தக் கோவிலின் பலிபீடம்.

இதில் ஒருகாலத்தில் நிறைய இரத்தக் கறை படிந்திருக்கும். மறுபடி இன்றும் படியப் போகிறது. அப்படிப் படியப் போகிற இரத்தம் என்னுடைய பாவ இரத்தமாக இருக்கும்.

என்னைப் பலி கொடுத்துவிட வேண்டியதுதான். ஆனால் பலி வாங்கிக் கொள்ள வேண்டியவள் மட்டும் ஏனோ இங்கு வரவில்லை. இந்தக் காளிகோட்டத்துப் புதரைச் சுற்றிலும் இப்போது ஊளையிடுகின்ற சுடுகாட்டு நரிகள் எல்லாம் என்னுடைய இரத்தத்துக்காகவும் இறைச்சிக்காகவுமே ஊளையிட்டுக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்து பார்க்க ஆசையாயிருக்கிறது எனக்கு. இந்தக் கற்பனையை எண்ணுவதில் எனக்குப் பயமே இல்லை.''

21. கால ஓட்டத்தின் சிதைவுகள்

சோர்ந்து தளர்ந்து சாகக் கிடக்கிற அந்தக் கோலத்திலும்கூட அவருடைய காட்டாற்றுப் பேச்சில் குறுக்கிட்டு நடுவே பேசுவதற்குப் பயமாக இருந்தது அருவாளனுக்கு. அவருடைய தோற்றத்தில் ஏதோ ஓர் அச்சத்துக்கு இப்படிப் பயமுறுத்துகிற ஆற்றல் இருப்பதாக அவன் உணர்ந்தான். 'விடிவதற்குள் இவரைத் தீர்த்துவிடாமல் திரும்பினால் பெருநிதிச் செல்வர் என்னைத் தீர்த்து விடுவாரே' என்ற நினைப்பு வேறு இடையிடையே தோன்றி அருவாளனுக்குத் தன் நிலையை உணர்த்திக் கொண்டிருந்தது. 'உடனே தான் என்ன செய்ய வேண்டும்?' என்று நினைக்கவும் அவனால் முடியவில்லை. அவரோ அந்தப் பழைய பலி பீடத்தில் சாய்ந்து கொண்டு உயிரைக் கொடுப்பதற்கு முன்னால் உணர்ச்சிகளை வாரி வாரிக் கொடுத்துக் குமுறிக் கொண்டிருந்தார். பேச்சுக் குறையவுமில்லை. நிற்கவுமில்லை. தொடர்ந்தது.

"அருவாளா! என்னுடைய நினைவுகளையெல்லாம் காலம் தேய்த்துச் சிதைத்து விட்டது. நானே கால ஓட்டத்தில் சிதைந்து போய் விட்டேன். இந்தப் பட்டினப்பாக்கத்தில் எட்டிப் பட்டமும், ஏனாதிப் பட்டமும் பெற்று வாழும் பெரிய பெரிய செல்வர்களுக்கு நீயும், நானும், நம்மைப் போன்றவர்களும் வெறும் கதவுகளைப்போலத்தான் பயன்படுகிறோம். கதவுகளால் எவை எவை மறைக்கப்பட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவற்றை மறைக்க ஆற்றலின்றிக் கதவுகள் சிதைந்து போனால் பழைய கதவுகளைக் கழற்றி எறிந்து விட்டுப் புதிய கதவுகளை மாற்ற வேண்டியதுதானே? பெருநிதிச் செல்வருடைய எல்லா இரகசியங்களுக்கும் நான் பயமான கதவாயிருந்த காலத்தில் அவர் என்னை நன்றாகப் பேணினார்! எதைஎதை நான் மறைத்துப் பாதுகாத்தேனோ அவற்றை நானே வெளிப்படுத்தி விடுவேனோ என்று அவர் நம்பிக்கை இழந்த காலத்தில் நான் இப்படி அழிக்கப்பட்டு விட்டேன். பிறருக்குப் பயன்பட்டு அழிகிற எல்லாரும் கடைசியில் இப்படிக் கதவுகளைப் போலத்தான் ஆகிறார்கள். போகட்டும். உடைந்த கதவினால் பயனும் பாதுகாப்பும் இருக்க முடியாதுதான். உன்னிடமிருந்து எனக்குச் சில செய்திகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

நான் மிக உயர்ந்த இடத்திலிருந்து உருண்டு விழுந்து விட்டேன் அருவாளா! அந்தப் பெருமாளிகையின் நிலவறையிலேயே நான் இறந்து போய் விடுவேனோ என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் என்னுடைய சாவு கூட அந்த மாளிகையின் எல்லைக்குள்ளே நடக்கக் கூடாது என்று பெருநிதிச் செல்வர் கருதி விட்டார் போல் இருக்கிறது...." என்று தளர்ந்த குரலில் நகைவேழம்பர் கூறிக்கொண்டு வந்த போதே அவருடைய சொற்களால் மனம் மாறியிருந்த அருவாளன் அவர் மேல் சிறிது இரக்கமும் கொள்ளத் தொடங்கியிருந்தான்.

'பிறரைக் காப்பதற்குப் பயன்பட்டுப் பின்பு தன்னையே காத்துக்கொள்ள முடியாமல் அழிந்து போகிற எல்லாருடைய கதையும் என் நிலையில்தான் இருக்கும்' என்று அவர் கூறியிருந்த வாக்கியம் அவன் மனத்தில் இனம்புரியாததோர் ஞானக் கிளர்ச்சியை உண்டாக்கியிருந்தது. அந்தக் கிளர்ச்சியினால் அவரிடமே சிறிது தைரியமாகப் பேசினான் அவன்.

"ஐயா! நாம் பிறருக்குப் பயன்படலாம். ஆனால் நமக்கும் ஓரளவு பயன்படுகிறவராகப் பார்த்துத்தான் நாம் பயன்பட வேண்டும். நீங்கள் அந்த மாளிகையின் எல்லையில் இறந்தாலே உங்கள் உயிர் பேயாகி அங்கே உலாவும். அப்படி உலாவுவது கூடக் கெடுதல் என்று எண்ணிப் பயந்து ஒதுங்குகிறவருக்குப் போய்ப் பயன்பட்டு விட்டீர்கள் நீங்கள்."

இந்தச் சொற்களைக் கேட்டதும் பலிபீடத்தில் சாய்ந்து கொண்டிருந்த நகைவேழம்பர் தலையை நிமிர்த்திக் கண்ணில் வெறியும், களிப்பும் மாறி மாறித் தெரிய, "அப்படியும் சொன்னானா, அந்தப் பாவி? தெரிந்து கொள், அருவாளா! உனக்கும் ஒரு நாள் அவனிடம் இந்தக் கதிதான். அந்தப் பட்டினப்பாக்கத்துப் பெருநிதிச் செல்வனுக்கு நன்றிக் கடனும், சோற்றுக் கடனும் பட்டிருப்பதாக மயங்கி வீணில் அடிமையாகப் போய்விடாதே. 'ஏழையாயிருந்து பட்டினி கிடப்பது கூடச் சுகம். அடிமையாக இருந்து வயிறார உண்பது கூட நோய்' என்று இந்த மரணவல்லமை நிறைந்த கடைசிக் கணத்தில் என் மனத்தின் குருட்டுத்தனம் நீங்கி எனக்கு ஒரு ஞானம் வருகிறது. இனிமேல் வந்து பயன் என்ன? நான் அடிமையாயிருந்து கொண்டே சுதந்திரமாய் இருப்பதாய் எண்ணிக்கொண்டு தப்பான நம்பிக்கையோடு கொடிய வாழ்க்கைதான் வாழ்ந்திருக்கிறேன். எவ்வளவு சுதந்திரமாக இருந்தாலும் எல்லாரும் என்றைக்காவது ஒரு நாள் மரணத்துக்கு அடிமையாகித் தீரவேண்

டியதுதான் போலிருக்கிறதென்று இப்போது புதிதாகப் புரிந்து கொண்டவன் போலக் கடைசியாக இந்தப் பலிபீடத்தில் வந்து விழுந்து விட்டேன் பார். என் வாழ்வு இவ்வளவுதான். இனிமேல் எனக்கு என்ன இருக்கிறது?... ஆனால்....''

சிறிது நேரம் தயங்கிவிட்டு அவர் மேலும் பேசினார்: ''இனிமேல் ஒன்றுமில்லை என்றும் கைவிடுவதற்கு முடியாது. கடைசியாக நான் செய்வதற்கு இன்னும் மீதம் இருக்கிறது. பெருமாளிகையில் செத்துப் போனால் நான் பேயாயிருந்து பின்னால் பயமுறுத்துவேனோ என்று அஞ்சிப் பெருநிதிச் செல்வன் என்னை இங்கே தூக்கிக் கொண்டு வந்து கொல்லச் சொன்னான் அல்லவா? நான் பேயாயிருந்து அந்தக் கொடியவனுக்குக் கெடுதல் செய்ய முடியுமானாலும் அதைச் செய்யத் தக்க விதத்தில் சாவதற்கு இப்போதும் என்னால் முடியும் அப்பனே! இப்படியே என்னைத் தூக்கிக் கொண்டு போய்க் கடலில் போட்டு விடு. நான் கடலிலேயே சாகிறேன். பூம்புகாரின் கடற்பரப்பில் எல்லாம் நான் இறந்தபின் பேயாக உலாவுகிறேன். அந்தப் பாதக மனிதனுடைய கப்பல்களையெல்லாம் அலைந்து கடலில் கவிழ்க்கிறேன். அவனுடைய கடல் வாணிகத்தையே கவிழ்த்து விடுகிறேன். அந்தக் கப்பல்களில் ஏதாவதொன்றில் எப்போதாவது அந்தப் பாதகனும் பயணம் செய்து கொண்டு வருவான் அல்லவா? அப்போது அவனை இந்த இரண்டு கைகளாலும் பிடித்துப் பேயறை அறைந்து கழுத்தை நெரித்து இப்படியே கடலில் தள்ளி....?''

சொல்லிக் கொண்டே வந்தவர் உணர்ச்சித் துடிப்பில் எதிரே யாருடைய கழுத்தோ தன்னுடைய பிடியில் உண்மையாகவே இருப்பதாகக் கருதிக் கொண்டு இரண்டு கைகளாலும் நெரிக்க முயன்றபடி எழுந்திருக்க முற்பட்டுக் கால் ஊன்றி நிற்கமுடியாத காரணத்தால் மறுபடி பலிபீடத்திலேயே முடங்கிச் சாய்ந்து விழுந்தார்....

விழுந்தவருக்கு மூச்சு இரைத்தது. கண் சொருகிச் சொருகி விழித்தது. அந்த இரும்பு நெஞ்சு விம்மி விம்மித் தணிந்தது. அருவாளன் மறுபடி அவருகே மண்டியிட்டு அமர்ந்து அந்த நெஞ்சைத் தடவிக் கொடுத்தான். அவருடைய அநுபவங்களைப் பார்த்து அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. பயமாகவும் இருந்தது. தனக்கே அவற்றிலிருந்து தேவையான பாடங்கள் கிடைப்பது போலவும் இருந்தது.

'இவரைப் போல் கொடுமையாகவும் பயங்கரமாகவும் இனி ஒருவர் வாழ முடியாது. இவருக்கு இப்போது கிடைத்துக் கொண்டிருப்பதுபோல் கொடுமையான சாவும் இன்னொருவருக்குக் கிடைக்கக் கூடாது. கிடைக்கவும் வேண்டாம். இன்னொருவர் தாங்கிப் பொறுத்துக் கொள்ள முடியாதது இந்த விதமான சாவு' என்று எண்ணி எண்ணி மலைத்தான் அருவாளன். இன்னும் கொஞ்சம் நெல்லிக்கனிச் சாறு கலந்த நீரை அவர் வாயில் ஊற்றும்படி தன் தோழனுக்குச் சைகை செய்தான் அருவாளன்.

அவனும் அதைச் செய்தான். மீண்டும் சில விநாடிகள் மரண வேதனை. மீண்டும் சில விநாடிகள் தெளிவு. அந்த நிலையில் அவர் அருவாளனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். விரக்தியினாலும் இனி நாம் 'சாகத்தான் போகிறோம்' என்ற உறுதியினாலும் அப்போது மிக மிக மனத் தெளிவுடன் அவர் அவனிடம் ஒளிவு மறைவின்றிப் பேசினார். ''அருவாளா! நீ இப்பொழுது என்னைப் பார்த்துப் பரிதாபப்படுவதுபோல் நான் சாவது ஒன்றும் அவ்வளவு வேதனையான காரியமில்லை எனக்கு. ஏனென்றால் இந்த உலகத்தில் நாளைக்கு வாழ்வதற்காக என்று நான் எதையும் சேர்த்து வைத்திருக்கவில்லை. பெருநிதிச் செல்வனைப் போலச் செல்வத்தை மலை மலையாகக் குவித்து வைத்திருந்தால் அதைக் காக்கவும் அநுபவிக்கவும் ஆசைப்பட்டாவது நாளைக்கும் அதற்கு அப்புறமும் வாழ்வதற்கு விரும்ப வேண்டும். பாவங்களைத் தவிர வேறு எவற்றையும் இனிமேல் அனுபவிப்பதற்காக என்று நான் சேர்த்து வைக்கவில்லை. என்னுடைய கணக்கில் இப்போது நிறையப் பாவங்கள் இருக்கும். 'அந்தப் பாவங்களை எல்லாம் அநுபவிப்பதற்கு நான் மீண்டும் பிறக்க வேண்டியிருக்குமே' என்று நீ சந்தேகப்படுவாய். பிறந்தால் இன்னும் புதிதாக நிறையப் பாவங்கள் செய்து அடுத்த பிறவியிலும் இப்படியே கெட்டவனாக வாழ்ந்து விடுவேனோ என்றுதான் நான் மறுபடி பிறக்கவே பயப்படுகிறேன். 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்று நியாயமோ வரம்போ உள்ள எந்த ஒரு வாழ்க்கையையும் இந்தப் பிறவியிலேயே பழகிக் கொள்ள முடியாதவன் அடுத்த பிறவியில் மட்டும் எப்படி ஒழுங்காக வாழ முடியும்' என்று நானே என்னைப் பற்றிச் சந்தேகப்படுகிறேன். உனக்கு நன்றாக என்னைப் பற்றித் தெரியும். நான் நிறையக் கொலை செய்திருக்கிறேன். நிறையக் கொள்ளையடித்திருக்கிறேன்; நிறையப் பொய் சொல்லியிருக்கிறேன். நிறையச் சூழ்ச்சி செய்திருக்கிறேன்;

ஆனால் அவ்வளவும் எனக்காக மட்டும் அல்ல! யாருடைய மாளிகையிலோ நிதியறையை நிரப்புவதற்காக நான் என்னுடைய கணக்கில் பாவங்களை நிறைத்துக் கொண்டு கெட்டுப் போய் விட்டேன்.

நான் இப்படிக் க்ஷயமாக நலிந்து மந்த மாக மெல்ல மெல்லச் சாவது எனக்கே பிடிக்கவில்லை. யாராவது நாலைந்து பேராகச் சேர்ந்து கொண்டு கணம் கணமாகத் துடிக்கத் துடிக்கச் சித்திர வதை செய்து என்னைக் கொல்ல வேண் டும் போல் இப்போது எனக்கே ஆசை யாக இருக்கிறது. மந்தமாக நோயாளி யைப் போலச் சாவது சோம்பேறித் தனமான சாவு. என்னைப் போல் அப்படி வாழ்ந்தவன் சோம்பேறித்தனமாக இப் படியா சாவது? நீயே சொல் அருவாளா! என்னைச் சித்திரவதை செய்தாலும் என் னுடைய வாய் அலறாது! கண்களில் நீர் நெகிழாது. அப்படி உடம்பையும் மனத் தையும் கல்லாகவும் இரும்பாகவும் நான் பழக்கி யிருக்கிறேன். நீயும் உங்கள் உலகமும் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளா விட்டாலும் நான் இப்படி வாழ்ந்தது கூட ஒருவகைத் துறவுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் என்னைப்போலவே இவற்றைத் துறவாக ஒப்புக் கொள்கிறவள் ஒருத்தி இதே சக்கரவாளத்துக் காட்டில் இன்னும் சிறிது தொலைவிலுள்ள வன்னிமன் றத்தில் இருக்கிறாள். சாவதற்கு முன் அவளை நான் ஒருமுறை பார்த்து விட்டுச் சாக வேண்டும். நீயும் உன் தோழனும் போய் எனக்காக அவளை இங்கே அழைத்து வர முடியுமா? அவள் பெயர் பைரவி. காபாலிகர்களுடைய வன்னி மன்றத்திலே போய் யாரிடம் அவள் பெயரைச் சொல்லிக் கேட்டாலும் தெரியும். எனக்கு ஒரே ஓர் ஆசை. நிராசையோடு நான் சாக விரும்பவில்லை. என்னை இக்கதிக்கு ஆளாக்கியவனைப் பற் றிய எல்லா இரகசியங்களும் எனக்குத் தெரிந்திருப்பது போலவே அந்தக் காபா லிகைக்கும் தெரியும். அந்தக் கொடும் பாவியைப் பழி வாங்கும் பொறுப்பை இன்று அவளிடம் நான் ஒப்படைக்கப் போகிறேன். அந்தப் பொறுப்பை அவள் ஏற்றுக் கொண்டுவிட்டால் பின்பு நான் நிம்மதியாகச் சாகலாம்.''

இவ்வாறு அவர் விடுத்த வேண்டுகோ ளைப் புறக்கணிக்க முடியாமல் அருவா ளனும் அவனுடைய தோழனும் காபா லிகையாகிய பைரவியை அழைத்துக் கொண்டு வருவதற்காக வன்னிமன்றத் துக்குச் சென்றனர். அவர் பலிபீடத்தில் தலையைச் சாய்த்து உறங்குவது போல் கண்ணை மூடினார். கண்ணை மூடு முன் கடைசியாக அவர் பார்த்த பொருள் காளி கோட்டத்தின் சிதைந்த பழங் கதவாயிருந்தது.

சிலகணங்களுக்குப் பின் அரைகுறைப் பிரக்ஞையுடனே அவர் மெல்லக் கண் திறந்து பார்த்த போது சுற்றிலும் ஒரே நரிக் கூட்டமாகத் தெரிந்தது. இரைச்சி தின்று பழகிய சுடுகாட்டு நரிகள் பயங்கர மாக ஊளையிட்டுக்கொண்டு அவர் கிடந்த பலிபீடத்தைச் சூழ்ந்தன. (தொடரும்)

சுதந்திர நிதி

7—1—62 முதல் 22—1—62

பாரத்வாஜா	1000	00
கே. ஆர். நாராயணன்	2	00
ஆர். கே. ராமன்	10	00
டி. வி. கணபதி	5	00
டாக்டர் கே. ராமச்சந்திரன்	10	00
ஆர். சீதாராமன்	50	00
எம். சுப்பிரமணியம்	5	00
டி. சம்பந்த முதலியார்	101	00
எம்.பி.ஆர். சுப்பிரமணிய முதலியார்	11	00
மதுரை 14–1–62 கூட்டத்தில் கிடைத்த அன்பளிப்பு	305	00
எம். என். வெங்கடநாராயணன்	3	00
ஓர் அன்பர்	7	00
ஏ. வி. சம்பத் ஐயங்கார்	500	00
பார்வதி சரண்யா	500	00
அ. கௌரி விநாயகம்	1	00
கே. நரசிம்ம ஐயங்கார்	101	00
எம். எம். பரமேசுவர ஐயர்	200	00
அகலினி	100	00
வி.வி. அனந்தசுப்பிரமணிய ஐயர்	5	00
வி. வி. சுப்பிரமணிய ஐயர்	25	00
கே. என் விசுவநாதன்	15	00
வி. ஏ. ராமய்யர்	25	00
வி. எஸ். சுவாமிநாதய்யர்	100	00
வி. வி. ராஜகோபாலாச்சாரியார்	100	00
கே. ஏ. விசுவநாதன்	10	00
பி. எஸ். பரசுராமய்யர்	10	00
டி. அகமது அலி	101	00
ஜி. சுப்பிரமணியம்	2	00
டி. ரங்கநாதன்	5	00
பி. ஜே. ராமச்சந்திரன்	10	00
என். ஆர். ஆச்சார்யா	25	00
டாக்டர் என். வி. டி. சாரி	25	00
ஏ. சுப்பராயலு பத்தர்	[illegible]	00
10–1–61 முதல் 6–1–62 வரை	17864	36
	21240	36

சுதந்திரக் கட்சிக்காகப் பண உதவி செய்கிறவர்கள் ஸ்ரீ ராஜாஜி C/o கல்கி காரியாலயம், சென்னை - 10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.





அட,





அடாடா! நமக்கு என்ன கிரகக்கோளாறோ தெரியவில்லை, இந்த மனிதர்களிடம் மாட்டிக் கொண்டு எப்படி வெல்லாமோ திண்டாட வேண்டியிருக்கிறது! இவர்களைப் பாம்பென்றும் தாண்டுவதற்கில்லை; பழுதை என்றும் மிதிப்பதற்கில்லை. இவர்களுக்கு நாக்கு ஒன்றா, இரண்டா? இருபுறமும் தீட்டிய கத்திபோல எப்படி வேண்டுமானாலும் அல்லவா பேசி விடுகிறது!

இவர்களைப் படைத்த ஆண்டவன்தான் எங்களையும் படைத்தான். இவர்களை நடமாட விட்ட ஆண்டவன்தான் எங்களையும் நடமாட விட்டான். 'தன் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று ஆண்டவன் வகுத்த வழியில்தான் நாங்கள் பாட்டுக்குத் 'தெய்வமே' என்று பணியாற்றிக் கொண்டு போகிறோம். என்று பிரிந்தோமோ, இன்று சந்திக்கிறோம். அதுவும் எங்கள் எண்ணத்தின் பேரிலா, இஷ்டத்தின் பேரிலா? இல்லை, இல்லை. அவன் ஆணையின் பேரில்.

இப்படியிருக்கும் பொழுது இந்த மனிதர்களுக்கு எங்கள் மேல் ஏன்தான் இத்தனை ஆத்திரமோ? ஏன்தான் இந்த க்ஷாத்திரமோ? ஏன்தான் இந்த வைர - வைஷம்யமோ!

இவர்கள் வழிக்கு நாங்கள் போவதில்லை. 'துஷ்டர்களைக் கண்டால் தூர விலகு' என்றபடி இவர்கள் கண்களில் படாமலேயே தூரத் தூர விலகிச் செல்கிறோம். அப்படியும் இவர்கள் எங்களை விடுகிறார்களா?

ஆண்டவனின் நியதியோ? அல்லது எங்கள் கால வித்தியாசமோ? சூரிய குடும்பத்தில் பிறந்த நாங்கள் ஒருவரை யொருவர் சந்திக்காமலே பல்லாண்டு பல்லாண்டாகச் சுற்றி வருகிறோம். எங்கள் பாட்டுக்கு எங்கள் காரியங்களைச் செய்து கொண்டு போகும் எங்களை இந்த மானிடர்கள் ஏன்தான் இப்படிச் சந்திக்கு இழுக்க வேண்டுமோ?

குடும்பத்தில் சச்சரவு. ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதில்லை. அண்ணன் – தம்பி, தாயாதி – பங்காளிகள் சண்டை போட்டுக் கொண்டு, ஒருவரை யொருவர் முகாவலோபனம் செய்வதில்லை. அல்லது கணவன் மனைவி கோபித்துக் கொண்டு ஒருவர் ஒரு மூலையைப் பார்த்தால் இன்னொருவர் இன்னொரு மூலையைப் பார்க்கிறார்கள். இப்படி ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள்! அதற்கு நாங்களா பிணை? 'நவக்கிரகம் மாதிரி வக்கரித்துக் கொண்டிருப்பதைப் பார்!' என்கிறார்கள். எலியும் பூனையும் போல, பாம்பும் கீரியும் போல, ராகுவும் கேதுவும் போல என்று உவமைகளை அடுக்குகிறார்கள். சனி ஒரு மூலையைப் பார்த்தால் செவ்வாய் ஒரு மூலையைப் பார்க்கிறது என்கிறார்கள். இவர்களின் சண்டைக்கு நாங்களா காரணம்?

கேட்டால் ஜாதகத்தை எடுத்து விரிக்கிறார்கள்! 'ஆறும் வீட்டுக்கு உடையவன் எட்டாம் வீட்டைப் பார்த்தால் ஏன் ஐயா சண்டை வராது?' என்கிறார்கள். புதன் நீசன், சந்திரன் உச்சன் என்று எங்கள் தலையைப் போட்டு உருட்டுகிறார்கள்.

உண்மையைக் கேட்கப் போனால் இந்த மனிதர்களுக்குப் புத்தியே கட்டை. மனத்திலே கோப தாபத்தையும் அகங்கார ஆணவத்தையும் வளர்த்துக் கொண்டு உலகத்தில் இல்லாத சண்டைகளை யெல்லாம் விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறார்கள். அப்புறம் குற்றமனைத்தையும் எங்கள் தலையில் தள்ளி விடுகிறார்கள். 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்னும் பழமொழி எங்கள் விஷயத்தில் நூற்றுக்கு நூறு உண்மை. இப்படி எங்கள் மீது குற்றம் சுமத்தும் இந்த மானிடர்கள் மீது நாங்கள் ஏதாவது புகார் செய்ய முடியுமா? செய்தால்தான் சும்மா விடுவார்களா? கவரில்





கிரகசாரமே!



அடுத்த படியாக 'எல்லாம் கிரகதோஷம் ஐயா, கிரக தோஷம்!' என்று எங்கள் மீதே திருப்பி விடுகிறார்கள்! கிரகங்களாகிய நாங்கள் மானிடர்களைப் போல் வீண் ஆக்ரகத்தில் இறங்கினால் நன்றாயிருக்குமா? எனவே விக்கிரகமாக வாய் அடைத்து உட்கார்ந்திருக்கிறோம். எங்கள் மௌனத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு விடுகிறார்கள் இந்த மனிதர்கள்! பிழைக்கத் தெரிந்த இவர்கள் கெட்டிக்காரர்களா, அல்லது நாங்களா?



யாருக்காவது உடல் நோயா? சீக்கிரம் குணமாகவில்லையா? புரட்டு ஜாதகத்தை! பார், சனி, செவ்வாய், ராகு எல்லோரும் எங்கே இருக்கிறார்கள் என்று! சுமத்து குற்றத்தை அவர்கள் தலையில்! விரய ஸ்தானாதிபதி நீசனாயிருப்பதால் செலவு கட்டுக்கடங்காது, நோய் படுத்தும் என்று கூறி எங்கள் தலையில் மிளகாய் அரைக்கிறார்கள்!

உண்மையைக் கேட்கப் போனால், ஒருவனது உடல் நிலை கெட்டதற்கு நாங்களா காரணம்? நாவை அடக்காமல், ஐம்புலன்களை அடக்காமல் அவன் செய்த அபத்தியமே அல்லவா? இதைச் சொல்லப் போனால், அவனுக்கு அப்படி அபத்தியம் செய்யத் தோன்றியதற்கே நாங்கள்தான் காரணம் என்று மடக்கி விடுவார்கள்!

குடும்பத்தில் சச்சரவா? கணவன் மனைவி தகராறு? இதற்குக் காரணம் யார்? கணவன் - மனைவி பாலும் புலியுமாக இருந்தால், சனியும் சுக்கிரனும் சிக்கித் தவிப்பானேன்? ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோ, ஒருவர் உள்ளத்தை இன்னொருவர் புரிந்து கொள்ளாத குற்றமோ காரணமே தவிர நாங்களா?




உள்நாட்டு அரசியல், வெளிநாட்டு அரசியல் அகில உலக அரசியல் எல்லாம் உச்ச கட்டத்தை அடைந்து பெரிதாக வெடிக்கும் நிலைமை அடைந்து விட்டால், கட்டிப்பிடித்து இழுத்து வருவார்கள் கிரகங்களாகிய எங்களை. எல்லாப் பாவக் கிரகங்களும் இப்படி வக்கரித்துக் கொண்டிருந்தால் ஏன் ஐயா உலக நிலை கொந்தளிக்காது என்று கேட்பார்கள்.

உண்மையைக் கேட்கப் போனால், ஒருவரை யொருவர், ஒரு நாட்டை ஒரு நாடு கபளீகரம் செய்ய வேண்டும், உலகத்திலேயே தாம் தான் முன்னணியில் நிற்க வேண்டும் என்ற மனப்பால் குடிக்கும் பெருந்தலைகளின் மூளை மோதல் அல்லவா இத்தனை களேபரத்துக்கும் அடிப்படை? அதை விட்டு விட்டு எங்கள் தலையை உருட்டுவானேன்? 'அது என்ன கிரகசாரமோ? எங்களுக்கு என்ன தெரியும்?' என்று கையை விரிப்பார்கள் இந்த மனிதர்கள்!

எங்களுக்கு விளங்காப் புதிராகத்தான் இருக்கிறது! பார்க்கப் போனால் இந்த மானிடர்களை நாங்கள் ஆட்டிப் படைக்கவில்லை; வாட்டி வதைக்கவில்லை. இவர்களை ஆட்டிப் படைக்கும் ஆண்டவனே தான் எங்களையும் ஆட்டிப் படைக்கிறான். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பது உலகறிந்த உண்மையாயிற்றே! 'நாள் என்ன செய்யும்? கோள் என்ன செய்யும்?' என்று மானிடர்களில் மகான்களாகத் தோன்றிய பெரியார்கள் கூறி அவனை வழிபடச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி யிருக்கும் பொழுது 'பொன் அகப்பட்டாலும் புதன் அகப்படாது' என்று எங்களைத் தூக்குவது போலத் தூக்கி எங்களுக்குப் பெரும்பழி பதிக்கிறார்கள் இந்த மனிதர்கள்! அப்பொழுது தானே நிட்டிய கத்திகையிலே கூர் பார்க்க முடியும்?

நாங்கள் ஒன்பது கிரகங்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பாராமல் ஒவ்வொரு மூலையைப் பார்த்துக் கொண்டிருப்பதனால் தானே, எங்களுக்கு இந்தக் கெட்டப் பெயர் வந்தது? நாங்கள் ஒருவரையொருவர் பிரிந்திராமல் சேர்ந்திருக்கும் நாள் என்றைக்காவது ஒரு நாள்

ரா.வீ.







"டேய் முத்து! அவன் பரீட்சையில் கணக்குகளை யெல்லாம் தப்பாகப் போட்டால் உனக்கென்ன? அவனை ஏன் அடிக்கிறாய்?"

"நான் அவனைப் பார்த்துக் காப்பியடிச் சுத் தொலைத்திருக்கேனே!"

வராதா? எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்தக் களங்கம் தீராதா, நவக்கிரக தோஷம் நீங்காதா என்று நாங்கள் எத்தனை நாட்களாக எண்ணமிட்டுக் கொண்டிருந்தோம்? கனவு கண்டு கொண்டிருந்தோம்!

ஆண்டவன் அருளில் அந்த நாளும் கைகூடியது. எட்டுப் பேர் சேர்ந்திருக்கப் போகிறோம், இன்னும் சில தினங்களில், ஒரு வீட்டிலே. ஒரே ஒரு மனக் குறை என்னவென்றால், தம்பி ராகு ஒருவன் மட்டும் அன்றைக்கு எங்களோடு இருக்க முடியவில்லை. ஆயினும் பல ஆண்டுகளுக்குப் பின் எங்கள் அண்ணன்–தம்பிகளில் எட்டுப் பேராவது ஒரு வீட்டில் சில நாட்கள் சேர்ந்திருக்கப் போகிறோமே என்று மகிழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்த மண்ணுலக மாந்தர்கள் என்னவெல்லாமோ கதைகள் கட்டி உலகையே பயமுறுத்தத் தொடங்கி விட்டார்கள். வக்கிர புத்தி படைத்தவர்கள் தானே? உலகத்தின் யுத்த பீதியை நீக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டு உச்சி மகாநாடு கூட்டப் பெருந் தலைவர்கள் எல்லாம் முயன்றார்களே! அவர்கள் உள்ளம் ஒன்று சேரும் வழியையா யோசித்தது? யுத்த பீதியைப் போக்கவா முயன்றது? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் அவர்களது உச்சநிலைப் பேச்சு உருப்பட்டதா? ஒருவரை யொருவர் வீழ்த்தித்தாம் பெருமையுற முயன்றதனால் தானே மகாநாடு முறிந்தது? பிறருக்குக் கேடு நினைத்து நினைத்துப் பழகிய மனிதன் இப்பொழுது என்ன சொல்கிறான், தெரியுமா?

எட்டுக் கிரகங்கள் ஒன்று சேருகின்றன. உலகத்துக்கே ஆபத்து என்கிறான். பிரளயம் வந்து விடும் என்று பயமுறுத்துகிறான். விவரம் தெரியாத மக்களை மனம் தடுமாறி நிற்கும்படி செய்கிறான்! சொல்லப் போனால் இவன் தான், சேர்ந்தும் தொல்லை கொடுப்பவன், பிரிந்தும் தீமை இழைப்பவன். இருவாறுந் தான் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான் என்பது போல.

ஏன் ஐயா, கேட்கிறேனே என்று கோபித்துக் கொள்ளாதீர்கள்! நாங்கள் எண்மர் கூடி மகிழ நினைக்கும் இந்த வேளையிலே எங்களுக்கு என்ன, உங்கள் நிலைமையா இருக்கும்? உங்களைப் போல யார் யாரைக் கெடுக்கலாம் என்று நாங்கள் திட்டம் போடுவோம்? மாட்டோம், ஐயா, மாட்டோம்! நாங்கள் சேர்ந்திருக்கும் அந்த நாட்களை மகிழ்ச்சியாகவே போக்குவோம். எல்லோரும் இன்புற்றிருக்கவே நினைப்போம். நம்புங்கள், ஐயா! நம்புங்கள்!

உங்களை ஓர் அளவுகோலாக வைத்துக் கொண்டு எங்களை அளவிட முயலாதீர்கள். எத்தனையோ பேர் எங்களைக் காரணம் காட்டித் தங்கள் தன்னலத்தை நிறைவேற்றிக் கொள்ள முயல்வார்கள். அதற்கு இடம் கொடாமல் நல்லபடி நடந்து கொள்ள முயலுங்கள்! இதுவே நாங்கள் உங்களுக்கு விடுக்கும் வேண்டுகோள்!

நாங்கள் நவக்கிரகமாக வக்கரித்துக் கொண்டு வாழ்ந்தாலும் எண்மராக இணைந்து வாழ்ந்தாலும், யாருக்கும் எவ்வித தீங்கும் நினையோம். தீக்குறளைச் சென்றோதோம். இது நிச்சயம். எங்களைத் தைரியமாக நம்புங்கள்!

மானிடர்களே! நீங்கள் எங்களை எப்படி வாழ்த்தினாலும் அல்லது தாழ்த்தினாலும், மாபெரும் உண்மை ஒன்று புலனாகிறது. நன்மை ஒன்று நிகழ்கிறது. எங்களைச் சாக்கிட்டு நீங்கள் எங்களையும் உங்களையும் படைத்த ஆண்டவனை நினைவு கூருகிறீர்கள். ஆண்டவன் ஒருவன் இருக்கிறான். அவன் விட்ட வழியே தான் நாம் செல்ல வேண்டும் என்ற பேருண்மையை உணருகிறீர்கள். எங்கள் மூலம் அவனை நினைந்து நினைந்து நற்கதியை அடையும் வாய்ப்பைப் பெறுகிறீர்கள்! அது மட்டுமா? யாக யக்ஞங்களும், சாந்தி ஹோமங்களும் செய்து பண்டைய பாரதத்தை நவ பாரதத்தில் நிலைநாட்ட முயல்கிறீர்கள். வடக்கையும் தெற்கையும் சந்திக்க இழுக்காமல், கிழக்கு மேற்குக்கு வழிகாட்டுகிறது என்னும் பெருமையை உங்களை யறிந்தோ அறியாமலோ நிலைநாட்ட முயல்கிறீர்கள்!

இத்தனை நாட்களும் தனித்திருப்பினும் சேர்ந்திருப்பினும் எங்கள் மூலம் உங்களுக்கு ஆண்டவனின் நினைவு வர நாங்கள் உதவினோமே! அதை நினைக்க நினைக்க எங்களுக்குப் பெருமையாகத் தானிருக்கிறது! ஆண்டவன் தான் உங்களையும் எங்களையும் ஆட்டிப்படைக்கிறான். அவனை வழிபட்டால், என்றென்றும் நன்மை உண்டு என்பதை நம்பி வாழுங்கள். பிரிந்திருப்பினும் சேர்ந்திருப்பினும் மனிதனை மனிதன் ஏமாற்றிப் பிழைக்கும் எண்ணத்தை விட்டொழித்து மானிட குலம் உய்யப் பாடுபடுங்கள். அதுவே எங்களுக்கு மகிழ்ச்சி தரும்; உங்களுக்கும் இன்பம் தரும்.

இவ்வளவு நாங்கள் எடுத்துச் சொல்லியும் நீங்கள் காதில் வாங்கிக் கொள்ளாவிட்டால், 'அட கிரகசாரமே!' என்று எங்கள் கிரகசாரத்தை நொந்து கொள்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழி கிடையாது. யார் கண்டார்கள், எங்கள் 'கிரகசாரம்' எப்படி இருக்கிறதென்று!



சீரான ஆகாரமில்லாததால்
நீங்கள்
மெலிந்திருக்கிறீர்களா?

ஆல்போஸாங்
சாப்பிடுங்கள்

மிகச் சிறந்தது
சாதாரண உணவுடன் சேர்ந்து
சிக்கனமான, விஞ்ஞான முறையில்
ஊட்டமளிப்பது

தேநீர், காப்பி, பால், கஞ்சி, பழரசம் முதலியவைகளுடன் சேர்த்து அருந்தினுல் மிக ருசியாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கும், வளரும் பிராயத்திலும், பிரசவகாலத்தில் தாய்மார்களுக்கும், சிந்திக்கும் தொழிலாளிகளுக்கும், முதியவர்களுக்கும், பலவீனம் இரத்தமின்மை மற்றும் நோயிலிருந்து தேறி வரும் போதும் ஆல்போ-ஸாங் சிறந்த டானிக் உணவாகிறது.



பௌடர் மற்றும் மாத்திரைகளாகவும் கிடைக்கிறது.

ஜே. & ஜே. டீஷேன்,
ஹைதராபாத்—டெக்கான்

நந்தவனம்

4 - இளைஞன் பேசுகிறான்



சோமு

“சிங்கம்புத்தூர் ஜமீன் வட்டாரத்திலுள்ள செண்பகக்காடு என்ற வனப்பிரதேசத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். பொதிகைமலைச் சாரலில் வனப்பு மிகுந்த ஓர் எழில் வனம் இந்தச் செண்பகக் காடு. இந்த அழகான வனப் பிரதேசத்தைச் சுற்றி மனிதர்களே புக முடியாத பெருங்காடு அடர்ந்திருக்கிறது. இந்த விஞ்ஞான யுகமாகிய இருபதாம் நூற்றாண்டிலும், பொதிகை மலைக் காடுகளுக்குள்ளே மனிதர்களின் பார்வைக்கு அப்பாற்பட்டுப் பல சித்தர்கள் தவம் புரிந்து வருகிறார்கள் என்று நம்முடைய பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் யாரும் அந்த அடர்த்தியான காட்டுக்குள்ளே புகுந்து சென்று பார்த்ததில்லை.

சுற்றியுள்ள காடுகளுக்குள் யாரும் புகுந்து பார்த்ததில்லையென்றாலும், செண்பகக்காடு என்ற பிரதேசத்திற்கு மக்கள் செல்வதுண்டு. இதற்கு முக்கிய காரணம், அந்தச் செண்பக வனத்திலுள் சிங்கம்புத்தூர் ஜமீந்தார்களின் குல தெய்வமான செண்பக நாயகியம்மனின் கோவில் இருக்கிறது. அங்கே ஆண்டு தோறும் ஒரு திருவிழா நடைபெறும். இந்தத் திருவிழாவுக்கு அந்த வட்டாரத்து மக்கள் நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் சாரி சாரியாகச் செல்லுவார்கள். சபரிமலை ஐயப்பன் திருவிழாவைப் போன்று, இந்தச் செண்பக நாயகி திருவிழாவும் சிங்கம்புத்தூர் வட்டாரத்தில் மிகவும் புகழ்பெற்றது!

செண்பகக் காடு தனது பெயருக்கு



ஏற்பச் செண்பக மரங்கள் அடர்ந்து நிரம்பியதாய், ''கம்'' என்ற வாசனை எந்நேரமும் கமழ்வதாய், 'சல சல' என்று ஓடுகிற தெளிந்த நீரோடைகளோடு கூடியதாய், மான்கள் துள்ளி விளையாடக் கூடிய ஓர் அழகு வனமாகத் திகழ்ந்தது! இதைச் சுற்றியுள்ள காடுகளிலே புலியும் சிறுத்தையும் நிறைய உண்டு. என்றாலும், இந்தச் செண்பகவனத்துக்குள் அவை வருவதில்லை. செண்பகநாயகி அம்மனுக்கு மக்களிடம் உள்ள கருணைதான் இதற்குக் காரணம் என்று சிங்கம்புத்தூர் வாசிகள் சொல்லுவார்கள். வேறு பல காரணங்களும் சொல்லப்பட்டன. முக்கியமாகச் சிங்கம்புத்தூர் ஜமீன் குடும்பத்தினர் அடிக்கடி செண்பகக் காட்டில் வன வேட்டைக்கு வருவதால்தான், கொடும் விலங்குகள் இங்கு மட்டும் வருவதில்லை என்று, பலரும் பேசிக் கொண்டார்கள்.

செண்பகநாயகி கோயில் என்பது வன துர்க்கையின் கோயில். அது மலைப்பாங்கான இடமாதலால், சிறு சிறு அருவிகளும் சிங்காரச் சிற்றோடைகளும் இந்தக் கோயிலைச் சுற்றி நான்கு புறமும் உருண்டோடின! செண்பக மரங்களோடு, வண்ண வண்ண மலர் பூக்கும் பெரிய பெரிய எழில் மரங்களும், பூஞ்செடி கொடிகளும் கோயிலைச் சுற்றி வளைத்துக் கொண்டு பெரும் பொழிலாக நின்றன! கோயிலுக்குப் பின்புறம் இரண்டொரு சந்தன மரங்கள். அவற்றுக்கு அருகிலே பொன் கொன்றை. பக்கத்தில் இரண்டொரு வில்வமரங்கள். அவற்றின் மருங்கில் ஒரு சிறிய மலைக் குகை! இந்தக் குகைக்குள்ளே, பல்லவர்களாலோ அல்லது பாண்டியர்களாலோ ஒரு காலத்தில் வரையப்பட்டதாகக் கூறும் சில அருமையான சித்திரங்கள் உண்டு. செண்பகநாயகி கோயிலின் சுற்றுப்புறச் சுவர்களிலும், குகையில் இருப்பது போலவே, பல வண்ணச் சித்திரங்கள் சுவர் ஓவியங்களாகக் காட்சி தந்தன! ஆனால் மிகப் பழைய சித்திரங்களானதால், வர்ணங்கள் எல்லாம் மங்கிப் போயிருந்ததோடு, சுவர்களின் வர்ணப் பொருக்குகளும் நாட்பட நாட்படக் கீழே உதிர ஆரம்பித்தன! இந்த அவல நிலையைப் பொது மக்கள் பார்த்தார்கள். பார்த்துக் கொண்டே கவலையின்றி இருந்தார்கள்! ஜமீந்தார்களிலுமே யாரும் இந்தச் சித்திரங்களைப் பற்றிக் கவலைப்படவில்லை! நிலைமை இப்படியே நீடித்திருக்குமானால் லாலா கடையிலே பழைய காகிதங்களோடு வந்ததே இந்தச் சித்திர மடல், இது தோன்றியிராது! இந்தச் சித்திர மடலுக்குக் காரணமாக அமைந்த அத்தனை துயர நிகழ்ச்சிகளும் நடந்திராது! ஆனா





அனவரத புவன பதி என்ற ஜமீந்தாரையும் அவருடைய புதல்வியையும் படைத்த விதியானது, அவர்கள் மூலம், அவர்களைக் கொண்டு, சில வேடிக்கைகளைச் செய்ய நினைத்தது! கடைசியில் அந்த வேடிக்கை எத்தனையோ பேருடைய வாழ்வுக்கு வினையாக முடிந்தது! என்னையும் இந்தப் பாடுபடுத்தி விட்டது; படுத்திக் கொண்டிருக்கிறது; இன்னும் படுத்தப் போகிறது!''

இவ்வாறு சீனிவாச மண்டபத்து இளைஞன் தனது வரலாற்றுக்கு ஒரு முகவுரை கூறிக் கொண்டே பெருமூச்சு விட்டான். அப்போது லாலா கேட்டார்:

''அனவரத புவன பதி என்று நீங்கள் குறிப்பிடுவது, சிங்கம்புத்தூர் ஜமீந்தார் பரம்பரையிலே கடைசியாக இருந்தாரே அவரைத்தானே?''

''ஆமாம், அவரைத்தான். ஜமீந்தார்களின் நீளமான பெயர்களைக் கேட்டதும் நான் ஏதோ எனக்குச் சம்பந்தமில்லாத, இந்தக் காலத்து நிகழ்ச்சிகளோடு சேராத, ஒரு சரித்திரக் கதையைச் சொல்ல ஆரம்பித்து விட்டேன் என்று நீங்கள் நினைத்தீர்களோ?''

இப்படிக் கேட்டான் அந்த வாலிபன், புன்முறுவல் செய்து கொண்டே! நான் சொன்னேன்:

''சரித்திரக் கதை என்று சந்தேகப்படவில்லை. நாங்கள் இருவரும் எங்கள் வாழ்நாளில் நேரிலே பார்த்துள்ள அதே புவனபதிதானா நீங்கள் குறிப்பிடுகிற மனிதர், என்று தெரிந்து கொள்ளத்தான் அப்படிக் கேட்டோம். தவிரவும், அந்தச் சிங்கம்புத்தூர் ஜமீனைச் சேர்ந்த ஒரு மீசைக்காரரையும், வக்கீல் குமாஸ்தா பஞ்சவர்ணத்தையும் இதே ஆற்று மணலில் சந்தித்து விட்டோம்! ஆகையால் அந்த இரண்டு மனிதர்களுக்கும், அவர்கள் சொன்ன ஒரு கல்லூரி மாணவிக்கும் இந்த வரலாற்றிலே நெருங்கிய சம்பந்தம் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதில் ஒரு திருப்தியும் நிம்மதியும் இருக்கின்றன. அதனால்தான் என் நண்பர் அப்படிக் கேட்டார். வித்தியாசமாக நினைத்துவிடக் கூடாது!''

இப்படி நான் சொன்னதும் இளைஞன் சிரித்தான். சொன்னான்:

''பரவாயில்லை! உங்களுடைய சந்தேகத்தை யெல்லாம் ஆரம்பத்திலேயே கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வதுதான் நல்லது. இல்லையென்றால் நான் சொல்லப் போகும் நிகழ்ச்சிகளில் உங்களுக்கு நம்பிக்கை இராது! அப்படி நம்பிக்கை இல்லாது போய் விட்டால், பிறகு இந்த உலகில் எனக்காகவும், நான் நம்பியிருக்கிற ஒரு பெண்மணிக்காகவும் அனுதாபப்படுவதற்கே யாரும் இருக்க மாட்டார்கள். யாருமே அனுதாபம் கொள்ளவில்லை யென்றால் என் கனவுகள் எல்லாம் என்ன ஆகும்! நான் எப்படி என்னுடைய பாவத்திலிருந்து மீளுவேன்! நான் செய்ய விரும்பும் அந்தப் பிராயச்சித்தம் காற்றோடு காற்றாக அல்லவா போய் விடும்!''

இப்படிச் சொல்லி விட்டு இளைஞன் கண் இமைகளை மூடினான். சற்று நேரம் அப்படியே மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு மேலே பேச ஆரம்பித்தான்:

''சிங்கமபுத்தூர் ஜமீந்தார் அனவரத புவன பதிக்கு ஒரே மகள் — தாமரைச் செல்வி! அத்தனை பெரிய ஜமீனுக்கு அவள் ஏக புதல்வி! எனவே ஜமீந்தார் தம்முடைய மகளிடத்தில் எல்லை மீறிய வாஞ்சை செலுத்தினார். அந்த மகளைப் பெற்றெடுக்கும் போதே தாயாரின் உடல் நலம் சீராக இல்லை. எனவே இந்த மகளுக்குப் பிறகு தமது குடும்பத்தில் வேறு சந்ததி இராது என்று ஜமீந்தாருக்கு நன்றாகப் புரிந்து விட்டது. ஆண் குழந்தையை எதிர்பார்த்து இன்னொரு மனைவியை மணக்கக் கூடிய மனப்பான்மை அவருக்கு இல்லை. ஆகவே மகளையே மகனைப் போல் வளர்த்தார்!

மகனைப் போல் என்று சொன்னேன். இவ்வளவு பெரிய மாவட்டத்தில், இத்தனை பெரிய ஒரு ஜமீனுக்கு, அரசியாக வரக் கூடியவள் தமது மகள் தாமரைச் செல்வி என்ற காரணத்தால், அவளுக்கு ஓர் ஆண் மகனுடைய தீரமும், நெஞ்சுரமும், நிர்வாகத் திறமையும், கல்வியும் அமைய வேண்டும் என்று கருதிச் சிறு வயதிலேயே, புத்தகப் படிப்போடு அரசப் பயிற்சிகளும் கொடுத்து வந்தார் ஜமீந்தார்! அந்தக் காலத்தில் இதைப் பற்றிப் பலர் வேடிக்கையாகப் பேசுவார்கள். அதிலும் ஜமீந்தார் தம்முடைய மகளுக்குக் குதிரையேற்றம் சொல்லிக் கொடுத்து, ஆடவனைப் போன்ற உடையிலே வலைய வரும்படி அவளுக்குப் பயிற்சி தருகிறார் என்பது அந்த வட்டாரத்து மக்களுக்குப் பரிகாசமாக இருந்தது! ஜமீனைச் சேர்ந்த பல சிப்பந்திகளுங் கூட இது பற்றி எகத்தாளமாகப் பேசினார்கள்!

அனவரதர் எந்த முடிவிலும் அசையாமல் நிற்கக் கூடிய உறுதி படைத்த ஒரு தீரர்! ஆகவே யார் என்ன நினைத்தாலும், எவர் எது பேசிக் கொண்டாலும், அதைப் பொருட்படுத்தாமல் இருந்தார் அவர்! ஆனால் — ?

தாமரைச் செல்வி குழந்தையாக வளர்ந்து, சிறுமியாக விளையாடி, ஆண் மகன் போல் உலவிப் பிறகு பருவ மங்கையாக உருவாகும் வரை, ஜமீந்தாருடைய இட்டங்களில் எவ்விதமான கலக்கமும் ஏற்படவில்லை. ஆனால் தாமரைச் செல்விக்குப் பதினாறு வயது தாண்டியதும், அவளுடைய மனப்பான்மையில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று!



நோய்ப் படுக்கையிலேயே தனது வாழ்நாட்களைக் கழித்து வந்த அன்னையிடம், ஒரு நாள் தாமரைச் செல்வி சொன்னாள்:

''அம்மா! ஆயிரம் முயன்றாலும் பூங்கொடி மரமாகி விடுமா? எத்தனை தான் பயிற்சி கொடுத்தாலும் புள்ளி மானை மயிலைக் காளையாக மாற்றிவிட முடியுமா? மான் மருள வேண்டும். மயில் நடனமாட வேண்டும். இதை விட்டு விட்டுக் காளைகளைப் பூட்டுகிற வில் வண்டியிலே மானையும் மயிலையும் கொண்டு பூட்டலாமா?''

மகள் இவ்வாறு கேட்டதும், தாயாருக்கு அந்தக் கேள்வியின் நுட்பம் புலப்படவில்லை. மகளுடைய பேச்சின் பொருள் தெரியாமல், நோயுற்ற தனது விழிகளை அகலத் திறந்து மகளையே பார்த்தாள் அவள்!

''செல்வி, என்ன சொல்லுகிறாய் நீ? படிப்பும் பயிற்சியும் அதிகமாக அதிகமாக, நீ பேசுவது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே கண்ணே!''



தனது அன்னை இப்படிச் சொன்னதும் தாமரைச் செல்வி சிரித்தாள். சிரித்துக் கொண்டே சொன்னாள்:

''அம்மா, நம்முடைய குடும்பத்தில் ஆண் குழந்தைகள் இல்லை என்பதற்காக என்னை ஒரு ஆடவனைப் போல் வளர்க்கிறார்கள் அப்பா! அவர்களிடம் ஏதாவது சொன்னால் மனம் நொந்து போவார்கள்! ஆனாலும் இதுவரை விளையாட்டுச் சிறுமியாக இருந்தேன்; எல்லாம் சரியாய்ப் போயிற்று. இனி மேல் எனக்கு இந்த முரட்டுத்தனங்கள் எல்லாம் ஒத்து வராது! வயதாக வயதாக என் உள்ளத்தில் ஏதேதோ விசித்திரமான விருப்பங்கள் எழுகின்றன! என்னென்னவோ விந்தைக் கனவுகள் தோன்றுகின்றன! சங்கீதம் பாடவேண்டும் என்றும், சித்திரங்கள் வரைய வேண்டும் என்றும், சிற்ப சாஸ்திரம் படிக்க வேண்டும் என்றும், பரத கலையின் நுட்பங்களை யெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் ஏதேதோ ஆசைகள் என் மனத்தில் அரும்புகின்றன! ஆனை ஏற்றமும் குதிரை ஏற்றமும் எனக்குப் பிடிக்கவில்லை! நான் ஒரு பெண் என்றும் எனக்கென்று சில தனியான இயல்புகள் உண்டு என்றும் உணர ஆரம்பித்துவிட்டேன். அம்மா! மரத்தைப் போன்று வளராமல், ஒரு பூங்கொடியைப் போன்று, கொழுகொம்பைச் சுற்றி வளர்கிற ஒரு மெல்லிய கொடியைப் போன்று, நான் வளர விரும்புகிறேன். ஆனால், ஆனால் —''

''செல்வி!'' என்று மகளை அழைத்துக் கொண்டே அறையினுள்ளே நுழைந்த அனவரதர், அப்படியே திகைத்து நின்றார்! மகளுடைய முகத்தில் ஏதோ ஒரு கலக்கம் கவிந்து நிற்பதைக் கண்டதும், அவருக்கு ஒன்றும் ஓடவில்லை!

''என்னம்மா இது! சிறு குழந்தையைப் போல இப்படி —''

இவ்வாறு சொல்லிக் கொண்டே மகளுடைய குனிந்த முகத்தை நிமிர்த்தினார்! அவளுடைய கண்களிலே இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே உதிராமல் இமைகளிலே நின்று ஊசலாடியது!

''செல்வி! ஆயிரம் ஆனாலும், தாய்க்கு மகள் என்பது சரியாகத்தான் இருக்கிறது! அம்மாவைக் கண்டால் வீரம் தீரம் எல்லாம் எங்கோ பறந்து விடும் போலிருக்கிறது! அடி பெண்ணே!''

அன்பும் கனிவும் நிரம்பியவராய் ஜமீந்தார் இவ்வாறு சொன்னார். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தாயார், கட்டிலிலே சாய்ந்திருந்தவள், நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.


''இப்பொழுது சொன்னீர்களே 'அடி பெண்ணே' என்று, அதைத்தான் அவளும் சொல்லுகிறாள், இத்தனை நேரமும்...!''

இப்படிச் சொல்லிவிட்டு, முகத்திலே ஓர் அன்புக் கோபம் மேலிட்டவளாகக் கணவரையே பார்த்தாள் ஜமீந்தாரிணி! அனவரதருக்கு ஒன்றும் புரியவில்லை!

''என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள் இரண்டு பேரும்?'' என்று கேட்டார் ஜமீந்தார்.

''அதெல்லாம் சௌகரியமாகப் பேசிக் கொள்வோம். இப்பொழுது எங்கே இத்தனை அவசரமாகப் புறப்பட்டீர்கள், கோட்டும் விசிறி மடிப்பு அங்க வஸ்திரமும் போட்டுக்கொண்டு?'' என்று தன் கணவரைக் கேட்டாள் ஜமீந்தாரிணி.

''ஒன்றுமில்லை. சிவலப்பேரிச் சந்தைக்கு உயர்தரமான ஜாதிக் குதிரைகள் நாலைந்து வந்திருப்பதாக ஏலமலை ஜமீந்தார் தகவல் அனுப்பியிருக்கிறார். இந்தக் குதிரைகளில் நம்முடைய தாமரைச் செல்விக்குப் பிடிக்கக்கூடிய ஒரு வெள்ளைக் குதிரை இருக்கிறதாம். பொட்டும்



கழியும் சரியாக இருக்கிறதென்று நம்முடைய வல்லாள வேலனே வந்து சொன்னான். மகனைக் கூட்டிக்கொண்டு போய்க் காண்பிக்கலாமே என்று நினைத்தேன்!''

இப்படி வார்த்தைகளை இழுத்தார் அனவரதர்! மனைவியின் முகத்தில் இருந்த அன்புக் கோபம் இப்பொழுது ஆத்திரக் கோபமாக மாறியது.

''அது வெள்ளைக் குதிரையானாலும் சரி; வெள்ளை ஆனை யானாலும் சரி. இவளுக்கு வேண்டாம். இதுவரையில் இருந்த விளையாட்டுத்தனம் போதும். ஆமாம்! அந்தந்த வயதில் அதது எப்படி இருக்க வேண்டுமோ, அப்படித் தான் இருக்கவேண்டும். அந்தக் காலத்தில் எங்கள் அப்பா சொல்லுவார்கள், பெண் குழந்தைகளை நம் இஷ்டத்துக்கு நாம் வளர்க்கக் கூடாது என்று! யாருடைய வீட்டுக்காகவோ நம்முடைய வீட்டிலே வளர்கிறார்கள் என்று அடிக்கடி சொல்லுவார்கள்!''

ஜமீந்தாருக்கு இந்த இடத்தில் உதடு படபடத்தது.

''ஏன், யார் வீட்டுக்காக வளருகிறாள் என் செல்வி? ஏலமலை ஜமீனுக்காகவே அவள் வளருகிறாள். சிங்கம் புத்தூரையும் ஏலமலையையும் ஒன்று சேர்த்து ஆளுவதற்காகவே வளர்கிறாள். அதிலென்ன சந்தேகம்? நான் அவளுக்குச் சொல்லி வைக்கிற கல்வியெல்லாம், ஏலமலை இளைய ஜமீந்தாருக்கு மிகவும் பிடித்தமான ராஜ வித்தைகள்! நீ என்னத்தைக் கண்டாய்? பெண் பிள்ளை!''

இப்படி ஜமீந்தார் சொன்னதும் அம்மாள் பளிச்சென்று பதில் சொன்னாள்:

''ஆமாம். நான் பெண்பிள்ளை. நம்முடைய மகளும் பெண்பிள்ளைதான்!''

இப்படி மனைவி கூறியதும் அனவரதருக்கு மறுமொழி சொல்ல முடியவில்லை. ஆனாலும் சமாளித்துக்கொண்டு மேலே பேசினார்.

''அதெல்லாம் சரி; நீயும் நானும் வாழ்ந்த காலமா இது! இந்தியாவுக்கே சுயராஜ்யம் வந்துவிடப் போகிறது! பெண் பிள்ளைகளுக்கா வராமல் போய் விடும்!''

இப்படிச் சொல்லிக் கொண்டே ஒரு விநோதச் சிரிப்புச் சிரித்தார் ஜமீந்தார். மனைவிக்கு உண்மையிலேயே கோபம் வந்தது!

''அதெல்லாம் தெரியாது, எனக்கு! யாருக்குச் சுயராஜ்யம் வந்தாலும் வராவிட்டாலும் நம்முடைய மகளுக்கு அதெல்லாம் வேண்டாம்!''

''எது? சுயராஜ்யமா?''

''இல்லை; இந்தக் குதிரை ராஜ்யம்! இது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. உங்கள் மகளுக்கும் பிடிக்கவில்லை!''

ஜமீந்தார் தீயை மிதித்தவர் போலக் காலை உதறினார்.

''என்ன! என்ன! மகளுக்கும் பிடிக்கவில்லையா? என்னம்மா, என்ன சொல்கிறாய்? செல்வி, நீயுமா அப்படிச் சொல்கிறாய்?''

தாமரைச் செல்வி ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தாள். தகப்பனுடைய மனம் நொந்து விடக் கூடாதே என்று தயங்கினாள். ஆனால் கண்கள் கலங்கின.

ஜமீந்தாருக்கு மூளை குழம்பியது. விசிறி மடிப்பு அங்கவஸ்திரத்தைக் கழுத்திலிருந்து கழற்றினார். அப்படியே அதை உலைத்து உதறிக் கொண்டே அறைக்கு வெளியே வந்தார் மௌனமாக!

அன்றிரவு ஜமீந்தார் நிம்மதியோடு தூங்கவில்லை. இந்தப் பதினாறு ஆண்டுகளிலும் தாம் ஒரு தவறான பாதையிலேதான், தம்முடைய மகளுக்குப் பிடிக்காத ஒரு வழியிலேதான், அவளை



யும் அழைத்துக் கொண்டு சென்றாரா குதிரைமேலே!

அனவரதர் மீண்டும் மீண்டும் யோசனைசெய்தார். அறிவுக்கும் பூ l o r



சனைகளுக்கும் பெயர்பெற்ற ஒரு பெரிய பரம்பரையிலே வந்தவர் அவர்! எதையும் நுணுகிப் பார்க்கக் கூடிய கூர்மை அவருக்கு உண்டு. ஆனாலும் குழந்தைப் பாசத்தினால் அந்த அறிவுக் கூர்மை இத்தனை காலமும் மழுங்கிப் போய் இருந்ததா? உண்மையில் மகளின் மனப்பாங்கைப் புரிந்து கொள்ளாமலேதான்! இத்தனை நாட்களும் அவளை வளர்த்து வருகிறாரா?

இப்படி நினைத்துப் பார்த்ததும் அனவரதருக்கு இதயம் விம்மியது. ஏலமலை இளைய ஜமீந்தாரும், தமது சகோதரியின் மகனும், தாமரைச் செல்விக்கு முறைமாப்பிள்ளையும் ஆகிய பொன்னுத்துரைக்கு என்றே, தமது மகளை இதுவரை வளர்த்து வருகிறாரே! அந்தப் பொன்னுத்துரைக்கும் இதெல்லாம் குதூகலமாகத்தானே இருந்து வந்திருக்கிறது! அவனுடைய இலட்சியங்களுக்கும் மனப்போக்குகளுக்கும் இசைந்த முறையில்தானே ஒரு வீரப்




செயல்பட்டிருக்கும் பாதங்களுக்கு



ஸென்டர் கோர்ட் 10.95 கோல்ஃப் 14.95 ஸ்போர்ட்

செயல்பட்டிருக்கும் பாதங்களுக்குப் பொருத்தமாக பாடா ஸ்போர்ட்ஸ் ஷூக்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவை இதுவரை இல்லாத மிக சேர்த்தியும் ஆதரவு கொடுக்கக்கூடிய பதமான காலணிகள். டியூரோ-வெப், டக் அப்பர்ஸ், வழுக்கிவிடாத அடிப்பாகங்களுடன் உறுதியாகவும் மெத்தென் இருக்கும் உள் பாகமும் உடையவை. விசேஷக் கவனம் செலுத்தப்பட்டு, மிக நல்ல ஃபேப்ரிக்ஸ் (துணி போன்ற பொருள்) மூலம் தயாரிக்கப்பட்டிருப்பது பாடா ஷூக்களில் மட்டுமே காணலாம்.

Bata



'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ் நாடு' என்று பாடினார் பாரதியார். இன்று சிரோமணி ஸ்ரீ எஸ்.என். ஸ்ரீராமதேசிகன் அவர்கள் வள்ளுவத்தை வானவர் மொழியிலேயே ஆக்கித் தந்திருக்கிறார். சென்ற டிசம்பர் 31-ந் தேதியன்று அறத்துப்பாலின் இந்த சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு சித்தூர் சம்ஸ்கிருத பாஷா பிரசாரிணி சபையாரால் வெளியிடப்பட்டது. அப்போது முன்னாள் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி ஸ்ரீ எம். பதஞ்சலி சாஸ்திரி, சபாநாயகர் ஸ்ரீ எம். அனந்தசயனம் ஐயங்கார், ஷெரீப் ஸ்ரீ பி. சத்திய நாராயணா ஆகியோர் ஆசிரியர் ஸ்ரீ ராமதேசிகன் அறத்துக்கும், தமிழுக்கும், வடமொழிக்கும் ஒருங்கே ஆற்றியுள்ள பணியைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

பெண்ணாகத் தமது மகளை வளர்க்கிறார்? இதெல்லாம் செல்விக்குப் பிடிக்கவில்லையா? அப்படியானால் பொன்னுத்துரையின் மனப்பான்மைக்கும் தம் மகளின் இதயப் பாங்குக்கும் அத்தனை வித்தியாசம் இருக்கிறதா? தமக்கு இத்தனை நாட்களும் இது புரியாதபடி தாம் குருடாகவே இருந்து விட்டோமா?

இப்படி எண்ணினார் அனவரதர். மனம் வேதனைப்பட்டது.

பதினாறு ஆண்டுகளாகத் தமது உள்ளத்தின் அந்தரங்கத்தில் எண்ணெயும் திரியுமாகச் சுடர் விட்டுக் கொண்டிருந்த ஒரு கனவு, ஓர் இலட்சியம், ஓர் அகல் விளக்கு — அதை இப்பொழுது யாரோ ஊதி அணைத்து விட்டது போல் இதயம் இருண்டது அனவரதருக்கு!

மறு நாட்காலை படுக்கையிலிருந்து எழுந்ததும், 'விறு விறு' என்று மாளிகையின் உள் அறைக்குச் சென்றார் ஜமீந்தார். கட்டிலில் இருமிக் கொண்டே உட்கார்ந்திருந்தாள் மனைவி. அவளுக்கு அருகில், இரண்டு மூன்று தாதிகள் நின்று, வழக்கப்படி காலையிலேயே கொடுக்க வேண்டிய அயக்காந்த செந்தூரத்தைத் தேனிலே குழைத்துக் கொண்டிருந்தார்கள். ஜமீந்தாரைக் கண்டதும் எல்லாரும் நகர்ந்தார்கள். அனவரதர் அந்த நேரத்தில் அங்கு வருவது என்பது, எதிர்பாராத நிகழ்ச்சியாதலால் மனைவி வியப்போடு அவரைப் பார்த்தாள்.

''என்ன இது! காலம் காலையில் இப்படி எழுந்ததும் வேகமாக நடந்து வருகிறீர்களே?''

ஜமீந்தார் கட்டிலிலே மனைவிக்கு அருகில் உட்கார்ந்து கொண்டார்.


''செல்வி இன்னும் எழுந்து வந்திருக்க மாட்டாள் என்று தெரிந்தே அவசரமாக வந்தேன். உன்னுடைய உடம்பு இருக்கும் நிலையில் அதிகமாகப் பேசித் தொல்லைப்படுத்தக் கூடாது. ஒன்று மட்டும் கேட்கிறேன். பதில் சொல்லி விடு!''

இவ்வாறு சொன்னார் ஜமீந்தார்.

''என்ன இது! யாரிடமோ பேசுவது போல் இப்படியெல்லாம் சுற்றிச் சுற்றி வளைக்கிறீர்களே? இரவு சரியாகத் தூங்கவில்லையா? கண்ணெல்லாம் கலங்கியிருக்கிறதே! ஏன்?''

இப்படிக் கேட்டாள் மனைவி. ஜமீந்தார் சொன்னார்:

''எனக்கு இரவெல்லாம் உறக்கம் வரவில்லை. ஒரே ஒரு விஷயம் தெரிய வேண்டும். தெரிந்து விட்டால் பிறகு நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்து விடுவேன். கவலைப்பட மாட்டேன்.



இரண்டில் ஒன்று தீர்மானமாகத் தெரிய வேண்டும். செல்வியின் மனசுக்கு மாறுக ஒரு காரியம் செய்கிறவனில்லை நான்! அந்த மனசைச் சரியாகப் புரிந்து கொள்ளத்தான் இப்படித் துடிதுடிக்கிறேன். பெண் மனம் பெண்களுக்குப் புரியும். மகளுடைய மனம் தாய்க்குத் தெரியும். நீ சொல். பொன்னுத்துரையைக் கல்யாணம் செய்து கொள்வதில் இவளுக்கு இஷ்டமில்லையா?''

இப்படிக் கேட்டார் ஜமீந்தார், ஒரு குழந்தையைப் போல.

''இஷ்டம் இருக்கிறதோ இல்லையோ அது. அவளைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்களே கேளுங்களேன். மகளிடம் கேட்பதற்கு என்ன தயக்கம்? ஆனால் எனக்கு என்ன படுகிறது என்றால்—''

''என்ன படுகிறது சொல்!''

''அவளுக்கு இஷ்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்கள் சொல்லை மீறுகிறவள் இல்லை அவள்! ஆனால் ஒன்று. பொன்னுத்துரையின் மனப்போக்குக்கும், செல்வியின் மனப்போக்குக்கும் ஒத்து வரும் என்று எனக்குப் படவில்லை.''

இவ்வாறு தீர்மானமாகச் சொன்னாள் ஜமீந்தாரிணி. சொல்லி விட்டு மறு விநாடியே, எதற்காக இப்படி வெளிப்படையாகச் சொன்னோம் என்று வருந்துபவள் போல், கணவரின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள் அவள்!

''பூவல்லி! நீ கலங்காதே! இப்படித் தெளிவாக நீ சொன்னதே சரி. நல்லதாய்ப் போயிற்று. இதைப் போய்க் குழந்தையிடம் கேட்கவேண்டுமா நான்! வேண்டாம்! என் விருப்பத்தை மீறாத மகள் என்றால், அவள் விருப்பத்தை மீறாத தகப்பனாக அல்லவா நான் இருக்க வேண்டும்!''


இப்படிச் சொன்னதும் மனைவியின் முகம் குழம்புவதை ஜமீந்தார் கவனித்தார்.

''வல்லி! நீ கவலைப்படாதே! எனக்கு இதில் எவ்விதமான மன வருத்தமும் இல்லை. நமக்கு இருப்பது ஒரே மகள். அவளுடைய மனம் நோகக் கூடாது; அவளுடைய கண் கலங்கக் கூடாது. அந்த எண்ணத்தோடு தான், அவளுடைய மனசைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் இப்போது வந்தேன். இந்தப் பதினாறு வருஷத்திலும் அதைப் புரிந்து கொள்ளாமல் தான் இருந்து விட்டேன். இனி மேலும் அப்படி இருப்பது மடமை. இனி நான் அவளுடைய விருப்பம் எப்படிச் செல்கிறது என்பதிலேயே கருத்தாக இருப்பேன். இதுவரை அவளை என் இஷ்டப்படி வளர்த்தேன். இனி அவள் இஷ்டப்படி அவள் வளர்வதற்கு நான் வகை செய்ய வேண்டும். நீ நிம்மதியாக இரு. எனக்குக் கோபமோ, துயரமோ கிடையாது. நிம்மதியோடும் முழு அமைதியோடும் தான் இப்படிச் சொல்லுகிறேன்.''

இப்படிக் கூறிவிட்டு மிகுந்த பரிவோடு மனைவியின் தலையைத் தாங்கிப் பிடித்து மெதுவாகச் சாய்த்துக் கொண்டே, அவளைப் படுக்கும்படி செய்தார் ஜமீந்தார். பிறகு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்.

ஃ ஃ ஃ

அன்று முழுதும் ஜமீன் மாளிகையில் வேலைக்காரர்கள் எல்லாரும் இதைப் பற்றியே பேசிக் கொண்டார்கள்! காலையில் எழுந்து வந்த ஜமீந்தார், நேரே விறு விறு என்று நடந்து சென்று, ஜமீந்தாரிணியிடம் ஏதோ இரகசியம் பேசினார் என்ற செய்தி, மாளிகை முழுதும் பரவி, மாளிகைக்கு வெளியேயும் போய் ''இரகசியமாக'' ஒலிபரப்பாயிற்று! ஜமீன் காரியஸ்தர்கள், நிர்வாகிகள், எல்லாரும் 'கசமுச' என்று பேசிக் கொண்டார்கள். சிலர் ஜமீந்தாரின் மகளுக்குத் திருமணத் தேதி நிச்சயமாகி விட்டது என்று சொன்னார்கள்! வேறு சிலர் ஏலமலைக்குப் புறப்பட்டுப் போய் இந்த நற்செய்தியைத் தெரிவிக்க வேண்டும் என்று கிளம்பினார்கள். ஆனால் சிங்கம் புத்தூர் மாளிகையிலேயே தன்னுடைய காலில் நகம் முளைத்த நாள் முதலாக, நெல்லையும் குத்தித் தவிடும் பார்த்துள்ளவரான மீசைக்கார வல்லாளவேலர்



மட்டும், ஒன்றுமே பேசாமல் 'ஹும்' என்று இருந்தார்! 'இதில் ஏதோ வில்லங்கம் இருக்கிறது!' என்று அடிக்கடி தமக்குள் தாமே மந்திர உச்சாடணம் போல் சொல்லிக் கொண்டார் அவர்! அதோடு நில்லாமல், தாதிப் பெண்கள் யாரிடமாவது ஏதாவது தகவல் அகப்படுமா என்று மௌனமாக இருந்தவாறே, நோட்டம் பார்த்துக் கொண்டிருந்தார்!

ஃ ஃ ஃ

அன்று, மறு நாள், அதற்கு மறு நாள், மூன்று தினங்களிலும் யாருக்கும் எந்த விதமான செய்தியும் தெரிய வழியில்லை! நான்காம் நாட்காலையில் சிங்கம்புத்தூர் ஜமீன் மாளிகையின் எதிரே, அனைவரதருடைய "கோச்" வண்டி வெளியே புறப்படுவதற்குரிய முறையில் குதிரை பூட்டி நின்றது! மீசைக்கார வல்லாளவேலர் அந்த ஆஸ்தானத்தின் 'ரத சாரதி,' யாகிய கப்பையாவை மேலும் கீழும் பார்த்தார்.

"ஏலே கப்பையா, என்னலே, பேச்சு மூச்சே காணுமே. நமக்கும் பெப்பேயா?" என்று வார்த்தைகளைச் சன்னமாக இழுத்து நீட்டினார் வண்டிக்காரனைப் பார்த்து!

"கண் ஆணை, எனக்கு ஒன்னுமே தெரியாது சாமி!" என்று இரண்டு கைகளையும் கண்ணிலே தொட்டு ஒற்றிக்கொண்டு சொன்னான் கப்பையா!

"ஏலே, அப்பாவும் மகளும் எப்பவும் குதிரையிலே ஏறிச் சவாரி பண்ணிக்கிட்டுப் போவாகளே, இன்னைக்கி என்னலே சாராட்டு?" என்று மறுபடியும் கேட்டார். கப்பையா ஒன்றும் பதில் கூறாமல் தன் கைகளை அகல விரித்தான்.

ஃ ஃ ஃ



வல்லாள வேலரும் கப்பையாவும் பேசிக் கொண்டிருந்தபோது சிவன் கோயிலிலிருந்து பிரசாதம் எடுத்துக் கொண்டு மாளிகைக்குள்ளே நுழைந்தார் சிவஞான ஓதுவா மூர்த்தி. அவருடைய வரவைக் கண்டு மேலும் வியப்பு அதிகரித்தவராக வல்லாள வேலர் கப்பையாவை ஏற இறங்கப் பார்த்தார். எல்லாரும் இப்படித் திகைப்பிலே ஆழ்ந்திருந்த சமயம் மாளிகைக்குள்ளிருந்து ஜமீன்தாரின் பேச்சுக் குரல் கேட்டது. வல்லாள வேலர் காதைத் தீட்டிக் கொண்டு கவனமாகக் கேட்டார்.

"செல்வி, நாம் திரும்புவதற்கு நீண்ட நேரம் ஆகலாம். ஆகையால், அம்மாவுக்குக் கொடுக்க வேண்டிய மருந்துப் பொட்டலங்கள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்து விட்டு, அப்படியே தாதியிடமும் விவரமாகச் சொல்லி விட்டு வாம்மா. உன்னுடைய மனத்துக்கு மிகவும்பிடிக்கிற இடத்துக்குத்தான் உன்னை இப்போது அழைத்துச் செல்லப்போகிறேன்!" என்று சொல்லிக் கொண்டிருந்தார் அவர். (தொடரும்)

மனம்போனபடி



வடவேங்கடவன்

அதிசய ஒற்றுமை

'அர்த்தம்' என்ற சொல் வடமொழி. அதற்குப் பொருள் இரண்டு உண்டு. ஒன்று செல்வம் என்பதாகும். அர்த்த சாஸ்திரம் என்ற சாணக்கியரின் நூலின் பெயர் இவ்வாறு வந்தது தான். ஒரு சொல்லின் கருத்து அல்லது பொருள் என்பது இன்னொன்று; இவ்வார்த்தைக்கு அர்த்தம் தெரியவில்லை என்கிறோமே, அந்த அர்த்தம்.

தமிழில் அர்த்தம் என்பதற்கு இணையான சொல் பொருள் என்பதாகும். வடமொழியில் உள்ள இரண்டு கருத்துக்களும் இத்தமிழ்ச் சொல்லுக்கும் உள்ளன. பொருள் தேடிப் போனான், அரும் பதங்களுக்குப் பொருள் கூறுக— இவ்விடங்களில் பொருள் என்பது முறையே செல்வம், கருத்து என்பவற்றைக் குறிக்கிறது.

இது ஓர் அதிசய ஒற்றுமை.

இதைத் தமிழ், இந்தி மொழியிடையேயும் காணலாம்.

கால் என்ற தமிழ்ச் சொல்லுக்கு நான்கிலே ஒரு பகுதி என்பது ஒரு பொருள்; மற்றொன்று, நாம் நடக்கப் பயன்படும் உறுப்பு. இந்தியில் கால் என்பதற்குச் சரியான சொல் 'பாவ்' என்பதாகும். அந்தச் சொல்லுக்கு அம்மொழியிலும் இதே இரு அர்த்தங்கள் உள்ளது வியப்புக்குரியதுதான்.



பதிலுக்குப் பதில்

வாசற் கதவைத் திறந்தேன். பக்கத்து வீட்டுக்காரர் தோட்ட வேலை செய்து கொண்டிருந்தார். ஏதோ பாத்திகளைக் கொத்திக் கிளறி விட்டுக் கொண்டிருந்தவர் இடது புறக் கையினால் மூக்கு நுனிக்கு நழுவியிருந்த கண்ணாடியை உயரே தள்ளி விட்டவாறு தலை நிமிர்ந்தார்.

இரண்டு பேரும் கும்பிடு போட்டோம்.

''தோட்ட வேலை நடக்கிறாற் போலிருக்கு!'' என்றேன் நான்.

''ஆமாம்! வேண்டுமே, ஏதாவது பொழுது போக்கு!''

அவருடைய வேலை முடிந்து விட்டது போலும். முகத்தைத் துடைத்துக் கொண்டு என்னருகே வந்தார்.

''உங்களுக்கென்ன சார் ஓய்வு நேரத் தொழில்?'' என்று என்னைக் கேட்டார்.

''அப்படி ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லை, சார்!''

''பொழுது போக்குக்காவது வேண்டுமே ஏதேனும்?''

நான் என்றுமே தோட்ட வேலையில் மனம் ஈர்த்து நின்றதில்லை. எனக்கு அவ்வேலை அவ்வளவாகத் தெரியவும் தெரியாது. அலுவலகத்திலும் ஓடியாடி உடலுழைப்பு வேலையே பெரும்பாலும் செய்யும் நான் வீடு வந்த பின்பும் தோட்ட வேலை போன்றதொரு குனிந்து நிமிர்ந்து உழைக்கும் தொழிலை ஏற்பேனா? நூல் நூற்றல் ஒன்றுதான் எனக்கு உகந்த ஓய்வு நேரப் பணியாக இருந்துள்ளது. சொன்னேன்.

''உங்களுக்குத் தோட்ட வேலையில் ஈடுபாடு கிடையாது போலிருக்கிறது.''

சிறிது நேரம் பொறுத்து அவர் ஒரு நல்ல கேள்வியிட்டார். ''சார்! நூற்பதை விடத் தோட்ட வேலை ஒரு விதத்தில் மேல். எப்படியென்றால், நான் காலையில் ஒரு மணி, மாலையில் ஒரு மணி தோட்டத்தில் வேலை செய்கிறேன். இரண்டே மணி தான் நான் வேலை செய்தா



லும் தோட்டம்பாட்டில் நாள் முழுதும் வளர்ந்து கொண்டு தானிருக்கிறது. ஆனால் நீங்கள் இராட்டையை மூடி வைத்தீர்களானால் நூல் தானாக நீண்டு கொண்டு போவதில்லை. நீங்கள் நூற்கும் அவ்விரண்டு மணியோடு சரி நூலின் வளர்ச்சி. ஆனால் செடியும் கொடியும் அப்படியல்ல. இதற்கு என்ன சொல்கிறீர்கள்...?''

நான் சிந்திக்கலானேன்.

என்னவோ பதில் தோன்றியது, சொன்னேன். கேட்டு விட்டு அவர், ''உங்கள் பதில் பரவாயில்லை, சார்!'' என்று பாராட்டினார்.

நான் சொன்னது இதுதான்:

''நீங்கள் பார்க்கும் விதம் தவறு. ஏனென்றால் உங்களுக்கு ஒரு நாளில் மிக அதிகமாகப் போனால் ஒன்றரை, இரண்டு மணிப் போதுக்குத்தான் காய்கறி தேவை. பகல் சாப்பாடு, இராச் சாப்பாடு முக்கால் முக்கால் மணி, சிற்றுண்டி ஓர் அரை மணி என்று வைத்துக் கொண்டால்கூட, ஒரு நாள் போதில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் அந்தக் கத்திரிக்காயும் வெண்டைக்காயும் உங்களுக்கு வேண்டாம். ஆனால் நாள் முழுதும், ஆயுள் முழுதும் உடை அணியில் ஏதாவது வேண்டித்தானிருக்கிறது. அத்தகைய உடைக்காக அன்றாடம் ஓரிரு மணி நூற்றல் ஒன்றும் மோசமில்லை.''

காக்காய் புராணம்

மணி முற்பகல் பத்தரை இருக்கும். 'கா கா' என்ற குரல் அடுத்த வீட்டிலிருந்து வந்தது. அங்கு புதிதாய்க் குடி வந்துள்ளவரது வயதான தாயார் ஓட்டின் மேல் ஒரு பிடிச் சோற்றை வைத்து விட்டு உள்ளே சென்றார்.



சாளரத்தின் வழியே நோக்கினேன். ஒரு காகம் வந்தது. சோற்று உருண்டையைக் கிளறி விட்டு ஒதுங்கிச் சென்று கூவியது. இன்னொன்று வந்தது. இரண்டுமாய்க் கரைந்தன. சிறிது நேரத்தில் இனக் குரலை எழுப்பிக் கொண்டு ஒரு பெரும் பட்டாளமே சேர்ந்து விட்டது.

பட்டாபிராமப்பிள்ளை வீதிச் செட்டியார் வீட்டில் கஞ்சி காய்ச்சி ஊற்றுகையில் முற்றுகையிடும் பரதேசிகளுள் இத்தகைய ஒற்றுமையைக் காண முடிகிறதோ? அங்கு எத்தனைச் சண்டை, சச்சரவு, அடிபிடி, மோதல்! இங்கு எவ்வளவு அமைதி!

இதில் வேடிக்கை இந்த எதிர்மறை கூட அல்ல.

காகத்திடம் மனிதன் நையாண்டித்தனமாகத்தான் எதையும் காண்கிறான். அதன் நற்பண்பை விட்டுவிட்டு, அதன் கரிய நிறம், சாய்ந்த பார்வை, அவசர நீராடல் — இவற்றைக் கிண்டல் செய்கிறான். காக்காய் கரி, காக்காய்ப் பார்வை, காக்காய்க் குளி, இப்படித் தப்பேதான் கண்ணில் படுகிறது.

யார் துணை?

தலைவர் ராஜாஜி அவர்கள் ஹைதராபாத் நகரத்தில் ஆங்கில மொழியை ஆதரித்துப் பேசியபோது ஆங்கில இலக்கியச் செல்வத்தின் கருத்துச் செறிவைப் பற்றி இயம்பி விட்டு, ஷேக்ஸ்பியரும், மில்டனும் ஆக்கிய படைப்புக்கள் நம் சரஸ்வதி தேவியின் அருட்செல்வங்களல்லவா என்று கேட்கிறார்கள். இக்கேள்வி எவரையும் மயக்கிவிட வல்லது. அல்ல என்று எவரும் கூற முடியாத கேள்வி.



தலைவர் ஆங்கில மொழிக்குப் பக்தித் துறை மூலம் ஆதரவு தேடும்வழி மிகப் பிரமாதம்.

எனக்கு என் இளமைக் குழப்பம் ஒன்று நினைவில் எழுந்தது.

முருகனைத் தமிழ்க் கடவுள் என்று அன்போடு அழைப்பதைக் கேட்டிருந்தேன். எனக்கு அவ்வாண்டு ஆங்கிலத்தில் மிகக் குறைவான மதிப்பெண் கிடைத்திருந்தது. எக்கடவுளை வேண்டிக் கொள்வது என்பது என் முன் அப்போது தோன்றி நின்ற மிகப் பெரிய பிரச்னை. முருகனோ தமிழ்க் கடவுள் ஆயிற்றே. ஆங்கிலப் பாடத்தில் அதிக மதிப்பெண் பெற எந்தத் தெய்வம் உதவும்?

சுப்பிரமணிய சுவாமிக்கு ஆங்கிலம் தெரியாது என்று நம்பினேன்!

சிறியவர்களுக்குப் புரிந்தது

தலைக்கு மேலே மின்சார விசிறி சுழன்று கொண்டிருந்தது. நண்ப

ருடைய பெண்கள் — பெரியவளுக்கு ஏழு வயதிருக்கும்; சிறியவளுக்கு நான்கு ஐந்து இருக்கலாம். வந்தனர்.

''விசிறியை நிறுத்தி விடம்மா; வேண்டாம்'' என்று நான் கூறினேன். உடனே பெரியவள் சுவர் மேல் பலகையின் மீது இருந்த சுழல் பித்தானைத் திருகி விட்டு, நிறுத்தினாள். அப்படியும் விசிறி சிறிது நேரத்துக்குச் சுற்றிக் கொண்டு தான் இருந்தது. அப்புறம் தான் நின்றது.



சிறியவள் கேட்டாள்: ''என்னடி இது? நிறுத்தின அப்புறமும் சுற்றிக் கொண்டிருக்கிறது?''

பெரியவள் ஒரு நிமிஷம் யோசித்திருப்பாளோ என்னவோ? 'டக்' என்று சமாதானம் சொன்னாள்: ''பித்தானைத் திருகின போது அந்த இடத்திலிருந்து விசிறி வரை கம்பியில் இருந்த மின்சாரம் ஆகிற வரை சுற்றிக் கொண்டு தானே இருக்கும்?'' சிறியவளுக்குப் புரிந்து விட்டது போலும். அவள் வாளா விருந்தாள்.

வழி பிறந்தது

இந்திக்கார நண்பர் ஒருவர், ''உங்களை யொன்று கேட்கிறேன்'' என்று ஆரம்பித்தார்.

''தாராளமாக.''

''நீங்கள் சீதா சீதா என்று சொல்ல மாட்டீர்களோ?'' என்றார்.

''எனக்கு விளங்க வில்லையே! ஏன் சொல்லாமல் என்ன?''

''நீங்கள் சீதை என்பதைக் கேட்டிருக்கிறேன். அதே போலத்தான் பூஜா என்பதைப் பூஜை என்கிறீர்கள்.''

நான் சொன்னேன். ''ஆம்! நாங்கள் தமிழில் வடமொழிச் சொற்களின் இறுதி ஆகாரத்தை ஐகாரமாக்கி விடுவோம்.''

''ஏன்?''

அவருக்கு எப்படி விளக்குவது என்று எனக்குப் புலப்பட வில்லை. ஏதோ சொல்லி வைத்தேன். ''நீங்கள் ஹோட்டலுக்குப் போனால் சாப்பிடுகிறீர்களல்லவா எங்கள் பலகாரங்களை?''

''ஆமாம்! தோசா, வடா!'' என்றார்.

உடனே பிடித்துக் கொண்டேன். ''அவை, உண்மையில் தோசை, வடை தாம். அவை எப்படி உங்களிடம் தோசா, வடா என்றாகின்றனவோ அது போலத் தான் சீதையாகச் சீதா மாறுவதும்.''





பாரதம் பெற்ற புகழ்



குண்டுமணி

இங்கிலாந்தில் எம். ஸி. ஸி. கிரிக்கெட் பந்தயம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. நாட்டிங்காம் ஷயரைச்சேர்ந்த டாமி ஒட்ஸ் அம்பயராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். ரீவ் அப்பொழுது எதிர்த்த கோஷ்டிக்கெதிராகப் பந்து வீசிக் கொண்டிருந்தார். ஒரு பந்து 'ஸ்லிக்' ஆகி விக்கெட் கீப்பரிடம் சென்றது. அம்பயர் ஒட்ஸ் தாம் அம்பயராக நிற்கிறோம் என்பதை மறந்து, ஆட்டக்காரராக நிற்பதுபோல் எண்ணி, ''ஹௌ இஸ் தட்?'' என்று உரக்கக் கத்தி விட்டார். அடுத்தகணம் பௌலர் ரீவ் என்ன பண்ணினார் தெரியுமா? அவரது குரலுக்கு இசைந்தது போல் 'அவுட்' என்று கூறிவிட்டார். அடுத்த நிமிஷத்தில், பந்தை பார்த்த பாட்ஸ்மேன் மிகுந்த திருப்தியோடு மைதானத்தை விட்டு வெளியேறிச் சென்றார்.

இப்படிப்பட்ட பண்பு மிக்க நாட்டிலிருந்து, கிரிக்கெட்டின் தாயகத்திலிருந்து வந்த ஆட்டக்காரர்கள் நம் பாரத கோஷ்டியோடு ஐந்து டெஸ்ட் பந்தயங்கள் ஆடினர். முதல் மூன்று டெஸ்ட் பந்தயங்கள் வெற்றி தோல்வியின்றி முடிந்தன. கடைசி இரண்டு டெஸ்டுகளிலும் பாரத கிரிக்கெட் கோஷ்டியினர் வெற்றி பெற்று ஜயக்கொடி நாட்டினர். குருவுக்கு மிஞ்சின சிஷ்யராகி விட்டனர் பாரத கிரிக்கெட் ஆட்டக்காரர்கள். இந்திய கோஷ்டியினருக்கு 'ரப்பர்' கிட்டி விட்டது. இரண்டு பிரமாத வெற்றிகளுக்குப் பிறகு.

கல்கத்தா டெஸ்ட் பந்தயத்தில் கோட்டை விட்டதால் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியினர் பீல்டிங்கில் நெருப்பாகவும், ரன்களை விஷம் போல் எண்ணிக் குவிக்கவும் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். ஆனால் சலீம் துரானியின் பந்து வீச்சினால் அவர்கள் ஜபம் சாயவில்லை. இரண்டு இன்னிங்ஸிலும் பத்து விக்கெட்டுகளைக் கிடுகிடுவென்று சரித்து இங்கிலாந்து ஆட்டக்காரர்களின் தோல்விக்கு இவர் வழி வகுத்தார். இவருக்குக் கிரிக்கெட் இவரது ரத்தத்தோடு கலந்தது என்றால் அது வெறும் வார்த்தையில்லை. அவர் தந்தையும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டிக்கெதிராக டெஸ்ட் பந்தயத்தில் கலந்து கொண்டிருக்கிறார். பாரதத்தின் ஜெயத்தில் துரானிக்குப் பெரும் பங்குண்டு.

பரம்பரையாகக் கிரிக்கெட் ஆட்டம் ரத்தத்தோடு ஓடிய மற்றோர் ஆட்டக்காரர், பட்டோடி நவாப். இங்கிலாந்து கிரிக்கெட் ஆட்டக்காரர்களே போற்றிப் பாராட்டும் 'ஜொலிக் பாட்ஸ்மேன்' பட்டோடி. முதன் முதலில் இந்தியாவின் வெற்றிக்கு அஸ்திவாரமிட்டவர் பட்டோடி என்றால் அது நூற்றுக்கு நூறு உண்மை. அவரது இரண்டு அருமையான ஸிக்ஸர்களும், பல பவுண்டரிகளும் ரஸிகர்களின் கண் முன்னால் என்றும் நிலைத்து நிற்கும். பாரதத்துக்காக ஆடிச் சதத்துக்கு மேல் எண்ணிக்கை எடுத்துப் புகழ்பெற்றவர்.


வெற்றிக் கோபுரத்துக்கு அஸ்திவாரமிட்டால் மட்டும் போதுமா? கோபுரம் எழ வேண்டாமா? அந்தக் கோபுரத்தை உயர்த்துவதில் இன்ஜினீயரும், நட்கர்ணியும் முன் நின்றனர். முதல் இன்னிங்ஸில் 428 ரன்கள் கிடைத்தன என்றால் எல்லாருடைய பாராட்டும் இவர்களுக்குக் கிடைத்ததில் வியப்பென்ன?

கல்கத்தா டெஸ்டில் காப்டன் கண்டிராக்டர் அடிபட்டதால் கலந்து கொள்ள முடியவில்லை. அதனால் என்ன? ஐந்தாவது டெஸ்டில் தம் முழுத் திறமையையும் பயன்படுத்திப் பாரதத்தின் புகழை உயர்த்தி விட்டார். முதல் இன்னிங்ஸில் எண்பத்தாறு ரன்களும், ரிச்சர்ட்ஸன் அடித்த பந்தைப் பிடித்த அழகும் காப்டன் இன்னிங்ஸாக விளங்கின. மேற்கு இந்தியத் தீவு விஜயத்துக்கும் இவரே காப்டனாகச் செல்கிறார். இதே போல் அவருக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிட்ட வாழ்த்துவோம்.

பாரதத்தின் திறமையான பீல்டிங்கினால் இங்கிலாந்து கோஷ்டியின் ஆட்டம் சோபிக்க இயலாமல் போயிற்று. அப்படியும் இரண்டு ஸ்மித்களும் அடித்த மூன்று ஸிக்ஸர்களும் அவர்களுக்கும் ஆட்டம் உண்டு என்பதை நிரூபித்தன. இங்கிலாந்து கோஷ்டியில் கடைசி ஆட்டக்காரராக வந்த டி. ஆர். ஸ்மித் முதல்தர ஆட்டக்காரராகப் பரிணமித்தது பாராட்டத் தக்கது. இங்கிலாந்து

இந்திய கிரிக்கெட் கோஷ்டி.





இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியில் சிலர்.

கோஷ்டியில் இந்திய கோஷ்டியின் ரன்களுக்குப் பூட்டுப் போட்டு, விக்கெட்டுகளையும் வீழ்த்திப் புகழ் பெற்றவர் லாக். இவர் பழம் பெருச்சாளியாயிற்றே! இவரது அபார சாதனைக்குக் கேட்பானேன்?

பழங்காலத்தில் பெரும் பண்ணையார் ஒருவர் மாட்ச் ஆடப் புறப்பட்டாராம். அவர் கூடவே தம் பட்லரையும் அழைத்துச் சென்றாராம். அன்றைய மாட்சுக்கு பட்லர்தான் அம்பயர். தம் எஜமானருக்கெதிராக அவரால் சொல்லிவிட முடியுமா? அவர் எஜமானரை, எதிர்த்த கோஷ்டியினர் பதினான்கு முறை எல். பி. டபிள்யூ, பந்தைப் பிடித்தல் ஆகியவற்றுக்கு 'அவுட்'டாக்கி அம்பயரிடம் முறையிட்டனர். ஊஹூம்! அம்பயர் ஒரு சிறிதும் மசிய வில்லை. கடைசியில் அந்தக் கோஷ்டி காப்டன் லட்டு போல் மெதுவாகப் பந்தை எறியச் சொன்னார். அந்தப் பெரும் பண்ணையார் பந்தை அடிக்க முடியாமல் தாம் இருந்த இடத்தை விட்டு வெகுதூரம் நடந்தார். விக்கெட் கீப்பர் பந்தைப் பிடித்து ஸ்டம்ப் அவுட் செய்ததும் பண்ணையார்கூடத் தாம் அவுட்டாகி விட்டதாகக் கருதிப் புன்முறுவல் பூத்தார். ஆனால் அம்பயர் மறுபடியும் அசையாமல் சிலையாகவே நின்றார். இதைக் கண்டு விக்கெட் கீப்பர், பட்லர் அம்பயரிடம், "ஐயா! நாங்கள் பல வழிகளில் 'அவுட்'டாக்கியும் பலிக்கவில்லை; இனி எங்களுக்கு வேறு வழி தெரிய வில்லையே?" என்று அங்கலாய்த்துக் கொண்டாராம்.

அம்பயர் என்பது மிக பொறுப்பான பதவி. நீதிபதியைப் போல் நடுக் கண்ட நியாயம் வழங்கவேண்டும் அவர். 'ஹௌஸ் இஸ் தட்?' என்று உரக்கப் பல தடவைகள் கூச்சலிடுவார்கள் பீல்டிங் செய்பவர்கள். உண்மையை உள்ளபடி எடுத்துக் கூறும் பண்பும், கத்தலுக்கு அசையாத நெஞ்சுரமும் இவருக்குத் தேவை. சென்னையில் நடைபெற்ற ஐந்தாவது டெஸ்டில் அம்பயர்கள் நேர்மையான முறையில் நடந்து கொண்டதை இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியினர் பாராட்டினார்கள்.

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியினர் இந்தியாவின் இரண்டாவது இன்னிங்ஸில் படபட வென்று விக்கெட்டுகளை வீழ்த்திய போது ஆட்டத்தில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் மஞ்ச்ரேகர் சளைக்காமல் ஆடி எண்பத்தைந்து ரன்கள் எடுத்து, திருப்பத்தினால் பயன் விளையாமல் செய்தார்.

ஐந்தாம் நாளன்று ஏழு விக்கெட்டுகளை இழந்த பிறகும் இங்கிலாந்து கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் சளைக்காமல் நன்றாக ஆடி ரன்களைக் குவித்துக் கொண்டிருந்தனர். ஒருவேளை இந்தியாவின் எண்ணிக்கையைவிட அதிகமாக எடுத்துவிடப் போகிறார்களோ என்று பயமாக இருந்தது. இந்தச் சமயத்தில் பெங்களூர் ஆட்டக்காரர் பிரசன்னா பிரசன்னமாகி ஒரு விக்கெட்டை எடுத்தார். அதுமட்டும் போதுமா? இந்தியா வெற்றி பெற வேண்டுமானால் இன்னும் இரண்டு விக்கெட்டுகள் விழ வேண்டுமே? 'தலைக்கு மேல் வெள்ளம் போன பிறகு சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன?' என்கிற கதையில் ஆக்ரோஷத்துடன் பந்தை அடிக்கத் தொடங்கி விட்டனர் இங்கிலாந்து ஆட்டக்காரர்கள். இக் தருணத்தில் ஆல்ரௌண்டர் போர்டே இரண்டு விக்கெட்டுகளையும் எடுத்தார். கடைசி விக்கெட் விழுவதற்கு லாக் அடித்த பந்தைப் பிடித்து நட்கர்ணி ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்து வைத்தார். அந்த இரண்டு விக்கெட்டுகளையும் போர்டே எடுத்த விதமும் கிரிக்கெட் ரசிகர்களின் உள்ளத்தில் நிரந்தரமாக நிலைபெற்றிருக்கும். ஏன், இந்தியாவின் இரண்டாவது வெற்றியும் கிரிக்கெட் சரித்திரத்தில் நிரந்தரமாக எழுதப்பட்டு, பாரதத்தின் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

ஒரு நாள் கல்யாணம் நடத்திச் சம்பந்திகளையும், விருந்தினர்களையும் திருப்திப்படுத்துவதற்குள் நமக்குப் போதும் போதுமென்றாகி விடுகிறது. ஆதி நாளைப் போல் ஐந்து நாள் கல்யாணம் நடத்துவது என்றால் இலேசான காரியமா? இப்பொழுது ஐந்து நாள் கல்யாணம் போல் கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச்தான் நடைபெறுகிறது. சம்பந்தியான இங்கிலாந்து கோஷ்டியினரையும், வந்திருக்கும் கிரிக்கெட் ரசிகர்களையும் நல்ல முறையில் உபசரித்து நடத்துவதிலுள்ள சிரமம் ஐந்து நாள் கல்யாணம் நடத்திப் பார்த்தவர்களுக்குத் தெரியும். ஐந்து நாள் டெஸ்டையும் கல்யாணம் போல் ஜாம்ஜாமென்று நடத்தி முடித்த சென்னை கிரிக்கெட் சங்கத்தினரையும், காரியதரிசி ஸ்ரீராமையும் ஸ்ரீ வாசனையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.



இலஞ்சமா!

ர. வேங்கடரத்தினம்

இவ்வளவு பெரிய சென்னை மாநகரத்துக்கு வெளியூர்ப் பஸ் நிறுத்தம் அமைக்க இந்தக் 'கீக்கட'மான பிராட்வேதான் அகப்பட்டதா? பஸ்கள் அடைத்துக் கொண்டு நிற்கிற இடத்தைத் தவிர பிரயாணிகளுக்கென்று வசதியாக இடம் ஒதுக்கியா வைத்திருக்கிறான்? எந்தப் பக்கம் பார்த்தாலும் எச்சில், ஒரே வெற்றிலைப் பாக்குப் புகையிலைத் துப்பல், குப்பைக் கூளம், ஆரஞ்சு, சாத்துக்குடித் தோலி! வேறு வினையே வேண்டாம்! கேட்டால் சொல்வான், கண்ட இடத்திலேயும் நாங்களா துப்பச் சொன்னோம் என்று? அதற்கென்று தொட்டியும் கூடையும் வைத்திருந்தாலும், நின்றபடியே நெடுக எச்சிலைத் துப்புகிற வழக்கம் நம்மவர்களை விட்டுப் போகிற வரை, ஓர் இடமும் துப்புரவாக இருக்க முடியாதுதான். இதற்குக் கூடச் சர்க்காரைக் குற்றம் சொன்னால்? மந்திரிகளும், மாவட்டக் கலெக்டர்களுமா இங்கே வந்து இப்படி எச்சிலும் குப்பையுமாய்ப் பண்ணி விட்டுப் போகிறார்கள்? எல்லாம் பொதுஜனங்கள் பண்ணிய வேலைதானே?

ஒரு விதத்தில் அவன் சொல்வதும் உண்மைதான். 'இங்கே துப்பவும்' என்று எழுதிப் பலகை ஒன்றைத் தொங்க விட்டுக் கீழே சிமெண்டுத் தொட்டியை வைத்திருக்கிறான். அதுக்கு மேலே அவன்தான் என்ன செய்வான்? நம்முடைய ஜனங்களோ வென்றால், அந்தப் பலகையில் ஓர் அட்சரம் தெரியாதபடி ஒரே புகையிலைச் சாறுக உமிழ்ந்து, கொப்புளித்துத் தள்ளியிருக்கிறார்கள். இங்கே துப்பவும் என்ற இரண்டு வார்த்தைகளும் போன இடம் தெரியவில்லை. பக்கத்திலே வரைந்திருந்த கையின் படமும் தெரியவில்லை.

போர்டு போட்டுக் கண்ட பலன்தான் என்ன?

யார் யாரைத் திருத்துகிறது! திருத்துகிறதற்கு இருப்பது தான் ஒருத்தரா, இரண்டு பேரா? வருவதென்று—சொல்லப்படாது, என்னவோ குட்டி போட்ட மாதிரி,—நாற்பத்துச் சொச்சம் ஆயிற்றே!

ஏது, டிக்கெட் கொடுப்பவன் வந்து விட்டான் போல் இருக்கிறதே? நம் சீட்டை வாங்கிக் கொண்டால், போய் உட்கார்ந்து கொண்டு விடலாம்.

''இந்தாப்பா, எனக்கு ஒரு டிக்கெட்டு வேலூர்!''

''வரிசையிலே வாங்க.''

எங்கே போனாலும் இந்தத் தொந்தரவு தான். வரிசையிலே வந்து நில்லென்கிறான். இவனை யார் என்ன செய்ய முடியும்? இவன் வைத்தது சட்டம். கேட்டால் காலம் மாறிப் போச்சு என்பான். அந்தஸ்துக்கு என்ன மதிப்பு இருக்கிறது? எல்லாரைப் போல் வரிசையிலே வந்து நிற்கவேண்டுமாம் நாமும். சரி, ஒழிந்து போ. உன் ராஜ்யம் நடக்கட்டும். ஏதோ தெரியாத்தனமாய்க் காரை 'சர்வீஸ்'க்கு அனுப்பி மாட்டிக் கொண்டு விட்டோம். இல்லா விட்டால், பேசாமல் காரிலேயே வந்து விட்டுப் போயிருக்கலாம்.


அப்பாடா! டிக்கெட் கொடுத்தான் புண்ணியவான்!

''போய் உட்காரலாம் எல்லாரும், அவங்கவங்க 'சீட்டு'லே.''

உத்தரவு கொடுத்தான், சீட்டுக் கொடுத்தவன். என்னவோ பெரிய சலுகை காட்டுகிறாற்போலத்தான்!

இந்த ஓரத்து இடமே தேவலை. ஒரு பக்கமாக இருக்கும். நடுவாந்திர ஊர்களில் இறங்குகிற ஏறுகிற பேர்வழிகளின் தொந்தரவு இல்லாமல் இருக்கும்.

அட, பாவி! இவனும் இந்தப் பஸ்ஸைக்கா வந்து தொலைய வேண்டும்? நடையிலே எவ்



வளவு ஒய்யாரம், பார்வையிலேதான் எவ்வளவு திமிர்! காலம் இப்போது இவனுக்கெல்லாம்தானே? 'லேபர் லீடர்' இல்லையா? ஊருக்காகப் போராடுகிற உத்தம புருஷர் ஆயிற்றே! நம் பக்கம்தான் பார்க்கிறான் தடிப் பயல்! நாம் பார்க்காதது போலப் பாசாங்கு பண்ணி விடலாம்.

அதென்னவோ, இப்படி நல்ல சமயத்திலே போய் மோட்டாரைக் கம்பெனிக்கு அனுப்பினது பரம முட்டாள்தனம். கௌரவமாகக் காரிலே வந்து விட்டுப் போகிறதை விட்டு விட்டு இப்படி நாம் 'சீப்'பட வேண்டாம். வேலூரிலேயே மிகப் பெரிய பனியன் தொழிற்சாலை முதலாளியாய் இருந்தால், இந்த ஊரிலே என்ன வந்தது? வரிசையிலே வா என்கிறான். போய் உட்கார் என்று சொன்னான்தான் போய் உட்காரலாம் நாமும். தனி மரியாதையா வாழ்கிறது நமக்கு இங்கே?

இதுவாவது பொது இடம் என்று சொல்லலாம். நேற்றைக்கு இரண்டு நாட்களும் 'செக்ரெடேரியட்'டில் மட்டும் என்ன வாழ்ந்தது? நாமும் இவனும் எதிரும் புதிருமாய்த்தான் உட்கார வேண்டியிருந்தது. முதல் நாம் போட்டு இந்தப் பயல்களுக்கெல்லாம் வேலை பண்ணி வைத்து, வயிற்றுக்கும் வழி பண்ணி வைத்திருந்தால் என்ன? சமமாகத்தான் உட்கார வேண்டியிருக்கிறது. கேட்டால், சொல்வான், இது முக்கூட்டு மகாநாடு. தொழிலாளி — முதலாளி பிணக்கைத் தீர்த்து வைப்பதற்காகத் தொழில் அமைச்சர் கூட்டிய மகாநாடு. முக்கூட்டு என்ற பேரின் கருத்தே மூன்று அங்கங்களும் ஒரே போன்றவை என்ற அடிப்படையில்தானே கிளம்பியது? தனி உபசாரமெல்லாம் இங்கே ஏது?

ஒரு தினுசாக வண்டி நகர்ந்தாயிற்று. பெரிய சமாசாரம்தான். இன்னும் இரண்டு மூன்று மணி நேரத்தில் வேலூர் போய்ச் சேர்ந்து விடுவோம்.

கிளம்பி விட்டால் மட்டும், எவ்வளவு வேகமாக எல்லாம் நடக்கிறது! ஆச்சு, இதோ பூந்தமல்லி வந்து விட்டது.

''என் தம்பி, சாத்துக்குடி எப்படி?'' பழம் கனரகம். அதனால் தான் ஓர் ஆசை நமக்கு அதனிடம்.

''சீக்கிரம் செய்யுங்க. வண்டி ரொம்ப நேரம் நிற்காது.''

வேறு யார், எல்லாம் சீட்டுக் கொடுத்தவன்தான். இப்படி ஓர் அதிகாரம்.

விலை பேசிப் பழத்தை வாங்கி உள்ளே போட்டுக் கொள்கிற தருணம். ஐயையோ, என்ன இது! இப்படி நாம் மோசம் போனதே இல்லையே? பர்சைக் காணுமே? கனையாய் அறுபத்து மூன்று ரூபாய்! ஊம், எல்லாம் நம் காலம். மரியாதை, கௌரவம், அந்தஸ்து எல்லாம்தான் போய் விட்டதென்றால், கையில் கொணர்ந்த பணமுமா போக வேண்டும்?

''என்ன சார், வாங்கறதானா, வாங்குங்க. இல்லாட்டிக் கடையை மூடுங்க.வண்டி எடுக்கணும் நமக்கு.''

டிரைவருக்கும் கொஞ்சம் விரட்டிப் பார்க்க வேண்டும் என்று ஆசை போலும். விரட்டுங்கள் எல்லாருமாய். இப்படிப்பட்ட அனுபவமும் வேண்டியதுதானே, மனிதன் என்று பிறந்து விட்டால்!

பர்ஸ் பறிபோன தகவல் பஸ் முழுதும் அம்பலமாகியாயிற்று. கண்ட பலன் வேறு ஒன்றும் இல்லை.

''எடுத்தவன் இப்ப இங்கியா இருப்பான்? எங்கே, எத்தினி மைலுக்கு அப்பாலே இருக்கானோ?''

''நீங்க ஏன் சார் உடனேயே கவனிக்கலே? இந்த மாதிரி விசயத்திலேயெல்லாம் கொஞ்ச உசாரா இருக்கணும்.''

''பட்டணத்துக்கு வந்துட்டுப் போறது முதல் தடவை போல் இருக்குது. எல்லாம் இனிமேல் உசாரா இருப்பாரு.''

''பிராட்வேயிலே ஏறிய இவங்களை எவனோ முழிச்சுப் பார்த்துக்கிட்டே இருந்தான். சொல்லணும்னு நெனைச்சேன். அவன்தான் அடிச்சிருப்பான்.''

''எவ்வளவு வைச்சிருந்தீங்க?''

''எங்கேயிருந்து வர்றீங்க?''

இல்லையா இப்படி, நீளமாகக் கவைக்குதவாத அனுதாபப் பேச்சுக்கள்!

வண்டி நகர்ந்தாயிற்று!

''பிராட்வேயிலே உடனே சொல்லி யிருந்தீங்கன்னு, 'ஸர்ச்' பண்ணி யிருக்கலாம்.'' சாவகாசமாய் நம் தலைவர் தடிப் பயல் பேசுகிற பேச்சு இது!

'உன்னையா தெரியாது நமக்கு? உள்ளூற, பணம் தொலைந்ததே என்று சந்தோஷப்படக் கூடியவன் ஆயிற்றே நீ? நேற்று அந்த அரைச் சதவிகித போனசுக்கு நாம் உடன்படாததற்குத்தான் நமக்கு இந்த அபராதம் என்று கூட நீ சொல்லத் தயாராயிருப்பாயே. பெரிய மகா யோக்கியன் மாதிரி பேச வந்து விட்டான் பிச்சைக்காரப் பயல்!'

'இப்போது நினைத்தால்கூட வயிறு எரிகிறது. இவன் என்னவோ தன் கைக் காசை எடுத்துச் செலவழிக்கிறாற் போலப் பேசுறான். நாலரை சதவிகித போனஸை முதலாளிகள் நிச்சயம் ஐந்து சதவிகிதமாகக் கூட்டிக் கொடுக்க முடியும். மனம்தான் தேவை. இந்த அரைச் சத விகிதத்தினால் முதலாளிகளின் இலாபம் ஒன்றும் பிரமாதமாகக் குறைந்து போய் விடப் போவதில்லை.'

எப்படியிருக்கிறது பேச்சு!

அரைச் சதவிகிதம் என்றால், மொத்தத் தொகை எவ்வளவு தெரியுமா? ஏழாயிரத்தைந்நூறு ரூபாயாகும். அதை அப்படியே இந்தப் பெரிய மனுஷர் சொல்கிறார் என்பதற்காகத் தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டுமாம்! கடைசி மட்டும் நாம் பிடிவாதமாக இருந்தோமோ, பிழைத்தோமோ! இல்லாவிட்டால், அந்த ஏழாயிரத்தைந்நூறு கையை விட்டுப் போய்விட்டிருக்கும்.

இப்போது என்னடா வென்றால், ரொம்ப வேண்டியவன் போலப் பேசுகிறான். 'ஸர்ச்' போட்டிருப்பாராமே, சொல்லி யிருந்தால்! ஒன்றுமில்லை, போன வருடம் தொழிற்சாலையிலே நடந்து விட்ட ஒரு சின்ன விஷயத்தை எப்படிப் பெரிது பண்ணி நம் மானத்தை வாங்கி விட்டான்! எவளோ ஒருத்தி தொழிற்சாலையில் வேலை செய்பவள், கர்ப்பமாய் இருந்தாள். பங்களா வாசலில் வந்து 'அந்த

பத்து' கொடுக்க வேண்டுமென்று பழியாய்க் கிடந்தாள். 'அதெல்லாம் ஒன்றும் நடக்காது' என்று நாம் விரட்டி விட்டோம். சட்டப்படி பிரசவ கால ஓய்வு, சம்பள முன் பணம் எல்லாம் கொடுத்தானபிறகு கடன் வேறே கொடுக்க வேண்டும் என்று எந்த சாஸ்திரம் சொல்லுகிறது!

நம் போதாத காலம்—அவள் இரண்டு நாட்களிலே எங்கேயோ செத்துவைத்தாள். அதற்கு இந்தப் பயல் ஊரெல்லாம் நம் பெயர் நாறிப் போகும்படியாகப் பண்ணி விட்டான். குவப்பேட்டை, கஸ்பா, வசந்தபுரம், சேம்பாக்கம், போலீஸ் 'லயன்ஸ்' பக்கம் — ஒரு பேட்டை பாக்கியில்லாமல் சுவர் எல்லாம் எழுதி வைத்து விட்டான், நாம்தான் அவளைக் கொன்று போட்டு விட்டதாக. காலிப் பயல்களுக்கு வழியா சொல்லித் தர வேண்டும்? காவிக் கட்டியும், கரித் துண்டும் இல்லையா? எங்கே பார்த்தாலும் நம் படத்தை வேறே போட்டு, அடியிலே "நம் தொழிற்சாலையிலே வேலை செய்யும் ஒரு பெண்மணிக்குப் பிரசவத்துக்காக ஐந்தே ரூபாய் கடனாகக் கொடுக்க மறுத்து மாய்த்துப் போட்ட புண்ணியவான்" என்று எழுதி விட்டு வேடிக்கை பண்ணிப் பார்த்தான்.

கங்குவார்ச் சத்திரமா? அதற்குள் வந்தாயிற்றே? பஸ் டிரைவர் அதிகாரம்தான் இருக்கிறதே. "சரியாய்ப் பதினைஞ்சு நிமிஷம் நிற்கும். எல்லாரும் டயத்துக்கு வந்திடுங்க. நான் ஹாரன் அடிச்சுக் கத்திக்கிட்டுக் கிடக்க மாட்டேன். வண்டியை எடுத்திடுவேன். ஆமாம், சொல்லிப்புட்டேன்."

கொஞ்சம் காப்பி சாப்பிட்டு விட்டு வந்தால் நன்றாக இருக்கும். அடக் கடவுளே! எங்கே நாம் பாட்டிலே இறங்கிப் போகிறோம்! மணிபர்ஸ்தான் பறி கொடுத்தாயிற்றே. சட்டைப் பையில் பஸ் சீட்டு ஒன்றுதானே உள்ளது? நல்ல காலம் இப்போதே தோன்றியதே. போய் உட்கார்ந்து, காப்பி 'ஆர்டர்' பண்ணி அருந்தியான பின்பு, முதலாளி மேசைமுன் வந்து சட்டைப் பையைத் தடவிக் கொண்டு நிற்காமல்! கடவுள்தான் மானத்தைக் காப்பாற்றினார்!

மானம் போனது கூட, நம்மிடம் வேலை செய்து பிழைக்கும் இந்தப் பயல் எதிரேயா போவது!

கடவுளே எவ்வளவு முறைகள் வாழ்த்தினாலும் தகும்.

அவசர அவசரமாகக் காப்பியை ஆற்றிக் குடித்துக் கொண்டிருந்த இவன், பையைத் தடவிக் கொண்டே நாம் மீண்டும் பஸ்ஸில் இடத்தில் வந்து அமர்ந்து கொண்டதைக் கவனித்தானோ என்னவோ? தலைவிதி! யாரைச் சொல்லி என்ன பயன்?

"சார், சார்!"

இவனல்லவா கூப்பிடுகிறான்?

"முதலாளி சார், உங்களைத்தான்."

எதற்கு என்னைக் கூப்பிட வேண்டும்?

"இறங்குங்க, சார். என்ன 'வேட்' பண்றீங்க? சீக்கிரம் இறங்குங்க. உங்களைத்தான்."

கையைப் பிடித்து இழுக்கிறானே.

"விளையாடாதீங்க சார். சீக்கிரம் வாங்க, இறங்கி."

"என்னை எதுக்கப்பா இழுக்கிறே?"



"ஐய்யா! எனக்கோ வயதாகி விட்டது. எனது ஓட்டை உனக்குக் கொடுத்துவிடலாமென நினைக்கிறேன்."

"குருவே! பக்கத்துத் தெருவிலே ஒருவர் தேர்தலுக்கு நிற்கிறாராமே? உங்களுடைய ஓட்டை அவருக்குக் கொடுக்கலாமே!"

"அதெல்லாம் பிற்பாடு பேசிக்கலாம்.... இறங்கி வாங்க, சார்."

"வேண்டாம்பா."

"என்ன வேண்டாம், சார். வாங்க, கீழே; அப்புறம் பேசலாங்க."

ஒரேயடியாக நம்மை இப்படி இழுத்துக் கொண்டு செல்கிறானே. கரகரவென்று தேர் இழுக்கிறாற் போல இழுத்துக் கொண்டு போய் உட்கார வைத்து விட்டானே.

"ஒரு ஸ்வீட்டுக் கொண்டாப்பா. பாதாம் ஹல்வாவா, ரொம்ப சரி. சீக்கிரம் கொண்டாப்பா. சாப்பிடுங்க சார்."

இதெல்லாம் என்ன? நமக்கு ஒன்றுமே புரிய வில்லையே?

இவனே உள்ளே சென்று, காப்பியை ஆற்றிக் கொண்டு வந்து வைக்கிறானே!

பாதாம் ஹல்வா உள்ளேயே போகாது போலிருக்கிறதே! தான் வெறும் காப்பி மட்டும் மடக் மடக் கென்று குடித்து விட்டு வந்தவன் — அதுவும் நமக்குப் போய்—இதெல்லாம் வரவழைத்து உபசரிக்கிறானே! என்ன விஷயம் இது?

இவன் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டு பஸ்ஸில் வந்தவன் கேட்கிறான் — 'யாருங்க இவங்க?'

எல்லாம் நம் காதில் விழுகிறது. நொடிப் போதில் சூழ்ச்சி முழுதும் விளங்கி விட்டது. நம்முடைய மானத்தை வாங்கத்தான் இப்படி ஒரு திட்டம் போலும். 'இவர்தான் நம் முதலாளி. வீட்டிலே இலட்சக்கணக்காய் இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்துக் கொண்டு, ஓர் ஐந்து ரூபாய் தர மறுத்துத் தன் தொழிலாளப் பெண் ஒருத்தியை — வயிற்றில் பிள்ளையோடு இருந்தவளைக் கொன்றவர்' என்ற அறிமுகத்தை அம்பலத்தில் இழுத்துவிட ஓர் ஏற்பாடா இது?

நமக்கும் சற்று முன்பே இந்தப் புத்தி இருந்திருக்கலாம். இவன் அழைத்ததும் ஏன்

இறங்கி வந்திருக்க வேண்டும்? அந்தக் காப்பியையும் ஹல்வாவையும் தின்று விட்டு, இப்போது தவிக்க வேண்டாம் இல்லையா? இனி பேசி என்ன பயன்? பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

என்ன இது? நம்மைப் பற்றியா சொல்கிறான்? நம்ப முடிய வில்லையே. ''தெரியாதுங்களா உங்களுக்கு? இவங்கதான் வேலூர் பனியன் தொழிற்சாலை முதலாளி வேல்சாமிங்க. அந்தக் காடாரம்பத்து, மானம் பார்த்த பூமியிலே முதல் முதல்லே தொழிற்சாலைன்னு ஒண்ணு ஆரம்பிச்சுக் கஞ்சிக்கு வழியில்லாமல் தவிச்ச எங்களுக்கெல்லாம், வேலை கொடுத்து, இன்னிக்கெல்லாம் படியளக்கிற புண்ணியாத்மா இவங்கதான்.''

தலை சுற்றுகிறாற் போல இருந்தது.

பாவி, கொன்று விட்டான்! எப்படியெல்லாமோ நாம் நினைத்ததற்கு எப்படி ஏமாற்றி விட்டான்!

ஏதோ பகைவன் போல் எண்ணி வந்ததற்கு. நம் மீது எப்படி வஞ்சம் தீர்த்துக் கொண்டு விட்டான்!

நினைத்துப் பார்த்தாலேயே உள்ளம் பொருமிப் பூரிக்கிறதே. மணிபர்ஸ் களவாடப்பட்ட வருத்தம்கூட மாயமாய்ப் போய் விட்டதே. என்ன பெருந்தன்மை, எவ்வளவு நன்றி விசுவாசம்! கனவிலும் நினைக்க வொண்ணாதபடி எப்படிப் புகழ்ந்து பேசி விட்டான்! நேற்று மகாநாட்டில் அப்படியெல்லாம் பேசியவனா இவன்? சுவர் நெடுகச் சந்தி சிரிக்க வைத்த போர்வழி இவன்தானா?

''கஞ்சிக்கு வழியில்லாமல் தவிச்ச எங்களுக்கு வேலை கொடுத்து இன்னிக்கெல்லாம் படியளக்கிற புண்ணியாத்மாவாமே!''

ஒருகால் கிண்டலாக இருக்குமோ ?

சீ, நமக்குத்தான் இந்த அற்பப் புத்தி. இவன் என்ன விசுவாசத்துடன் அழைத்து, ஹல்வா தருவித்துத் தன் கையினாலேயே காப்பி ஆற்றிக் கொடுத்தான்! மனசு என்னவோ செய்கிறது. வேறு வழியில்லை. நாமும் பெருந்தன்மையோடு நடந்து கொள்ள வேண்டியதுதான். இவன் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்த பின்பு, மூளை சரியாய் வேலை செய்யவில்லை. என்னவோ பெரிய தப்பு செய்து விட்டோம், இத்தனை நாள் வரை வீணும் நாம். இனிமேலாவது திருத்திக் கொள்ளலாம்.

தனக்கு வெறும் காப்பி மட்டும் சாப்பிட்டவன் நமக்கு என்ன உபசாரம் செய்தான்! ஏழாயிரத்துச் சொச்சம் ரூபாய்தானே?— போனால் போகிறது. தொழிலாளிகள் நன்றாய் உழைத்தால், ஒரே வருடத்தில் இரட்டிப்பாகச் சம்பாதிக்க முடியாதா? நாமும்தான் பெருந்தன்மையாய் நடந்து கொள்வோமே. இவன் மட்டும் நினைத்திருந்தால், பஸ்ஸிலோ ஓட்டலிலோ அந்தப் பிள்ளைத்தாய்ச்சி நம் பங்களா வீட்டு வாசலில் கிடந்து செத்த கதையைக் கிளப்பி விட்டிருக்கக் கூடாதா?

நிச்சயம் பண்ணியாயிற்று. இவனையே கூப்பிட்டுச் சொல்லிவிட வேண்டியதுதான், அரைச் சதவிகிதப் போனஸ் அதிகமாய்க் கொடுக்கச் சம்மதம் என்று.

''எல்லாரும் இறங்குங்க, ஒவ்வொருத்தராய்'' என்று குரல் பிறந்தது.

வேலூர் வந்தாயிற்று.

''இந்தாப்பா, நீதான் புருஷோத்தமா; கொஞ்சம் இப்படித் தனியாக வா!''

''என்னங்க?''

''நாம் யோசனை பண்ணிப் பார்த்து, நேத்திக்குச் சொன்ன முடிவை மாத்திக்கிடறதாக நிச்சயம் பண்ணிப்புட்டோம்.''

''எனக்கு ஒண்ணும் புரியலீங்களே!''

''அதுதாம்பா. போனஸ் விசயம்தான்!''

இவன் பேசவே இல்லையே. சொன்னது காதில் விழவில்லையோ?

''நீ கேட்டபடியே, அஞ்சு சதவிகிதமாப் போனஸ் தந்திடறதாக நினைச்சுட்டோம். நீ தொழிலாளிங்ககிட்டே யெல்லாம் சொல்லிப்புடு.'' இவன் கண்கள் என்ன இப்படி ஒளியிழந்து நிற்கின்றன? ஒன்றுமே புரியவில்லையே இவனுடைய போக்கு?

''சார், அதெல்லாம் வேறே ஆள்கிட்டே வச்சிக்குங்க. புருஷோத்தமனை நீங்க இன்னும் புரிஞ்சிக்கல்லே.''

''என்னப்பா, பேசறே நீ?''

''நீங்க என்ன பேசினீங்க, அதையும் நினைச்சுப் பாருங்க.''

''நமக்கு ஒண்ணும் புரியல்லியே, புருஷோத்தம் உன் பேச்சு?''

''என்னமாங்க புரியும் என் பேச்செல்லாம் ஐயாவுக்கு? நீங்க பலகாரம் சாப்பிடலாம்னு இறங்கி வந்தவங்க, மணிபர்ஸ் இல்லேங்கிற நினைப்பு வந்ததும் பழையபடி போய் 'சீட்'டிலே குந்திக்கிட்டீங்க. அப்ப, என் மனசுக்கு எப்படி இருந்தது தெரியுமா? நம்ம முதலாளி ஆச்சேங்கிற ஒரு விசுவாசத்தோடே வந்து காப்பி, பலகாரம் பண்ணி வச்சேன், ஏதோ என் சக்திக்கு ஏத்தபடி. நீங்க அதை ஒரு வஞ்சமா எடுத்துக்கிட்டீங்க. போனஸைக் கூட்டிக் கொடுக்க வைக்கிறதுக்காகவா, நான் எசமானை அழைச்சுக்கிட்டுப் போனேன்? ரொம்ப, நான் மனசு வருத்தப் படறேனுங்க. என்னை நீங்க இத்தினி நாள் ஏதோ விரோதி மாதிரித்தான் நினைச்சிருந்திருக்கீங்க. இந்தத் துளியூண்டு அன்புகூட என்கிட்டே எதிர்பார்க்கலீங்க நீங்க. அப்படித்தானே? உங்க போனஸை வைச்சுக்குங்க, பத்திரமா. அதைக் கலக்காதீங்க. அதைப் போராடி வாங்கத் தெரியும், இந்தப் புருஷோத்தமனுக்கு. வஞ்சம் கொடுத்து வாங்கிற வழக்கம் எனக்குக் கிடையாது.''

இவனுக்கு என்ன பதில் சொல்வது? நா எழவே மறுக்கிறதே?

''என்னங்க, நான் சொல்றது விளங்குதுங்களா? வரேங்க, நான். ஒரு பொதுக் காரியத்துக்காகப் போராடறது தனி விசயம். ஆனால் சொந்த வாழ்க்கையிலே அன்பு — விசுவாசம் பாராட்டறது இன்னொரு விசயம். மனுசன்னு ரெண்டும் வேணுங்க. என்ன பேச மாட்டேங்கிறீங்க? நானே உங்க பங்களாவுக்கு வரேன்னு வைச்சுக்குங்க. நான் சட்டுனு என் ஜேபியிலிருந்து ஒரு சாக்லேட்டு எடுத்துத் தரமாட்டேங்களா? உடனே அதுக்குப் பேரு வஞ்சமாயிடுமா? சொல்லுங்க.''

புருஷோத்தமன் கடமையறிந்த கர்மயோகி போல் நடந்து இதோ போகிறான்! போவோம் நாமும் பின்னேயே.

* எல்லோராலும் புகழப்படுவது


TRAYONS

"டிரெயான்ஸ்" ரேயான் நூல்களினுல் நெய்த ஆடைகள் எல்லோராலும் புகழப்படுகிறது.

இந்தியாவில் முதல் முதலாக சிறந்த ரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட உன்னத நூல் "டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள். விலை மலிவு-நீண்ட காலம் உழைப்பு-பகட்டான உடைகளுக்கு ஏற்றது.

"டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள் 100, 120, 150, 300 டினேயர்களில் தயாரிக்கப்படுகின்றன.

*



Rt

ஸ்டாக்கிஸ்டுகள்

ரேயான் டிரேடர்ஸ் பிரைவேட், லிமிடெட்


போன்: 21641. 61, செம்புதாஸ் தெரு, சென்னை-1. தந்தி: "CELYARN"


கிளைகள்:

போன்: 253. தந்தி: "CELYARN" 68/416, மெயின் ரோடு, செவ்வாப்பேட்டை, சேலம்.

போன்: 598. தந்தி: "CELYARN" 114/A, தெற்கு மாசி வீதி, மதுரை.

போன்: 3441. தந்தி: "RAYONS" யுனைடெட் இந்தியா பில்டிங் அவினாசி ரோடு, கோவை.





1. திருவாவடுதுறை ஆதீனம் ஒன்பதாவது திருமந்திர மகாநாடு சமீபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னை மாகாண அற நிலைய ஆட்சித்துறை ஆணையாளர் ஸ்ரீ எம். எஸ். சாரங்கபாணி முதலியார் தலைமை வகித்தார். கடலூர் ஜில்லா மாஜிஸ்திரேட் ஸ்ரீ வி. பலராமய்யா மகாநாட்டைத் திறந்து வைத்தார். பல அறிஞர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு அரிய பிரசங்கங்கள் செய்தனர்.

2. பிரபல டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையின் விளையாட்டு, பொழுதுபோக்கு சங்கத்தினர் சென்னை ஹாக்கி சங்கத்தின் ஆதரவில் வருடா வருடம் ஹாக்கிப் போட்டி நடத்தப் போகிறார்கள். இதில் சென்னையிலுள்ள பிரபல ஹாக்கி கோஷ்டிகள் கலந்து கொள்ளும். இந்தப் பந்தயம் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படு மென்று தெரிகிறது. இந்தத் தருணத்தில் ஸ்ரீமதி வள்ளியம்மாள் லக்ஷ்மணன் தமது அருமைத் தந்தையாரும் பிரபல தொழிலதிபருமான ஏ. எம். எம். முருகப்பச் செட்டியார் அறுபதாண்டு விழா வைபவத்தையொட்டி ஒரு தங்கக் கோப்பையை டி. ஐ. சைக்கிள் பொழுது போக்கு சங்கத்தினருக்கு வழங்கி, ஹாக்கிபந்தயம் சிறப்புற நடைபெறச் செய்திருக்கிறார்கள் என்பது பாராட்டுக்குரியது.






ஃ

3. தஞ்சை ராமநாதன் செட்டியார் ஹாலில் தஞ்சை திரு. சரவண பவன் அதிபர் திரு எம். எஸ். வேங்கடாசலமய்யரின் புதல்வி சௌ. அனந்தலக்ஷ்மியின் பரத நாட்டிய அரங்கேற்றம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

4. பம்பாய் மாதுங்கா போதார் கல்லூரி ஹாலில் திரு அனந்தநாராயணன் அவர்களின் புதல்வி குமாரி லலிதாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

ஃ

திரு விசுவநாத ஜோசியர் அவர்களின் புதல்வி சௌ. காமேசுவரிக்கும் திரு எம். கே. அனந்தராமுக்கும் பாலக்காட்டில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.





கொஞ்சும் சலங்கை

காந்தன்

பழைய ராஜா—ராணிக் கதைதான். மிகப் பெரிய செட்டுகள் போட்டு, வர்ண ஜால வித்தை காட்ட வேண்டுமானால் ராஜாராணி, சேனாபதி, மக்கள் எல்லாரும் வந்தாக வேண்டியிருக்கிறது. மக்களாட்சியில் மன்னனுக்குத் தனியிடம் இல்லை; ஆனால் சினிமா உலகில் மதிகெட்ட மன்னர்களுக்கும், அவர்களது மதியீனங்களுக்கும், மமதை கொண்ட சேனாபதிகளுக்கும், அபலைப் பெண்களுக்கும், ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களிடம் அவர்கள் அடையும் அல்லல்களுக்கும் தனி இடம் என்றென்றும் உண்டு. சினிமா உலகை விட்டால் மேற்படி மன்னர்களுக்கு வேறு புகலிடம் இல்லை; மன்னர்களையும் மந்திரிகளையும் விட்டால் பெரிய படாதிபதிகளின் 'மகத்தான தயாரிப்பு'களுக்கும் வழியில்லை.

மன்னனது அன்புக்குப் பாத்திரமான அபராஜிதா நாட்டியக்காரியானதால் அவள் ராணியாக முடியவில்லை; மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட அவள் ஓர் ஆண் மகவைப் பெற்று ஒரு பூசாரியிடம் கொடுத்து அக்குழந்தை மன்னன் மகன் என்பதற்கு அத்தாட்சியாகத் தன் சலங்கையையும் கொடுத்து விட்டு இறந்து விடுகிறாள். அதுதான் கொஞ்சும் சலங்கை. படத்தின் தலைப்பும் அதுதான்; நாகசுர வித்துவான் அமரேந்திரன்தான் ராஜகுமாரன் என்பதற்குச் சாட்சியாக இருப்பதும் அதுதான். வளர்ந்து பெரியவனான அமரேந்திரனுக்குப் பாடகி சாந்தாவின் அன்பும், நடன நங்கை மல்லிகாவின் காதலும் கிட்டுவதோடு சேனாபதி நாகதேவனுடைய கடும் பகையும் கிட்டுகின்றன. இதன் காரணமாகப் படம் பார்ப்பவர்களுக்குச் சண்டையும், காதலும், மோதலும், பல பயங்கரக் காட்சிகளும் கிடைக்கின்றன.

எப்பொழுதுமே ஒரு படத்தில் இரண்டு பெண்கள் ஒருவனைக் காதலித்தால், ஒருத்தி வாழ்வதற்காக இன்னொருத்தி அவசியம் இறந்தாக வேண்டும் என்பது பட உலகின் நியதி. இந்தப் படத்தில் பாடகி சாந்தாவின் தியாகத்தினால் மல்லிகாவுக்கு வாழ்வு கிட்டுகிறது. ஆனால் சாந்தா இறக்கவில்லை; தியாகத்தினால் ஏற்பட்ட மன நிம்மதியோடு அவர்கள் வாழ்விலிருந்து ஒதுங்கிக் கொள்கிறாள்.

நாகசுர வித்துவான் அமரேந்திரனாக வரும் ஜெமினி கணேசனுக்கு இப்படத்தில் நல்ல வாய்ப்பு. நாகசுரம் வாசிப்பதோடு வாட்போர் புரியவும், நட்டுவனார் வேலை பார்க்கவும் சந்தர்ப்பங்கள் கிட்டுகின்றன. நாகசுர வித்துவானுக்கு ஏற்ற களையான தோற்றம் அவருக்கு இருக்கிறது. காருகுறிச்சி அருணாசலத்தின் நாகசுர இசைப் பொழிவுக்கு ஏற்ப இவர் வாசிக்கும் பாவம் மிகவும் அருமையாக இருக்கிறது. சண்டைக் காட்சிகளிலும் கணேசன் விட்டுக் கொடுத்து விடவில்லை; அமர்க்களப்படுத்தியிருக்கிறார். மல்லிகா-சாந்தா இருவரின் அன்புக்கும் இடையில் அமரேந்திரனின் தவிப்புக்களை ஜெமினி கணேசனது முகத்தில் நன்கு காண முடிகிறது. இந்தப் பாகத்துக்கு ஜெமினி கணேசனைத் தேர்ந்தெடுத்தது மிகவும் பொருத்தமானது.

கமலா மல்லிகாவாக வருகிறார். நடன நிகழ்ச்சிகளில் அவரது திறமை பரிபூரணமாக வெளியாகிறது. ஆனால் நடிப்புக் கொஞ்சம் கூட எடுபடவில்லை. நடனமாடும் போது பலவித முக பாவங்களைக் காட்டும் கமலாவுக்குப் பாத்திரத்தை உணர்ந்து உருகி நடிக்கத் தெரியவில்லையே! அத்துடன் அவரது தமிழ்ப் பேச்சும் நன்றாயில்லை.

உணர்ச்சியில் மெய்ம்மறந்து துடித்து நடிக்க வேண்டிய பாத்திரம் மல்லிகாவினுடையது. ஒரு சாதாரண நடனப் பெண் அரசிளங்குமரனுக்கு மாலையிட நேர்ந்ததென்றால் அது சாதாரணப் பாத்திரமா? ஆனால் அந்தப் பாத்திரத்தைக் கமலா ஏற்றதனால் அது உபயோகமற்ற பாத்திரமாகி விட்டது. நாகசுர வித்துவான் அமரேந்திரனுக்குப் பொருத்தமான பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்தவர்கள் இதில் தவறி விட்டார்களே!

சேனாபதி நாகதேவன் பாத்திரத்துக்கு எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்தவர் மனோகர். மிடுக்கும், கம்பீரமும் கொண்டு நன்றாக நடிக்கிறார். அகங்கார நடையும், அகம்பாவப் பேச்சுமாக அவர் பாத்திரம் படத்தில் நன்கு சோபிக்கிறது.

தவில் வாசிக்கும் நந்தியின் பாகம் கே. சாரங்கபாணிக்குப் பொருந்துகிற மாதிரி வேறு யாருக்கும் பொருந்தாது. உண்மையாகவே தவில் வாசிப்பது போன்ற அங்க சேஷ்டை, முக பாவங்களுடன் தமக்கே உரிய தனிப் பாணியில் சாரங்கபாணி வெளுத்து வாங்கியிருக்கிறார்!

குசலகுமாரி இன்னொரு நடனப் பெண்ணாக வந்து அரண்மனையில் மல்லிகாவோடு போட்டி நடனம் ஆடுகிறார். முதலில் வில்லியாக இருந்த அவர் பிறகு நல்லவளாக மாறி மல்லிகாவுக்கு உதவி செய்கிறார். ஆனால் ஏனோ அந்த நடனப் போட்டி சுவாரசியமே யில்லை. மேலும் ''வஞ்சிக் கோட்டை வாலிப''னில் பத்மினி - வைஜயந்தி ஆடிய போட்டி நடனத்தை நினைவூட்டும் அந்தக் காட்சியைப் புகுத்தியிருக்க வேண்டாம்.

சாவித்திரியின் நடிப்புத்தான் படத்தின் சிகரமாயிருக்கிறது. அவர் ஏற்ற பாத்திரத்துக்கு ஏற்றம் உண்டாகும் வண்ணம் அருமையாக நடித்திருக்கிறார். வாளேந்திப் போர் புரியும் வீராங்கனையாகவும், கலைந்து போன காதற் கனவை நினைத்துக் கண்ணீர் உகுக்கும் காரிகையாகவும் வரும் அவர் பாத்திரம் மெருகு பெற்று விளங்குகிறது. பரந்த மனப்பான்மையோடு தன் காதலைத் தியாகம் செய்து இன்னொரு பெண்ணுக்கு வாழ்வளித்த வனிதாமணி சாந்தாவாகத் தோன்றுகிறார் சாவித்திரி.


தேவி பிலிம்ஸ் அளிக்கும் வண்ணப் படமான ''கொஞ்சும் சலங்கை'' மாபெரும் தயாரிப்பு. மிகப் பெரிய செயற்கைக் காட்சிகளை மிகவும் துணிச்சலாகத் தயாரித்திருக்கிறார்கள். மைசூர், ஜெயப்பூர், ஹோகேனகல் முதலிய ஊர்களில் எடுத்திருக்கும் வெளிப்புறக் காட்சிகள் படத்தின் சிறப்பான அம்சங்களாக விளங்குகின்றன. படத்தின் 'டெக்னி கலர்' லண்டனில் தயாரிக்கப்பட்டிருப்பதுதான் அபாரமாக இருக்கிறது. தமிழ்ப் பட உலகில் இதுவரையில் இவ்வளவு உயர்ந்த வண்ணப் படம் வந்ததே யில்லை.

உன்னதமான தயாரிப்புக்கும், சிறந்த டைரக்ஷனுக்கும், எம். வி. ராமனை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். நிசி வேளையில் தீவர்த்தி வெளிச்சத்தில் நடந்த போரும், பெரிய ஐயனார் சிலையும், வில்லனின் சூழ்ச்சிகள் நிறைந்த அரக்கு மாளிகையும் பார்ப்பவர்களைத் திகைக்க வைக்கின்றன.

பாடல்கள் கர்நாடக மெட்டுக்களில் அமைந்திருப்பது ஒரு விசேஷம்தான். சுவாமி ராமலிங்கப் பெருமானின் அருட்பாவான, ''ஒருமையுடன் நினது திருமலரடி'' என்னும் பாடல் சூலமங்கலம் ராஜலட்சுமியின் குரலில் உருக்கமாக வெளிப்படுகிறது. மல்லிகாவின் நடன முத்திரைகளோடு பாடப்படும் 'காணக் கண் கோடி வேண்டும்' என்னும் ராக மாலிகையும், ''சிங்கார வேலனே தேவா'' என்னும் பாட்டும் மனத்தில் பதிந்துவிட்டன.

படத்தின் இசைப் பொறுப்பை ஏற்றிருக்கும் எஸ். எம். சுப்பையா நாயுடு தம் பொறுப்பை நன்கு நிறைவேற்றி யிருக்கிறார்.

இவ்வளவு சிறப்பான அம்சங்கள் கொண்ட படம் அர்த்தமற்ற வெறும் ராஜா—ராணிக் கதையாயிராமல், தமிழகத்தின் உண்மையான வரலாற்றுக் கதையாக மட்டும் இருந்திருந்தால்......'' ''கொஞ்சும் சலங்கை'' புகழில் எந்தப் படத்தையும் மிஞ்சியிருக்கும்.



திருமூலர் தவமொழி

ராஜாஜி சோமு

42

உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு, இறைவனையே பற்றி நின்று தியானிக்கும் பெரியோர்களின் உணர்வைப் பற்றிப் பேசுகிறார் திருமூலர்.

பற்றற் றவர்பற்றி
நின்ற பரம்பொருள்

[பற்று அற்றவர் — புலன்களுக்கு விஷயமான பொருள்களில் பற்று நீங்கிய ஞானிகள். பற்றி நின்ற பரம்பொருள்—பக்தி செலுத்திப் பற்றிக் கொள்கிற அந்தப் பரம்பொருளாகிய இறைவனை.]

கற்றுஅற் றவர்கற்றுக்
கருதிய கண்ணுதல்

[கற்று—ஞானம் அடைந்து. அற்றவர்—துறவிகள். கற்றுக் கருதிய—ஞானத்தோடு தியானிக்கிற. கண்ணுதல்—நெற்றிக்கண் இறைவனை.]

சுற்றுஅற் றவர்சுற்றி
நின்றஎன் சோதியை

[சுற்று-சுற்றங்கள், உலக உறவுகள். அற்றவர்-களைந்த சந்நியாசிகள். சுற்றி நின்ற—மனத்தினால் அணைத்துக் கொண்ட. என் சோதியை—ஞான ஒளியாகிய என் இறைவனை.]

"என் சோதியை" என்று பக்தி அன்புப் பரவசத்தினால் தம் சொந்தமாக இறைவனைச் சொல்லுகிறார்.

பெற்றுஉற் றவர்கள்
பிதற்றுஒழிந் தார்களே

[பெற்று உற்றவர்கள்—இறைவனுடைய அருளைப் பெற்றுக் கொண்டவர்கள். பிதற்று ஒழிந்தார்களே—இது அது என்று வாதாடுகிற பிதற்றலை விட்டு, மோன தியானத்திலே இறைவனோடு ஒன்றினார்கள்.]

உலக உறவுகளைக் களைந்து, ஞானத்தில் தேர்ந்து, நெற்றிக் கண்ணனாகிய இறைவனையே கருத்தில் கொண்டு, இறைவனையே சுற்றுகிற மனத்தினரான ஞான யோகிகள், வாதப் பிரதிவாதங்களாகிய பிதற்றலை விட்டொழித்து மோன சமாதியிலே கூடுகிறார்கள்.

பற்றற் றவர்பற்றி
நின்ற பரம்பொருள்
கற்றற்றவர் கற்றுக்
கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி
நின்றஎன் சோதியை
பெற்றுற் றவர்கள்
பிதற்றொழிந் தார்களே.

* * *

இந்த உடம்பினுள் நின்று மனத்தைத் தீய வழிகளிலே இழுத்துச் செல்லுகிற ஐம்புலன்களை அடக்கி ஆண்டோமானால், தெய்வ இன்பம் பாலாகச் சொரியும் என்கிறார் முனிவர். இந்தக் கருத்தை அழகிய உபமானம் சொல்லி ஒரு கதை போலப் பாடுகிறார்.

பார்ப்பான் அகத்திலே
பாற்பசு ஐந்துண்டு

[பார்ப்பான்—பிரமன். பார்ப்பான் அகம்—பிரமன் கட்டிய வீடாகிய இந்தச் சரீரம். இதனுள், பாற் பசு ஐந்துண்டு—பால் கறக்கக் கூடிய பசுக்கள் ஐந்துண்டு; ஐம்புலன்கள்.]

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் ஐந்து பசுக்கள். இவை,

மேய்ப்பாரும் இன்றி
வெறித்துத் திரிவன

[மேய்ப்பார் — மேய்ப்பதற் குரிய இடையன். இன்றி — இல்லாமல். வெறித்துத் திரிவன—வெறி கொண்டு திரிகின்றன.]

இந்த ஐம்புலன்களைக் கட்டிக் காவாது போனால், மேய்ப்பதற்கு இடையன் இல்லாத பசுக்களைப் போல இவை வெறி கொண்டு திரியும்.

மேய்ப்பாரும் உண்டாய்
வெறியும் அடங்கினால்

[மேய்ப்பாரும் உண்டாய்—ஐம்புலப் பசுக்களை மேய்ப்பதற்குரிய ஞானம் கிடைத்து. வெறியும் அடங்கினால்— இந்தப் பசுக்களின் வெறி அடங்கி விட்டால்.]

அதாவது ஞானத்தால் புலன்களை அடக்கிக் காத்தோமானால் இந்தப் பசுக்களுக்கு வெறி அடங்கி விடும். அப்போது,

பார்ப்பான் பசுஐந்தும்
பாலாச் சொரியுமே

[பார்ப்பான் பசு ஐந்தும் - பிரமன் படைப்பான இந்தப் பசுக்கள் ஐந்தும். பாலாச் சொரியும் - பேரின்பமாகிய ஞானப் பாலைப் பொழியும். சொரியும்- பொழியும்.]

பசுக்கள் அதே பசுக்களே அடங்காத நிலையில் அவை ஆன்மாவுக்குக் கேடு தரும் விதத்தில் வெறியோடு விஷய இச்சைகளிலே திரிகின்றன. இதே பசுக்களுக்குக் காவல் ஏற்பட்டு விட்டால், இந்தப் பசுக்களே ஞானப் பாலைச் சொரிகின்றன.

பார்ப்பான் அகத்திலே
பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி
வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய்
வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும்
பாலாச் சொரியுமே!

புலன்களாகிய பசுக்களை அடக்கி ஆள வேண்டும். அப்படி அடக்கினால் அதே புலன்கள் பேரின்பம் தரும்.

வட்ட மேஜை



கருவேலியின் கலி தீருமா?

தஞ்சை மாவட்டத்தில் நிலவளம் மிகுந்த நன்னிலம் பகுதியிலுள்ள இவ்வூரின் வடபால் 'முட்டையாறு' என்ற வடிகால் ஒன்று உள்ளது. இது இளந்தூற்றலைக் கண்டாலும், சீற்றமிகக் கொண்டு பொங்கி எழுந்து, வழிந்து தன் இரு கரைகளிலும் உள்ள இளம் பயிர்களை வாரக் கணக்கில் மூச்சுவிட முடியாது செய்து, விவசாயிகளைப் பெருமூச்சு விடச் செய்யும்! பல நூறு ஏக்கரா நெற்பயிர்களுக்குச் சேதம். வெள்ளப் பெருக்கால் இவ்வூர் மக்கள் இந்த ஊருக்கு வடபுறத்திலுள்ள ஆஸ்பத்திரிக்குச் செல்ல முடியாது. பள்ளி மாணவர்கள் வெள்ளத்தைக் கண்டு பதறுவர்.

சுமார் இரண்டாயிரம் மக்கள் தொகை கொண்ட இவ்வூராருக்கும், இதன் அண்மையிலுள்ள மற்ற ஊர்வாசிகளுக்கும் சொல்லொணா இன்னல் தரும் இவ்வோடையை அகலம் செய்து வெள்ளப் பெருக்கைத் தடை செய்ய வேண்டுமென்றும் இவ்வோடை மீது ஒரு கல் பாலம் தேவையென்றும் பல விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதியும், நாளது வரையில் காங்கிரஸ் அரசாங்கத்தாரின் கண்ணோட்டம் இட்டவில்லை.

கருவேலி
3-1-62

சி. கோவிந்தராஜன்

இப்படியும் நடக்குமா?

தங்கள் 31-12-61 கல்கி இதழில் 'சுவரில்லாமல் சித்திரமா?' என்ற தலைப்பில் அன்பர் என். எஸ். திருமூர்த்தி எழுதிய காரணம் மட்டும் அல்லாமல், கல்வியின் தரம் வர வரக் குறைவதற்கு மற்றும் ஒரு காரணம் உண்டு.

சமீபத்தில் எங்கள் ஊரிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள மேலமங்கலம் என்னும் ஊரில் ஒரு பள்ளிக்கூடத்துக்கு என் சொந்த வேலையாகச் சென்றிருந்தேன். காலை ஒன்பதேமுக்கால் மணி. வகுப்புகள் ஆரம்பித்திருக்கும்கூடப் பையன்கள் போடும் இரைச்சலைக் கேட்டுக் கொண்டே சென்று பார்த்த பொழுது அந்த வகுப்பை நடத்தும் உபாத்தியாயரை வகுப்பில் காணவில்லை. மத்தியான உணவு தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார். அவர் நடத்தும் முதல் பீரியடு கணிதம். அதை விடுத்து மத்தியான உணவுக்குக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். இது பற்றி அவரிடம் நானே நேரிடையாகக் கேட்ட பொழுது பின்வரும் பதிலைக் கொடுத்தார். மத்தியான உணவுத் திட்டம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அதைப் பார்வையிடத் திடீரென்று எந்தச் சமயமும் மேல் அதிகாரிகள் வரலாம் என்றும் அச்சமயத்தில் சாப்பாடு தயார் செய்யாத நிலையில் இருந்தால் அவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு போதிய அளவு கிடைக்காது என்பதுடன் அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகவும் நேரிடும் என்று கூறினார். பள்ளிகளில் வகுப்பை ஏற்று நடத்தும் ஆசிரியர்கள் இதுமாதிரி காரியங்களில் உபயோகப்படுத்தப் படும்போது அவர்கள் பிள்ளைகளுக்குப் பாடம் போதிக்க எங்கே அவகாசம் இருக்கிறது?

பெரியகுளம்
5-1-62


எம். சங்கரராமன்

ஆசிரியர்களின் பரிதாப நிலை

பஞ்சாயத்து யூனியன்கள் நான்கு ஐந்து பள்ளிகளுக்கு ஒரு சம்பள ஆசிரியர் அமைத்து அவர் மூலம் சம்பளம் கொடுக்கின்றனர். ஆனால் இம்மாத சம்பளத்தில் (டிசம்பர்) ஓர் ஆசிரியருக்கு ரூபாய் 1.62 வீதம் பிடித்துக் கொண்டு 'சம்பள ஆசிரியர்' சம்பளத்தைக் கொடுத்தார். அத்துடன் ஆளுக்கு இருபத்தைந்து கொடிகளும் (ரூ. 1.50), குடும்பக் கட்டுப்பாடு புத்தகம் (12 ந. பை.) ஒன்றும் கொடுத்தார். கொடியும் புத்தகமும் வாங்காவிட்டால் சம்பளத்தை ஆபீசுக்குத் திருப்பி அனுப்பி விடுவதாகக் கூறினார். ஏழை ஆசிரியர்கள் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய் விடக் கூடாதே என்று ரூ. 1.62 ரூபாயைக் குறைத்து வாங்கியுள்ளார்கள். கல்யாணம் ஆகாதவர்களுக்கும், கல்யாணம் ஆகிப் பிள்ளைக்கு ஏங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும் கிடைக்கும் பரிசு குடும்பக் கட்டுப்பாடு திட்ட புத்தகமா? இது இத்துடன் நிற்குமா? இனிமேல் ஒவ்வொரு மாதமும் அரசாங்கப் பரிசுப்பத்திரம் ஒன்றுக்கு ஐந்து ரூபாயை எடுத்துக் கொண்டு கொடுக்கலாம். அடுத்துச் சிறு சேமிப்புப் பத்திரங்கள் கொடுத்து விட்டுச் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம் என்று நினைத்து அதற்கு முன்னேற்பாடாக இந்தக் கொடியையும், புத்தகத்தையும் கொடுத்துச் சோதித்துப் பார்க்கிறார்கள் போலும்! மேலும் பள்ளியிலுள்ள தகவல் பலகையை யூனியன் ஆபீஸில் ஆசிரியர்கள் ஒரு செலவும் இல்லாமல், வண்டி வசதியும் இல்லாமல் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. தகவல் பலகை ஓர் ஆளால் சுமக்க முடியாத கனமுள்ள மரப் பலகையினால் ஆனது. பள்ளிக்கும், யூனியன் ஆபீசுக்கும் இடையிலுள்ள தூரம் சுமார் பதினைந்து மைல். லாரிப் போக்குவரத்து கிடையாது. இப்படிப்பட்ட இடத்துக்குச் செலவில்லாமல் எப்படிக் கொண்டு சேர்க்க முடியும்? இதுதான் ஆசிரியர்களுக்குப் பஞ்சாயத்து யூனியன் செய்யும் நன்மையா?

புளியங்குளம்
5-1-62

பு. ராஜபாண்டியன்
பு. செல்வராஜ்



புது வெள்ளம்

அகிலன்

அத்தியாயம் 13

கலைஞனின் கனவு

சில நாட்கள் சென்றன. சென்னையில் தன் அடுத்த நாடகத்தை அரங்கேற்றி, மேடையில் தனது பிறவிக் கலைத்திறமை முழுவதையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான் குருசாமி. குருசாமியின் பாத்திரம் நகைச்சுவைப்பாத்திரம்தான் என்றாலும் மேடையிலிருந்த அவ்வளவு நாடகப் பாத்திரங்களுக்குள்ளும் அவன் மறைந்திருந்தான். நாடக ஆசிரியர், விடுதலை அடைந்துவிட்ட நாட்டில் மக்கள் எப்படியெல்லாம் வளம் பெற்று வாழப் போகிறார்கள் என்பதைக் கற்பனை செய்திருந்தார். 'வாழ விடு!' என்பது நாடகத்தின் தலைப்பு.

பொய்யில்லை, வஞ்சனையில்லை, சூதில்லை, லஞ்சமில்லை, கள்ள வாணிபமில்லை! எல்லோரும் கூடி உழைத்து, தங்களுக்கு வேண்டியதைச் சிக்கனமாக எடுத்துக் கொண்டு, சமுதாயத்துக்குத் தாராளமாகக் கொடுக்கிறார்கள்! உழவும் தொழிலும் வளர்கின்றன; கலைகள் மறுமலர்ச்சியடைகின்றன; சமுதாயம் வளர வளர மனிதர்கள் தங்களது வாழ்க்கைத் தரத்திலும் பண்பிலும் ஒன்றாக உயர்ந்து கொண்டே போகிறார்கள்! மகாத்மா காந்தியடிகளின் சாந்தப் புரட்சி வெற்றி பெறுகிறது.

தனக்கு வாழ்க்கை தேடிக் கொள்ளத் தெரியாத அந்த நாடக ஆசிரியன், நாடு வாழ வேண்டுமென்ற பேராசையால் அற்புதமானதொரு கற்பனை வாழ்க்கையை உருவாக்கியிருந்தான். குருசாமிக்கு அந்த ஒரு நாடகத்தை இந்த நாடு முழுவதும் நடத்தி, மக்களின் மனத்தில் ஓர் அன்புப் புரட்சியையே ஏற்படுத்திவிட வேண்டு



மென்ற ஆவல் எழுந்தது. குருசாமி பாடியபடியே மேடைக்கு வந்தான்.

வாழு! வாழவிடு!
வாழு! வாழவிடு!
குறைவாக எடு!
நிறைவாகக் கொடு
குறைகள் ஓடும்!
நிறைவுகள் நாடும்!

நாடகக் கொட்டகையின் பின் வரிசைகளில் உட்கார்ந்திருந்தகூட்டம் கொட்டகை அதிரக் கை தட்டியது. அதிகப் பணத்தைக்கொடுத்துவிட்டோ அல்லது இலவசமாகவோ முன் வரிசைகளில் உட்கார்ந்திருந்தவர்கள் முகங்களைச் சுளித்தனர். நாளெல்லாம் உழைத்து விட்டு உழைப்பை மிகுதியாகக் கொடுத்து விட்டு, பற்றுக்குறைவாகப் பெற்றுக் கொண்டு திண்டாடிய கூட்டம் பின் வரிசைக் கூட்டம். முன் வரிசைக்காரர்களோ உடல் அசையாமல் எதையாவது குறைவாகச் செய்து விட்டு நிறையப் பெற்றுக் கொண்டு, நிமிர்ந்து திரிந்தவர்கள்.


"எல்லோரும்சோம்பலை உதறி விட்டு அதிகமாக உழைத்தோமானால், ஒவ்வொருவரும் அடுத்த தலைமுறைக்குச் சேர்த்து வைக்க நினைக்காமல் தங்களுக்குத் தேவையானதைமட்டும் எடுத்துக் கொண்டோமானால் நம்முடைய காலத்திலேயே நாட்டில் வறுமை பறந்து போகும். பசி பட்டினி இருக்கவே இருக்காது! இது சத்தியம், சத்தியம், சத்தியம்!" என்று வேகமாக மார் தட்டிக் கொண்டே பேசினான் குருசாமி.

விடுதலை பெற்ற வேகத்திலிருந்த ஏழை எளியவர்களின் மகிழ்ச்சி ஆரவாரம் அங்கு கடலெனப் பொங்கியது. அவனை வெறும் கோமாளியாகவே அவர்கள் நினைக்கவில்லை. தங்களுக்கு வேடிக்கை காட்டி வழி நடத்திச் செல்லக் கூடிய வித்தகன் என்றே நம்பினார்கள். ஆனால் முன் வரிசைப் பிரமுகர் ஒருவரோ, 'இவன் கலையைக் கொலை செய்கிறான்!' என்று முணுமுணுத்துக் கொண்டார். "இவனுக்கு மாத்திரம் அதிகமாய்க் கிடைத்தால், கிடைப்பதைச் சுருட்டிக் கொள்ளாமல் இருந்து விடுவானா?"

பிறகு, கருணைக்கும் குருசாமிக்கும் உள்ள ஊடல் கட்டங்கள் மேடைக்கு வந்தன. நாட்டு மக்களுக்கு நல்லதைச் சொல்லும் கலைக் கோமாளியான தன்னை மணந்து கொண்டு, தன் வாழ்வை இன்ப வாழ்வாக்கும்படி அவளிடம் கெஞ்சினான். மண்டியிட்டான்! ஒரே ஆரவாரம் எழுந்தது.

கருணையோ மேடையைப் பொறுத்த மட்டில் கண்டிப்பாக அவன் வேண்டுகோளை மறுத்து விட்டாள். ஆனால் அவளுடைய இதயம் புழுவாய்த் துடித்தது. 'இந்தப் படுபாவி எவ்வளவு வேதனையோடு, உருக்கத்தோடு எல்லாருக்கும் எதிரில் இப்படிக் காதலைச் சொல்லிக் கெஞ்சுகிறார்? இவ்வளவும் நடிப்புத்தானா? இல்லை. இது வெறும் நடிப்பில்லை: வெறும் நடிப்பில்லை!' என்று தவியாய்த் தவித்துக்கொண்டிருந்தது அவள் நெஞ்சு.

நாடகம் முடிந்தவுடன் கொட்டகையிலேயே வசூல் பணத்தை எண்ணி வாங்கினான் குருசாமி. நடிக நடிகையர்கள் தங்கள் வேடங்களைக் களைந்து விட்டு அவனைச் சுற்றிக் கூடினார்கள். ஒவ்வொருவருக்





ரும் கொடுக்க வேண்டியதைக் கணக்குப்படி கொடுத்தனுப்பு? ருன் எல்லாரும் சென்ற

கொட்டகைப் பையனிடம் சொல்லி, அவனை ஒரு டாக்ஸியில் அனுப்பி வைக்கும்படி கூறினான். குருசாமியைச் சுட்டு எரிப்பது போல் ஒரு பார்வை பார்த்து விட்டு, மௌனமாகப் பையனின் பின்

விருப்பமாயிருந்தன. முன் வரிசைக்காரர்களுக்கோ நாடகத்தைத் தவிர, வேறு பல பொழுதுபோக்குகள் இருந்தன. பின் வரிசைக்காரர்களுக்கோ, நாடகத்தை விடத் திரைப்படம் மலிவான பொழுதுபோக்கைத் தந்தது.

மலிவான பொழுது போக்கு என்பதோடு, அது ஓரளவுக்கு மலிவு ரகப் பொழுது போக்காகவும் அமைந்திருந்தது. இசைக் கலை, நாட்டியக் கலை, இப்படி எல்லாக் கலைகள் மீதுமே அந்த இயந்திரக் கலை முட்டி மோதி, அவற்றின் உயிரையே உறிஞ்சி விடக் கூடும் என்று அவன் நினைத்தான். 'இயந்திரங்களை மனிதன் தக்கவிதமாக அடக்கி ஆளத் தெரிந்து கொள்ளாவிட்டால் இயந்திரங்கள் மனிதனையே அடக்கி ஆண்டு விடும்' என்ற கூற்று உண்மைதான் என்றும் அவனுக்குத் தோன்றியது.

கையிலிருந்த பணத்தைப் பார்த்து விட்டுப் பெருமூச்சு விட்டான் குருசாமி. ஐம்பது பேர்களுக்கு மேல் அவனுடைய நாடகத்தை நம்பிப் பிழைக்க வேண்டும். திடீரென்று, இந்த உயிர்க் கலை மீது மோதி, அதைக் கலகலக்க வைத்த இயந்திரக் கலையுடன் நாடகக் கலையை ஒப்பிட்டுப் பார்த்தான். இருபதுக்கும் குறைந்த அளவு கலைஞர்களின் உருவங்களைத் திரையில் காட்டி இரண்டு கோடி மக்களை மகிழ்விக்க முடியும் சினிமாவினால். ஆனால் நாடகம்?

உயிர்த் துடிப்புள்ள நடிகர்கள், உயிர்த் துடிப்புள்ள ரசிகர்களுடன் கொள்ளும் கலை உறவு இனி இவ்வுலகில் நிலைத்து நிற்க வழி உண்டா? 'ஹூம்...! எல்லா உயர்ந்த கலைகளும் குடிசைத் தொழில்களின் அளவுக்குத் தேய்ந்து வருகின்றன. இனி மீட்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் வழி இருக்குமா?'

ஓட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டுத் தன்னுடைய அறையை நோக்கி நடந்தான் குருசாமி. வயிற்றுக்குள் உணவு சென்றவுடன் அவனுக்கு நம்பிக்கையும் பிறந்தது. 'விடுதலை அடைந்த நாடுகளில் எல்லாக் கலைகளும் புத்துயிர் பெற்று வளர்ச்சியடைவது வழக்கம். கலைகளின் ஆக்க சக்தியால் மக்கள் புது விழிப்புப் பெறுவார்கள். ஆகவே கட்டாயம் மற்றக் கலைகளோடு நாடகக்கலையும் வளரத்தான் போகிறது!'

அவனுடைய அறைக்கு முன்னால் ஒரு பெண்ணுருவம் உட்கார்ந்திருப்பதைக் கண்டவுடன் குருசாமிக்குத் தூக்கிவாரிப் போட்டது. கதவைத் திறந்து கொண்டு மின் விளக்கைப் போட்டான். வெளியில் இருளில் அமர்ந்திருந்த கருணை வேகமாக அறைக்குள் நுழைந்தாள். அவன் எதிரில் உட்கார்ந்தாள்.

''என்ன கருணை, இது! உன் அப்பாவின் உடம்புக்கு ஏதும்.....?''

அவளுடைய முகத் தோற்றம் பரபரப்போடுதான் காணப்பட்டது. ஆனால் அவள் வாய் திறந்து பதிலளிக்கவில்லை.

''இப்போதுதானே வீட்டுக்குக் கிளம்பினாய்! அதற்குள் இந்த நேரத்தில் இங்கு வரும்படி என்ன நடந்தது?''

''ஏன், வரக் கூடாதா?'' என்று அவனிடமே கேட்டு விட்டு, ''நான் வீட்டுக்கே போக வில்லை; டாக்ஸியில் நேரே இங்குதான் வந்தேன்'' என்றாள்.

அவளைப் புரிந்து கொண்ட குருசாமி, அவளைப் புரிந்து கொள்ளாதவன் போல் நடிப்பதற்குத் தன்னுடைய திறமைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்துக் கொண்டான்.

''காரணம் என்ன?'' என்றான்.

வருத்தத்தோடு சிரித்தாள் கருணை.

''காரணம் தெரியாமல் கேட்பவர்கள் என்றால் சொல்லலாம். தெரிந்து கொண்டு கேட்பவரிடம் எப்படிச் சொல்வது? எனக்கு மேடையில் நடிக்கத் தெரியுமே தவிர, வெளியில் நடிக்கத் தெரியாது.''

மௌனமாக அவளை உற்றுப் பார்த்தான் குருசாமி. புத்தம் புது ரோஜா மாலையைப் போல் தன் அழகை அந்த அறைக்குள் சிதற விட்டுக் கொண்டு, கலங்கிய கண்களோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள் கருணை.

''இதோ பாருங்கள்! என் மனத்திலிருப்பதை வாய் விட்டுத்தான் சொல்ல வேண்டுமென்றால் நான் சொல்லி விடுகிறேன். நீங்கள் எத்தனையோ பாத்திரங்களாக மாறி எல்லாருக்கும் பாடம் சொல்லிக் கொடுப்பவர். இவ்வளவு நாட்களாக உங்களோடு பழகியும் என்னைத் தெரிந்து கொள்ளாதது போல் எதற்காக நடிக்க வேண்டும்?''

''எனக்கு இப்போது என்னைப் பற்றியே நினைப்பதற்கு நேரமில்லை கருணை. இரவு பகல் எந்த நேரமும் எனக்குக் கவலைகள். இந்தக் கவலைப் பிழைப்பை என்னால் விட்டு விடவும் முடிய வில்லை; பற்றி வாழவும் முடியவில்லை.''

''உங்களுடைய கவலைகளை நான் பகிர்ந்து கொள்ளக் கூடாதா?''

''அது உன்னால் முடியாது; நானும் இப்போது அதற்குத் தயாராக இல்லை.''

''எப்போதும் இப்படியே இருந்து விடப் போகிறீர்களா?''

''ஒரு வேளை கலைகளை நம்பி வாழ்பவர்கள் கவலை இல்லாமல் வாழக்கூடிய சூழ்நிலை இந்த நாட்டில் சீக்கிரம் ஏற்படலாம். மக்களை வளர்ப்பதற்குத்



டாய்லெட் சோப்புகளில்
ராணி போன்றது
glory
மலபார்
குளோரி
டாய்லெட் சோப்
மென்மையான நுரை மனதை விட்டகலாத மெல்லிய நறுமணம் சருமத்திற்கு இதத்தை அளிக்கும் இனிய குணம் இவைகள் குளோரியின் சிறந்த அம்சங்கள். உங்கள் மேனிக்கு மிகவும் சிறந்தது. இன்றே ஒரு சோப் வாங்குங்கள்.
குளோரி உங்கள் சருமத்தை நிச்சயமாக அழகு படுத்துகிறது.
வெஜிடபிள்
சோப் ஒர்க்ஸ்,
கள்ளிக்கோட்டை

தொழில்களும் பணமும் இருந்தால் மாத்திரம் போதாது. பலவிதமான கலைகளையும் கலைஞர்களையும் வளர்த்தால்தான் மனிதர்கள் உற்சாகத்தோடு உழைத்து முன்னேறுவார்கள். அந்த நிலை வருமானால், இப்படி நாமெல்லாம் சிரமப்பட வேண்டியதில்லை.''

''சிரமத்துக்கு நான் பயப்படவில்லை'' என்றாள் கருணை. பிறகு தான் இனியும் அந்தப் போலித் தகப்பனுடன் தனித்து வாழ முடியாதென்றும், தனக்கேற்ற துணைவன் அவன்தான் என்றும் பிடிவாதமாக வாதாடினாள். வாதாடி விட்டுச் சற்று நேரம் மௌனமாகக் கண்ணீர் வடித்தாள்.

உணர்ச்சி வயப்பட்ட பெண், அவளுடைய எதிர்காலத்தை நினைத்துப் பார்க்காமல் கலங்குவதாகவே அவனுக்குத் தோன்றியது. அவனுடைய எண்ணத்தை அவன் வெளியிடவில்லை. அன்பும் இரக்கமும்கூடத் தவறானவை என்று எண்ணினான் அவன். 'திருமணம் செய்து கொண்டு இருவரும் மற்றொருவருக்காகப் பட்டினி கிடக்கலாம். ஆனால் பிறக்கும் குழந்தையைப் பட்டினி போடும் நிலை வந்தால், அந்தக் குற்றத்துக்கு யார் பொறுப்பாளி?' என்று அவன் மனமே அவனைக் கேட்டது.

''நிலைமை தெரியாமல் நீ அவசரப்படுகிறாய் கருணை!'' என்றான் குருசாமி.

கருணை பத்ரகாளியாக மாறினாள். ''இதோ பாருங்கள்! நீங்கள் கொடுக்கும் காசு இனி யாருக்கு வேண்டும்? இந்தாருங்கள். நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். இனி நான் உங்கள் நாடகங்களில் நடிக்கவும் இல்லை; நாம் ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்கவும் வேண்டாம்!''

பணத்தை வீசி எறிந்து விட்டு இருளில் ஓடி மறைந்தாள் கருணை. எழுந்து சென்று அவளைப் பின்பற்றி ஓட முயன்றான் குருசாமி. ஆனால் அவன் கண்களில் அவள் படவேயில்லை.

குருசாமி அன்று இரவு முழுதும் தூங்கவில்லை.

அத்தியாயம் பதினொன்று

பணமும் பாசமும்

சித்திராவின் விருப்பப்படி அவளது பங்களாவுக்கு வந்து சேர்ந்த முருகையனிடம் அவளுக்கு எப்படியெல்லாமோ தன் அன்பையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திக் காண்பித்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றியது.

நாட்டுப் புறத்திலும் நகர்ப்புறத்திலும் தன்னிச்சையாகக் கட்டற்றுத் திரிந்தவன் அவன். அவனுடைய போக்கு சித்திராவுக்குச் சில சமயங்களில் வெறுப்பைத் தந்திருக்கிறது. என்றாலும் வெறுப்பையும் மீறிய விருப்பத்தையும் வளர்த்திருக்கிறது. அவளுடைய கண்களுக்கு விசித்திரமாகத் தோன்றிய அம்மனிதனைக் கொண்டு வந்து முதலில் 'நாகரிகப்படுத்த' வேண்டுமென்று ஆசைப்பட்டாள்.

பஞ்சவர்ணக் கிளி விநோதமான ஓர் அழகு படைத்த பறவை. அந்தக் கிளியைக் கொண்டு வந்து தங்கக் கூண்டில் அடைத்து, அதற்குப் பாலும் பழமும் ஊட்டிச் சிலர் பேசக் கற்றுக் கொடுப்பதில்லையா? அதனோடு கொஞ்சி விளையாடுவதில்லையா? சித்திராவைப் பொறுத்த மட்டில் முருகையன் ஓர் இளம் களிறு. அந்தக் காட்டு யானைக் குட்டியைக் கொண்டு வந்து அவள் தன் விருப்பத்துக்கேற்றவாறு பழக்குவதற்குத் திட்டமிட்டாள்.

முருகையனுக்கு விடப் பட்டிருந்த அறை சின்னஞ் சிறு காட்சிச்சாலையாகவே விளங்கியது. அங்கிருந்த மேசை, நாற்காலி, அலமாரி முதலிய எல்லாச் சாமான்களும் முகம் பிரதிபலிக்கக் கூடிய அளவுக்குப் பளபள வென்றிருந்தன... அவனுடைய முழு உருவமும் தெரியக் கூடிய பெரியதொரு நிலைக் கண்ணாடி. முருகையன் அந்த அறைக்குள் இருந்த போதெல்லாம் இரண்டு முருகையன்கள் அங்கிருப்பதாய் மயங்கச் செய்தது.

எல்லா வசதிகளையும் முன்னேற்பாட்டுடன் செய்து வைத்திருந்த சித்திராவின் அன்பு முருகையனுக்கு வியப்பைத் தந்தது. 'சென்னைத் தெருக்களில் நான் ரிக்ஷா இழுத்ததைப் பார்த்த பிறகுமா சித்திரா இப்படியெல்லாம் செய்திருக்கிறாள்?' இந்த நினைவு வந்தவுடன் அவன் அதுவரையில் வசித்து வந்த முனியாண்டியின் தாழ்வாரமும் அவன் மனக்கண் முன்னால் தோன்றியது. 'மனிதர்கள் இப்படியும் வாழ்கிறார்கள்; அப்படியும் வாழ்கிறார்கள்!'

இரண்டு கரங்களிலும் முருகையனுக்காகத் தைத்திருந்த புதிய உடுப்புக்களை ஏந்திக் கொண்டு அவனுடைய அறைக்குள் நுழைந்தாள் சித்திரா. சுமக்க முடியாமல் அவள் அவற்றைச் சுமந்து வந்த காட்சி முருகையனுக்குச் சிரிப்பை வரவழைத்தது. கொண்டு வந்து அரு



"அன்பர்களே! நான் தேர்தலில் நிற்பது ஏனென்றால், நான் உட்காருவதற்குத் தகுந்த நாற்காலி இன்னும் கிடைக்காததுதான்!"

இல் வைத்து விட்டு, ஏதோ மிகப் பெரிய வேலையால் களைத்துப் போனவன் போல், சோபாவில் சாய்ந்தான்.

"அத்தான்! நீங்கள் எனக்கு முதலாளியாக இருந்தாலும், இந்த வீட்டில் சிறிய முதலாளி சொல்வதைத் தான் பெரிய முதலாளி கேட்க வேண்டும்! தெரிந்ததா?"

"இந்த வீட்டு வழக்கம் எனக்குத் தெரியாது. எல்லாவற்றையும் நீ சொல்லிக் கொடு. நான் கற்றுக் கொள்கிறேன்....!"

"முதலில் இந்தக் கோட்டையும் சூட்டையும் போட்டுக் கொண்டு வந்து எனக்கு முன்னால் நில்லுங்கள். பிறகு நான் உங்களுக்குக் கழுத்துப் பட்டையைக் கட்டி விடுகிறேன்."

"சித்திரா, சித்திரா! தயவுசெய்து என்னை வெள்ளைக்காரன் ஆக்காதே! எப்போதும் நான் உடுத்தும் உடைகளே எனக்குப் போதும்."

"பார்த்தீர்களா? எடுத்த எடுப்பில் என்னோடு சண்டைக்கு வருகிறீர்களே! எங்கே, எனக்காக இதைப் போட்டுக் கொள்ளுங்கள், பார்க்கலாம்."

சித்திராவின் கண்கள் அவன் முகத்தைப் பார்த்துக் கெஞ்சுவது போல் விழித்தன. அந்த விழிகளின் முன்னால் அவன் கீழே விழுந்து விடுவான் போல் தோன்றியது. என்றாலும் சிரித்துக் கொண்டே அவன் விருப்பத்தை மழுப்பப் பார்த்தான்.

"உனக்காக வேண்டுமானால் இன்னொரு நாள் கட்டாயம் போட்டுக் கொள்கிறேன் சித்திரா. இப்போது நீ வாங்கி வந்த வேஷ்டியையும் சட்டையையும் கொடு."

சித்திராவும் விட்டுக் கொடுத்தாள். ஆரம்பத்தில் சில நாட்களுக்கு அவனுடைய போக்கில் சென்று, பிறகு அவனைத் தன் போக்குக்குத் திருப்பி விடலாம் என்ற நம்பிக்கை அவளுக்கு.

அவன் உடை மாற்றிக் கொண்டு திரும்புவதற்குள் அவனுக்கு வேண்டிய அலங்காரச் சாமான்கள் முழுதும் மேஜைமீது பரப்பப்பட்டிருந்தன. தலைக்கு 'கிரீம்' முகத்துக்குப் பௌடர், சட்டையில் போட செண்ட், 'யூடி கோலோன்' - இன்னும் பல்வகைச் சாதனங்களையும் வரிசையாக எடுத்து வைத்திருந்தாள் சித்திரா. அறை முழுதும் குபீரென்று நறுமணம் பரவியது.

முருகையனுக்கு அவளிடம் மீண்டும் வீண் பிடிவாதம் செய்ய மனமில்லை. ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டே, "நல்ல வேளை, கண்ணுக்கு மை, உதட்டுக்குச் சாயம், நகத்துக்கு வர்ணம் என்றெல்லாம் என்னையும் பூசிக் கொள்ளச் சொல்லாமல் இருக்கிறாயே, அது வரையில் தப்பினேன்!" என்று சிரித்தான்.

சித்திராவுக்கு அவன் பேச்சு எதுவும் காதில் விழவில்லை. சிறிது சிறிதாக நாகரிகத்தின் புறச் சின்னங்களால் அவன் மாறிக் கொண்டு வந்தது, அவளுக்கு எல்லையற்ற ஆனந்தத்தைக் கொடுத்தது. 'ஆஹா! எவ்வளவு அழகாக இருக்கிறார்!' என்று நினைத்தாள்.

மெய்ம் மறந்து, முன்பின் தெரியாத ஒருவனை, புதுமையாகப் பார்ப்பது போல் அவள் பார்க்கவே, முருகையன் அவளுடைய விழிகளின் மலர்ச்சியில் கணப் பொழுது மயங்கி நின்றான். அவளுடைய விழிக் கோணத்தின் ஒரே ஒரு பார்வைக்காக எந்தச் சாகசத்தையும் செய்வதற்கு அவன் தயாராக இருந்தான்.

கனைப்புச் சத்தம் கேட்டது. இருவரும் சட்டென்று திரும்பிப் பார்த்தார்கள். தாத்தா சிறியதொரு காகிதக் கட்டை எடுத்துக் கொண்டு வந்து முருகையனிடம் நீட்டினார்.

"என்ன தாத்தா?"

"தம்பி உங்ககிட்டே இந்தக் காகிதத்திலே கையெழுத்து வாங்கிக்கிட்டு வரச் சொன்னார். மூணு காகிதத்திலேயும் மூணு கையெழுத்துப் போட்டுத் தாருங்க!"

வெறும் காகிதங்களில் கையெழுத்தைக் கேட்டவுடன் யோசனை செய்தான் முருகையன். வெற்றுக் காகிதங்களில் அவனுடைய தகப்பனார் குமரவேலுக்காகக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்ததையும், அதன் பின்விளைவுகளும் அவனை அப்படி யோசிக்க வைத்தன.

"ஒன்றும் எழுதக் காணோமே, தாத்தா! வெறும் காகிதத்தில் எதற்குக் கையெழுத்து?"

''எல்லாம் நம்பளோட வியாபார விஷயமாகத்தான் இருக்கும். போடுங்க, தம்பி!'' என்றார் அவர்.

''அத்தானுக்கு எங்கே அவருடைய சொத்துக்களை எடுத்துக் கொள்ளப் போகிறார்களோ என்று பயம் வந்து விட்டது!'' என்று கேலியாகக் கூறிக் கலகல வென்று நகைத்தாள் சித்திரா. ''உங்களுக்குச் சொத்தைக் கொடுப்பதற்குத்தான் என் அண்ணா கையெழுத்துக் கேட்கிறார். போட்டுக்கொடுங்கள்.''

சித்திராவின் கேலிச் சிரிப்பு முருகையனின் மனத்தில் சுருக்கென்று தைத்தது. 'ஆமாம். இனி இழப்பதற்கு என்ன இருக்கிறது? வீணாக மனிதர்களைச் சந்தேகப்படுவது தவறுதான்'— என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டே, மளமளவென்று கையெழுத்துக்களைப் போட்டுக் கொடுத்தான். தாத்தாவும் வேகமாகத் திரும்பினார்.

சொத்துக்களை இழந்தால்தான் அது இழப்பு என்று கருதுகிற இந்த உலகத்தில், முருகையனுக்கு அப்போது தன்னில் ஒரு பகுதியையே அந்தக் கையெழுத்துக்களில் இழந்து விட்டது தெரியவில்லை. சித்திராவுக்கோ தன் அண்ணா தன்னுடைய தொழில் சம்பந்தமாகத்தான் அவனிடம் கையெழுத்து வாங்குகிறார் என்ற எண்ணம். மிகவும் பெருமையோடும் உற்சாகத்தோடும் தனக்குத் தொழில் பற்றி எல்லாம் தெரிந்தது போல் அவனிடம் பேசத் தொடங்கினாள்.

''அண்ணா பணம் எதுவும் போடாமலே லாபத்தில் பாதிப் பங்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஆரம்பிப்பது அவராக இருப்பதால் இப்போதைக்குச் சரி என்று சொல்லியிருக்கிறேன். சீக்கிரம் நீங்கள் எல்லா விஷயங்களையும் கற்றுக் கொள்ளுங்கள். எதற்காக நாமே முதல் போட்டு, நாமே உழைத்து, அவருக்கு லாபத்தில் பாதி தரவேண்டும்?''

முருகையனுக்கு அவள் பேச்சு வியப்பாகத் தோன்றியது. ஒரே குடும்பத்தில் பிறந்த இருவருக்குள் பணத்தைப் பற்றி இப்படிக் கூட நினைப்பார்களா? சகோதர பாசம் என்று சொல்கிறார்களே, அதை விட வலிமை இந்தப் பணத்துக்கு இருக்கும் போலும்!

''யாருக்கு லாபம் வந்தால் என்ன சித்திரா? உன் அண்ணா, உன்னுடைய நன்மைக்குத்தானே செய்கிறார்?''

''போங்கள், அத்தான், உங்களுக்கு ஒன்றுமே தெரிய வில்லை!'' என்று சிணுங்கினாள் சித்திரா. ''அவர் இப்படித்தான் தம்முடைய சொந்த முதலையும் போடாமல், உழைக்கவும் செய்யாமல், பல இடங்களில் பங்குதாரராக இருக்கிறார். சொந்தத் தங்கையாயிற்றே என்று என்னிடமாவது கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் அவருக்கு என்ன குறைந்து விடுமாம்?''

''நீதான் விட்டுக் கொடுத்தால் உனக்கு என்ன குறைந்து விடும்?''

''அண்ணனுக்கு ஐம்பதினாயிரம் லாபம் வந்து எனக்குப் பத்தாயிரம் வந்தால், அண்ணியின் கண்களுக்கு நான் குறைந்தவளாகி விட மாட்டேனா? இந்தப் பெண்களைப் பற்றி உங்களுக்கு ஒன்றுமே தெரியாது அத்தான்! அண்ணி ஏளனமாய் என்னை ஒரு பார்வை பார்த்தால் நான் எப்படி அதைப் பொறுத்துக் கொள்வதாம்?''

முருகையனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. பணம் சம்பாதிப்பது என்பது தேவைக்காக உண்டு; ஆடம்பரச் செலவுகளுக்காக உண்டு. எதிர்காலச் சேமிப்புக்காகவும் உண்டு. ஆனால், 'யார் பெரியவர்?' என்ற போட்டிக்காகவும் சம்பாதிப்பது உண்டு போலும்! 'பெரும் பணம் சேர்ப்பவர்களே பெரிய மனிதர்கள்' என்றால் போட்டி ஏற்படத்தானே செய்யும்?

''சித்திரா! வீட்டுக்குள் இந்தப் பணப் போட்டி வேண்டவேவேண்டாம். அன்பு செலுத்தும் போது எந்த வேற்றுமையும் நமக்குள் தோன்றாது'' என்றான் முருகையன்.

''போங்கள் அத்தான், உங்களுக்கு ஒன்றுமே தெரியாது!'' என்ற பல்லவியைத் திரும்பவும் பாடினாள் எல்லாம் தெரிந்தவள்.

''சரி, பணப் பேச்சுக் கிடக்கட்டும்! இப்போது எனக்குப் பசிக்கிறது; பணத்தைச் சாப்பிட முடியாது!'' என்று சொல்லிக் கொண்டே, எதேச்சையாக நடந்து நிலைக் கண்ணாடிக்கு அருகில் சென்றான் முருகையன்.

கண்ணாடியில் அவனுடைய முழுத் தோற்றத்தையும் கண்ட சித்திரா, மற்ற எல்லாவற்றையும் மறந்து விட்டு, ''எங்கே! அப்படியே ஒரு நிமிஷம் கண்ணை மூடிக் கொண்டு நில்லுங்கள்'' என்று கட்டளையிட்டாள்.

ஒன்றும் புரியாதவனாக ஒரு கணம் கண்களை மூடித் திறந்தான் முருகையன். நிலைக்கண்ணாடியில் இப்போது இரண்டு உருவங்கள் அருகருகே தெரிந்தன. இந்த உலக நினைவே இல்லாமல் அவர்கள் இருவரும் ஒருவர் உருவத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

வாசற் கதவருகே நிழலாடியது. அப்போதுதான் பெரியபாளையத்திலிருந்து சென்னைக்கு வந்திருந்த குமரவேல், அந்தக் காட்சியைக் கண்டு விட்டுப் பிரமை பிடித்தவர் போல் விழித்தார்.

(தொடரும்)





பொம்மி திருமணம்

கதிர்

"கல்யாணமென்றும், இது மாதிரி எப்போதுமே நடந்ததில்லை. அது என்ன கூட்டம், அது என்ன கூட்டம்.....!"

"வெற்றிலை பாக்குக் கடையில் ஒரு சோடா வாங்கிக் குடிக்கலாம் என்று பார்த்தேன். ஒரு கடையிலாவது கிடைக்கவில்லை. எல்லாம் 'எம்டி' பாட்டில்கள். ஒரு வெற்றிலை பாக்குக் கிடைக்கணுமே.....ஊம்ம்....."

"இதைச் சொல்லப் போய் விட்டீர்களே, காப்பி ஹோட்டல்களில்....வெறும் வெந்நீருக்குக் காப்பி என்று பெயரிட்டுக் கொடுத்தானே பாருங்கள். அதை வாங்கிச் சாப்பிட நடந்த சண்டையை விவரிக்கவே முடியாது. போங்கள்.....!"

"இவ்வளவு சொல்லப் போய்விட்டீர்களே! ரயிலை விட்டு இறங்கினதும், வெறும் நாளில் 'என் வண்டியில் ஏறுங்கள், என் ரிக்ஷாவில் ஏறுங்கள்...' என்று வழியை மறித்துக் கையைப் பிடித்து நம்மைத் தூக்கிப் போட்டுக் கொள்வார்களே, ரிக்ஷாக்காரர்களும், வண்டிக்காரர்களும். இன்று ஐந்து ரூபாய் கொடுத்தால்கூட ஓர் ஆள் திரும்பிப் பார்க்கவில்லை. நானே தலையில் பெட்டியை வைத்துக் கொண்டு வந்து சேர்ந்தேன். விசாரித்தால், எல்லா வண்டிகளும் கல்யாணத்துக்கு ஏற்பாடாகி விட்டனவாம்!"

"குழந்தைக்கு அரை டம்ளர் பால் கிடைக்கவில்லை என்றும், நீங்கள் ஏதேதோ சொல்ல வந்து விட்டீர்களே.....!"

"மொத்தம் ஆயிரம் கார்களாவது வந்திருக்குமென்று தெரிகிறது. இவை தவிர, ஜீப்புகள், ஸ்பெஷல் டூரிஸ்ட் பஸ்கள் வேறே. 'பெட்ரோல் பங்கு'க்காரன், டாங்கிலிருந்து பெட்ரோல் ஸ்டாக் தீர்ந்து போய்ச் சொல்லாமல் கொள்ளாமலே, பூட்டிக் கொண்டு ஓடிப் போய் விட்டானாம். 'பங்கி'ல் பெட்ரோல் ஸ்டாக் இல்லை, இல்லை என்று சொல்லி அவனும் சமாளிக்க முடியவில்லையாம்...."

"அதெல்லாம் சரி. இப்போது விஷயத்துக்கு வாரும். இந்தப் பஸ் ஸ்டாண்டில் காத்துக் கொண்டிருக்கிற கூட்டத்தைப் பாரும். 'க்யூ' வரிசைகளின் நீளத்தைப் பாரும்.... நமக்குப் பஸ் கிடைத்து, இடம் கிடைத்துப் போய்ச் சேருவதற்குள் அஸ்தமித்துப் போய் விடும் என்று தோன்றுகிறது. இப்போதே காலவெயில் 'சுள்' என்று அடிக்க ஆரம்பித்து விட்டது. இது முற்றுவதற்குள் பேசாமல் கால்நடையாகப் போய் விடலாமா? என்ன சொல்லுகிறீர்? தலையில் டிரங்குப் பெட்டியைத் தூக்கி வைத்துக் கொள்ளுங்கள்."

"பார்க்கலாம், பார்க்கலாம். கொஞ்சம் பொறுத்திருங்கள். நான் எவ்வளவு தூரமானாலும் நடந்து விடுவேன். குழந்தைகள் நடக்குமா? 'காலை வலிக்கிறது அப்பா' என்று வழியில் கத்த ஆரம்பித்தால், அதுகளையும் அல்லவா நான் தலையில் தூக்கிக் கொள்ள நேரும். நீர் என்ன ஒன்றிக்கட்டைத் தம்பதிகள். மனைவியை அழைத்துக்கொண்டு விடுவிடு வென்று நடந்து விடலாம். நான் அப்படியில்லை. கையிலே இரண்டு, காலிலே இரண்டு......"

"நல்ல கல்யாணம் சார், இது! நல்ல கல்யாணம்! இந்த மாதிரி நான் பார்த்ததே இல்லை. அப்பப்பா என்ன கூட்டம், என்ன அமர்க்களம்....பூலோகமா, தேவலோகமா என்றல்லவா அமர்க்களப்படுகிறது!"

"பின்னே என்ன? சினிமா ஸ்டார் பொம்மிக்குக் கல்யாணம் என்றால் என்ன இலேசா? இந்தத் திருப்பதி பஸ் ஸ்டாண்டிலே, டிக்கெட் கொடுத்துக் கைசோர்ந்து இரண்டு பேர் மயக்கம் போட்டு விழுந்து விட்டார்களாம். சத்திரக் காவல்காரன் சொன்னான்."

"ஆமாம், அலமேலு மங்காபுரத்திலே தானே கல்யாணம்?"

"ஆமாம். விடியற்காலம் இருட்டோடு ஐந்து ஆறரைக்குள் நடந்து விட்டது. திருமலையில் தரிசனம், பிரார்த்தனை, விசேஷ அலங்காரம், அர்ச்சனைகள், ஸ்ரீனிவாசனுக்குக் கல்யாண உற்சவம் இதெல்லாம் இருக்கின்றன. மலைக்கும் திருச்சானூருக்கும் கார்கள் போய் வந்தவண்ணம்தான். கீழே இருக்கிற ஜனங்களை வாரிக் கொண்டு போய் மேலே கொட்டி விட்டு வர வேண்டியது. மறுபடியும் அள்ளிப் போட்டுக் கொண்டு கீழே கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது. இப்படி ஓர் ஐந்நூறு கார்கள் மேலுக்கும் கீழுக்குமாக அல்லாடுகின்றன. டூரிஸ்ட் பஸ்கள், ஜீப்புகள் வேறே ஏறி இறங்கிக் கொண்டு போய்ச் சேர்க்கின்றன. அவ்வளவும் சேர்ந்து ஈடு கொடுக்க முடியாமல்தான் இந்தப் பஸ் ஸ்டாண்டிலே, ஒரு ஜன சமுத்திரம் தேங்கிக் கிடக்கிறது."

"நடந்து போனவர்கள் எத்தனை பேரோ?"

"கொஞ்சமாக மட்டும் இருக்காது. நடக்க முடியாத கிழங்கட்டை, குழந்தை நடிகர்கள்—இது போன்றவர்களின் கதி இந்தப் பஸ் ஸ்டாண்டாகத்தான் இருக்கும். முடிந்தவர்கள் நடந்து சென்றிருக்கலாம். எக்ஸ்ட்ரா நடிகர்கள், நடிகைகள் இவர்களெல்லாம் உள்ளேயும் போயிருப்பவர்கள் நடந்தால் புண்ணியத்துக்கும் புண்ணியம், காலுக்கும் பலம்."

"நான் கேட்டது என்ன, நீங்கள் சொல்வது என்ன? யார் யார் நடந்தார்கள் என்று கேட்டேன். நடந்தும் போயிருப்பார்களோ சினிமாக்காரர்கள் என்று கேட்டேன்."

"திருமலையை என்ன 'சினிமா செட்' என்று நினைத்தீரோ? ஸ்டுடியோக் காரிலே மலை மாதிரி ஒரு சிறிய மேடு கட்டி அதைத் தாண்டுவது போல் செய்கிறார்களே... அந்த மாதிரி என்று நினைத்தீரா. இந்தத் திருமலையையும் ஒவ்வொரு படியாக ஏறித்தான் ஆக வேண்டும். எப்பேர்ப்பட்ட வில்லனானாலும் சரி, தாவிக் குதித்துவிட முடியாது."

''இங்கேயே இப்படிக் கூட்டம் நெருக்குகிறதே. மலை மேலே எப்படி இருக்குமோ? ஒரு வாரம் அதிகாரியிடம் பல்லைக் காட்டி, இரண்டு நாட்கள் லீவ் வாங்கிக் கொண்டு நான் இன்றைக்குப் பார்த்து வந்தேன் பாரும். தரிசனமாவது கிடைக்கிறதோ, அதுவும் கிடைக்காதோ!''

''ஏன் கவலைப்படுகிறீர்? எல்லாம் அவன் பொறுப்பில் விட்டு விடும். கிடைக்காமல் போகாது. கிடைக்கும்.''

''நான்கூடத்தான் மூன்று வருஷங்களாகப் பிரயத்தனப்பட்டு, இன்றைக்கென்று வந்தேன்! சின்னப் பயலுக்கு முடி இறக்கியாக வேண்டும்.''

''முடி இறக்குகிற இடத்தில் மட்டும் கூட்டம் இராது. அது வரையில் நிச்சயம்! எல்லாரும் சினிமா — பாருங்கள்!''

''யாரையா கண்டார்கள்? படம் எடுத்து, என்னை மொட்டையடிக்காமல் காப்பாற்றினால் நான், உன் சந்நிதியில் வந்து மொட்டையடித்துக் கொள்கிறேன் என்று எவ்வளவு பேர்கள் வேண்டிக்கொண்டிருக்கிறார்களோ?''

''ஏழுமலையான் சக்தி இலேசானதா? மன்னன், கள்ளபெருமானுமாயிற்றே....யார் யாரை எங்கெங்கே யெல்லாம் , எப்படி யெப்படி யெல்லாம் ஆட்டி வைக்கிறானோ... ஆட்டக்காரர்களை யெல்லாம் ஆட்டி வைக்கும் சக்தி வாய்ந்த ஆட்டக்காரனுமாயிற்றே.... சாட்டையில்லாப் பம்பரமாய். இந்தப் பொம்மியைச் சொல்லுங்கள், முதலில். இவளுக்குக் கல்யாணம்.......!''

''ஓய், மெள்ளப் பேசுமய்யா! இங்கே சுற்றியிருக்கிறவர்களெல்லாம் பொம்மி கல்யாணத்துக்கு வந்திருப்பவர்கள்தான். எவனாவது, ஏதாவது சண்டைக்கு வரப் போகிறான்.''

''அதற்கில்லை, சார்! அதற்கில்லை. நடிகை பொம்மிக்குக் கல்யாணம். நிஜத்திலேயே கல்யாணம் என்றேன்.''

''ஏன்? இப்போது நிஜக் கல்யாணம்தான். சந்தேகமென்ன?''

''அது சரி, திருப்பதி பஸ் ஸ்டாண்டு படுகிற பாட்டிலேயே நிஜக் கல்யாணம்தான் என்பது தெரிகிறது. நான் சொல்ல நினைத்தது வேறு!''

''என்ன சொல்ல நினைத்தீரய்யா?''

''இல்லை. பொம்மிக்குக் கல்யாணம் என்று ஒன்று......!''

''அதெப்படி நீர் சொல்ல முடியும்? அவளும் ஒரு மனுஷிதானே? ஏன் அவள் செய்து கொள்ளக் கூடாது? மேலும் நாம் யார் அதையெல்லாம் பேசுவதற்கு? ஸ்வாமி ஏழுமலையானுக்கு எல்லாரும் ஒன்றுதான்.''

''நீங்கள் சொல்கிறதும் ஒரு விதத்திலே உண்மைதான். நாம் யார் அதைப் பற்றித் தீர்மானிக்க? நமக்கென்ன அருகதை இருக்கு?''

''எப்பேர்ப்பட்ட பாபங்களும் இந்த மலை ஏறினால் மறைந்து விடும். பேசாமல் இரும். கன்னுபின்னு வென்று மனத்தில் கண்டதைப் போட்டுக் கொண்டு ஸ்வாமி தரிசனத்துக்குப் போகாதேயும்.''

''ஸரணம். இவ்வளவு தடபுடல் வேண்டாமே யென்று சொல்ல வந்தேன். பொம்மி தன் சொந்தக் கல்யாணத்தை 'சிம்பிளா'க முடிச்சிருக்கலாமே என்று சொல்லவந்தேன்.''

''அதனாலே உமக்கு என்ன லாபம்? எனக்கு என்ன லாபம்? செலவு செய்யச் சக்தி இருக்கிறவர்கள் செலவழிப்பதுதான் பொருத்தம். ஆறு கோடி ரூபாய் சம்பாதிச்சிட்டாளாம் பொம்மி. ஒரு இரண்டு லட்சம் இன்றைக்கு வேங்கடாசலபதி விஷயமாகத்தான் செலவாகட்டுமே.''

''சரி. மேலே நகருங்கள், சார். கொஞ்சம் இடை வழி இருக்கிறது. முன்னடியடித்துக் கொண்டு டிக்கெட் வாங்க முடியுமான்னு பாருங்கோ. பாவம்! குழந்தைகளுக்கும் உமக்கும் பஸ்ஸிலே இடம் கிடைக்கணும்.''

''நீர் என்ன செய்யப் போகிறீர்?''

''நட—ராஜா வாகனம்தான். பேசாமல் நடந்தே போயிடலாம்னு பார்க்கிறேன். என் மனைவியும் நடந்து போகணும்னு ஆசைப்படுகிறாள்.''

''பின்னே ஜெம்புறம்... நீர் காலி கோபுரம் ஏறியிருப்பீர். அப்போது நான் டிக்கெட் வாங்கிக் கொண்டிருப்பேன். வழி நெடுகப் பொம்மியைப் பார்க்க வேண்டுமென்று ரசிக மகாஜனங்கள் நின்று கொண்டிருக்கிறார்களாம். அவர்களைப் பார்த்துக் கொண்டே மலை ஏறலாம். அல்லது கார் போகும் வழியாகவே நடந்தும் போகலாம். வழியிலே பொம்மியைப் பார்த்தாலும் பார்க்கலாம்.''

''பொல்லாத மனுஷர் சார், நீர்! தஞ்சாவூர் ஜில்லாவோ இல்லையோ? பேச்சிலேயே ஓர் இடக்கு!''

''சேலம் ஜில்லாவும் இலேசில்லையே. மேட்டூர் அணையில் நீங்கள் சாப்பிட்ட மிச்சம் தானே காவேரியிலே நாங்கள் சாப்பிட்டாக வேண்டியிருக்கிறது.''

❦ ❦ ❦


மலைமீது. கோவில் வாசலில் தர்ம தரிசனத்துக்காக நீண்ட 'க்யூ'. உள் மண்டபங்களைச் சுற்றிச் சுற்றித் தெரு வரையில் வால் விட்டிருக்கிறது. பொம்மி கல்யாண கோஷ்டியினர், பகுதி பகுதியாக உள்ளே செல்வதும், வெளியே வருவதுமாக இருக்கிறார்கள். காற்று வெளியில் ஒரு வித ஜவ்வாது வாசனை, மிதந்து மூச்சுத் திணற வைக்கிறது. சாதாரண ஜன சேவார்த்திகளை. திடீரென்று ஒரு பரபரப்பு. 'வழி விடுங்கள், வழி விடுங்கள்' என்று கூக்குரல்கள். ''என்ன இது?'' என்று பார்க்க முடியாத நிலையில், கூட்டத்தின் தோள் பட்டைகள் மறைக்கின்றன. எல்லாரும் எம்பி, எம்பிக் கழுத்தொடியப் பார்க்கிறார்கள். ''அதோ, பொம்மி, அதோ அவள் கணவன்!'' என்ற குரல்கள். ''யாரு அதுவா பொம்மி?'' — சரியாகத் தெரியவில்லை. பின்தொடர்ந்த நடிகைகளின் மேக் அப் இல்லாத வெறும் தோற்றம் திகைக்க வைத்து அப்படிக் கேள்விகளை எழுப்புகிறது. பிரதான வாசலில் தயாராகக் காத்துக் கொண்டிருந்த பெரியதொரு பிளைமத் புறப்பட்டு விட்டது. அதன் பின்னால், காடிலாக்குகள், பியூக்குகள், வாண்டுமாஸ்டர்கள், ஹட்ஸன்கள், பேபிட்டுகள் ஜெட்டாய்ப் பறக்கின்றன.

பொம்மி தம்பதியினர் தரிசன காரியங்களை முடித்துக் கொண்டு, காணிக்கைகளை நிறைவேற்றி விட்டு, அந்தக் கோஷ்டியினரின் ஆசீர்வாதம், பிரசாதம் பெற்றுப் புறப்பட்டுப் போய் விட்டார்கள். உட்பிராகாரத்தி

லிருந்து வெளியே வர வேண்டியவர்கள் இன்னும் ஏராளமாயிருக்கிறார்கள். எல்லாருக்கும் மனக் குறைவு இல்லாமல் தரிசனம் செய்து வைத்து அனுப்புவதில் கோவில் நிர்வாகிகளின் நோக்கம் நிறைவேறுகிறது. தர்ம தரிசனத்துக்காகக் காத்திருப்பவர்கள், தங்களுடைய பொறுமை எல்லையை அடைந்து விட்டதென்பதை அடிக்கடி 'கோவிந்தா' கோஷம் போட்டு வெளிப்படுத்துகிறார்கள்.

தெருவில், புஷ்கரிணியின் மேற்குக் கரைப் பக்கமிருந்து, ஓர் ஒற்றை நாதஸ்வரத்தின் அபஸ்வர ஒலி கேட்கிறது. அதனுடன் 'மொட்டு மொட்டு' என்று தவுல் வாத்தியம் தட்டப்படும் சத்தம். ஒத்து, தாளம் இவை இல்லாத அந்த வாத்தியச் சத்தத்தை எதிர்க் கொண்டு 'கோவிந்தா, கோவிந்தா' என்ற குரல்கள். பத்துப் பன்னிரண்டு கிராமவாசிகள் கொண்ட எளிய கல்யாண கோஷ்டி அது. கலப்படமில்லாத சுத்த நாட்டுப்புறம் என்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்து கொள்ளும் விதத்தில், மாப்பிள்ளை தலையில் மஞ்சள் நிற முண்டாசு கட்டப்பட்டிருக்கிறது. அரையிலும் மஞ்சள் வேட்டி. மார்பு, கைகளில் எவ்வளவு அதிக அளவுக்குச் சந்தனத்தைப் பூசிக் கொள்ளலாம் என்பதை நிரூபிக்கும் முறையில் காப்பு செய்யப்பட்டிருக்கிறது.... நெற்றியில் பட்டையாகத் திருமண். கழுத்தில் பவளித்துத் தழைகளும் சேர்த்துக் கட்டப்பட்ட பூமாலை. குனிந்த தலை நிமிராத மணப் பெண். மஞ்சள் ஏற்றிய கனமான புடவை நடக்கவொட்டாமல் காலைத் தடுக்கிறது. மண மக்களுக்குப் பின்னால் அவர்களுடைய உறவினர்கள், தாய்தந்தையர்கள் போலும். சிலர் தோளில் குழந்தைகளை உட்கார வைத்துக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகளுக்கு மட்டுமல்லாது பெரியவர்களும் சிரமுடி இறக்கிக் கொண்டிருக்கும் காட்சி. இவர்களை முன்னின்று அழைத்து வருகிறார் ஒரு புரோகிதர். புரோகிதரும், அவர்கள் கூடவே கிராமத்திலிருந்து வந்தவர்தான் போல் இருக்கிறது. இல்லா விட்டால் புஷ்கரிணியில் இறங்குவதற்கு யாரிடமாவது அனுமதி கேட்க வேண்டுமோ என்று, ஒற்றை நாதஸ்வரக்காரரைக் கேட்டிருக்க மாட்டார். எல்லாருமாக, புஷ்கரிணிப் படியில் இறங்குகிறார்கள். தீர்த்தத்தை விரலால் தொட்டு, சிரங்களில் தெளித்துக் கொள்கிறார்கள். படித் துறையில் நடமாடும் பெரிய குரங்குகளைக் கண்டு, குழந்தைகள் வீரிட்டுப் பெரியவர்களின் கால்களைக் கட்டிக் கொள்கின்றன. புரோகிதர் கையில் மஞ்சள் தடவிய தேங்காய் ஒன்று இருப்பதைப் பெருங் குரங்கு ஒன்று பார்த்து விட்டது. கிடைத்தால் எடுத்துக் கொள்ளவும், இல்லாவிட்டால் பறித்துக் கொள்ளவும் தயாராகக் கையை நீட்டிக் கொண்டிருக்கிறது. புரோகிதர் ஏமாந்தவரல்ல என்பது தெரிகிறது. குரங்குப் பிடியாக இடது கையில் தேங்காயைப் பற்றிக் கொண்டு, ஜலத்தில் இறங்கித் தலையில் தண்ணீரைத் தெளித்துக் கொண்டு கரையேறுகிறார். அப்போது அவர் இடுப்பில் திடீரென்று குறுகுறுப்பு உணர்ச்சி. உலர்ந்த அருகம் புல்லால் தேய்ப்பது போன்ற பிரமை. பெருங் குரங்கு அவர் மீது தாவி, கையிலிருந்த தேங்காயைப் பிடித்து இழுக்கிறது. ஓர் உதறல். ஒரு சத்தம். ஒரு விநாடியில் நடந்த அந்தப் போராட்டத்தில்





"என்னுங்க, தேர்தலுக்கு நின்னவுடனேயே மீசையை எடுத்துட்டீங்களே!"

"ஒரு வேளை 'மண்ணைக் கவ்வினு' மீசையிலே மண் ஒட்டாது பாருங்க!"

சாமர்த்தியம் பழுத்த குரங்கு தோற்றது. தேங்காயின் குடுமியை மட்டும்தான் அத னால் பெயர்த்தெடுக்க முடிந்தது. "திருப்பதி யாயிற்றே என்று தேங்காய்க்கு முடி இறக்கிறு யாக்கும்!" என்று கேட்டு விட்டுப் புரோகி தர் குரங்கைப் பார்த்து உறுமியதும், குனிந்த தலை நிமிராமலிருந்த மணப்பெண்ணுக்குக் கூடச் சிரிப்பு வந்துவிட்டது.

"ஹம்...ஆகட்டும்!" என்று துரிதப்படுத் தினார் புரோகிதர், நாதசுரக்காரரைப் பார்த்து.

திருமண கோஷ்டி ஒற்றை மேள சகிதம் கோவில் வாசலை வந்தடைந்தது. மணப் பெண்ணும், மாப்பிள்ளையும் சரிவரக் கரங் களைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்களா என்று ஒரு முறை கவனித்தார் புரோகிதர். தாம் சொன்னாலொழியக் கையை விடவே கூடாது என்று புறப்படும்போதே கண்டிப் பாக அவர் உத்தரவு போட்டிருந்தார். சற்று அஜாக்கிரதையாகக் கையைத் தளரவிட்டிருந் தால்கூட, மாப்பிள்ளை, அவர் திரும்பிப் பார்க்கும் போதெல்லாம் பெண்ணின் கையைப் பிடித்துக் கொள்ளத் தவறுவதில்லை.

"எங்களை அனுப்பி விட்டு, நீங்கள் போங்கள்!" என்று நினைவு படுத்தினான் ஒற்றை மேளக்காரன்.

"சரி, மேளத்துக்குச் சில்லறை கொடுப்பா. கொடு, ஒரு நாலணு!" என்றார் புரோகிதர். நாதசுரக்காரரின் கை வாங்கிக் கொள்ள மறுத்தது.

"ஏன்?" — அதட்டினார் புரோகிதர்.

"சேர்த்துக் கொடுங்க. வைராகி சத்திரத்தி லிருந்து வாசிச்சிட்டு வரேன். மங்கள வாத் தியத்துக்கு நாலணுதானு?"

"சரி, இன்னொரு பத்துப் பைசா கொடு." பத்து நயாபைசாவை நீட்டியும் ஒற்றை மேளக்காரரின் கை வாங்கிக்கொள்ள மறுத் தால் அவரா விடுகிறவர்? தவுல் வாத்தியத் தின் முதுகில் வைத்து விட்டு விடுவிடு வென உள்ளே நுழைந்து விட்டார். தர்ம தரிசனத் துக்காக 'க்யூ' காத்து நின்றது. க்யூவில் நின்று தர்மதரிசனமாகச் சுவாமியைச் சேவிப் பதா அல்லது பணம் கட்டி, உள்ளே சென்று சீக்கிரம் தரிசனத்தை முடித்துக் கொண்டு திரும்பலாமா வென்று கோஷ்டியாருடன் — சிறிது தர்க்கம் — ஆலோசனை நடத்தினார் புரோகிதர்.

எல்லாருக்குமாகச் சீட்டு வாங்கிக் கொண்டு தரிசனம் செய்வதென்றால் அதற்குப் பணம் போதாது. தர்ம தரிசனமாகப் போய்த் தரிச னம் செய்யலாம் என்பதும் சாத்தியமல்ல. 'க்யூ'வின் வால் கண்ணுக்கெட்டும் தூரம் வரையில் நீண்டிருந்தது.

க்யூ வரிசையிலிருந்தவர்கள் பலரும், இந் தக் கல்யாண கோஷ்டியைப் பார்த்து அநு தாபம் கலந்த பார்வையுடன் நகைத்தார்கள்.

"அந்தப் பொம்பிளி கல்யாண மெல்லாம், இதனிடம் என்ன செய்ய முடியும்? மணப் பெண்ணைப் பாரேன், மாப்பிள்ளை கையை விடாமலே பிடித்துக் கொண்டிருக்கிறான்!"

"சுவாமியைக்கூடத் தலை நிமிர்ந்து பார்ப் பானோ, பார்க்க மாட்டானோ?"

"புரோகிதர் போலிருக்கிறது அவர். வரும் படி அந்தத் தேங்காய்தான் போலிருக்கிறது."

"எல்லாம் ஏழுமலையான் திருவிளையாடல். சற்று முன் நடந்ததை விடப் பணக்காரக் கல்யாணமும் இருக்க முடியாது. இந்தக் கிராமாந்தரக் கல்யாணத்தைவிட ஏழைக் கல் யாணமும் இருக்க முடியாது. இரண்டும் ஒரே நாளில், ஒரே சந்நிதியில் ....ஒரே வெங்கடா சலபதி முன்னிலையில்.....!" என்று க்யூவில் பலர் பேசிக் கொண்டனர். ஆனால் அவை ஒன்றையும் புரோகிதரோ மற்றவர்களோ கவ னிக்கவேயில்லை. எல்லோரிடமுமுள்ள மொத் தப் பணத்தை எண்ணுவதிலும், எப்படி உள்ளே சென்று தரிசிக்கலாம் என்பதிலும் வாக்குவாதம் செய்வதில் ஈடுபட்டிருந்தனர்.

"எதற்கும் உள்ளே போவோம், புறப் படுங்கள்!" என்று உத்தரவிட்டார் புரோகி தர். சற்று அருகில் போகும் வழியில் நின்று கொண்டிருந்த பாராக்காரன் தடுக்கக் கூடுமோ வென்று சிறிது தயங்கி, அவனைப் பார்க்காததுபோல் பார்த்தார். "கோவிந்தா கோவிந்தா!" என்று கோஷம் செய்து கொண்டு அவர்கள் நான்கு அடி எடுத்து வைத்ததும், அது வரை அசையாது நின்ற பாராக்காரன் முன்னால் நகர்ந்து நிறுத் தினான் புரோகிதரை. மற்றவர்களும் நின்று விட்டார்கள்.

"இப்போது நீங்கள் உள்ளே போகப் பிர வேசமில்லை. சீட்டு வாங்கக் கூட முடி யாது" என்று அவன் கூறவும் இடிந்து விட் டார் புரோகிதர். பிறகு மீண்டும் உயிரை வரவழைத்துக் கொண்டு, "உண்டியலில் காணிக்கைபோடணுமே!" என்று இழுத்தார்.

"நீங்கள் உண்டியலில் காணிக்கை செலுத்தலாம். ஆனால் தரிசனம் செய்ய வேண்டுமானால், சீட்டு வாங்க முடியாது. சீட்டு கொடுத்து முடிந்து விட்டது. அதை வாங்கினவர்களே இன்னும் ரொம்பப் பேர்கள் தரிசனத்துக்காகச் சுவர்ண வாசல் வெளியே காத்துக் கொண்டிருக்கிறார்கள்."

"எதற்கும் நாங்கள் உள்ளே போகிறோம். போகலாமோ இல்லையோ?"

"போகலாம். உள்ளே இருக்கிற நிலைமையை உங்களுக்குச் சொன்னேன். காணிக்கை போட்டுவிட்டுத் தரிசனம் பண்ணு மலே திரும்பி வரலாம். இல்லையானால் சாயங் காலம் சீட்டு வாங்கிக் கொண்டு தரிசனம் செய்யலாம்."

உள்ளே போகவேண்டும் என்று அவருக்கும் மற்றவர்களுக்கும் இதயம் துடித்தது.

"உண்டியல் வாசல் வரை போய்ப் பார்க் கிறேம்!" என்று கூறிவிட்டு முன்னே நடந் தார் புரோகிதர். கைப் பற்றுதலாக இருந்த தம்பதிகளும் மற்றவர்களும் அவரைப் பின் தொடர்ந்தனர். துவஜஸ்தம்பத்தைத் தாண்டி உள் வாசலில் நுழைந்தனர்.

கவர்ண வாசல் சந்நிதி மண்டபத்துக்கு முன், கம்பிகளுக்கு வெளியே ஏராளமான பேர்கள் கையில் சீட்டுடன் காத்துக் கொண் டிருந்தனர். பிராகாரத்தைப் பிரதட்சிணம் செய்து கொண்டு வந்தது கிராம கோஷ்டி. சீட்டு எங்கே கொடுக்கிறார்கள் என்பதை விசாரித்தார் புரோகிதர். கம்பிகளுக்கு உள் ளிருந்து கணக்குகள் எழுதிக் கொண்டிருந்த வர்களிடம், "அவர் இருக்கிறாரா? இவர் இருக் கிறாரா? அவருக்கு என்னைத் தெரியும். இவருக்கு என்னைத் தெரியும்" என்று ஏதேதோ கூறித் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள முயன் றார். முடியவில்லை. புரோகிதர் குறிப்பிட்ட வர்கள் எல்லோரும் ஏதோ இருபது இருபத் தைந்து வருடங்களுக்கு முன் அங்கு ஊழியம் செய்தவர்கள் என்று தெரிந்தது உள்ளே இருந்தவர்களுக்கு. பிறகு தம்முடைய மேல் வேட்டி முனையில் தொங்கிக் கொண்டிருந்த முடிப்பு ஒன்றைப் பிரித்து அதிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்தார். அதைக் கம்பிகளின் இடுக்கு வழியாக உள்ளே செலுத்தி, "இந் தக் கடிதத்தைப் பாருங்கள். தயவுசெய்து... கொஞ்சம் இந்தப் பக்கம் பார்க்கணும்!" என்று கூறினார்.

எழுத்து மும்முரத்தில் தனித்துக் கொண் டிருந்த கணக்குப் பிள்ளைகளில் ஒருவர், "என்ன கடிதம் அது?" என்று கேட்டதே புரோகிதருக்குப் பெரும் மகிழ்ச்சியை அளித் தது. தமது கல்யாண கோஷ்டியினரை நோக்கி, ஓர் அதட்டல் போட்டு, "என்னோடேயே நிற்பானேன்? நான் அநுமதி வாங்குவதற்குள் நீங்கள் பிரதட்சிணம் செய்து கொண் டிருங்கள். போங்கள்!" என்று வெருட்டி னார். வெருட்டிய வேகத்திலேயே மணமக னுக்கும், மணப் பெண்ணுக்கும் ஓர் எச் சரிக்கை: "கையைப் பிடித்துக் கொண்ட படி பிரதட்சிணம் ஆகட்டும்!" என்றார்.

"என்ன லெட்டர் ஸ்வாமி அது?"

"ஒன்றுமில்லை. எங்களூர் தாசில்தார் கொடுத்தார். என்னைப் பற்றி அதில் எழுதி யிருக்கிறது. சற்று நீங்கள் அதை வாசிக்க ணும். ரொம்பத் தூரத்திலிருந்து வருகிறோம் நாங்கள். விசாகப்பட்டணத்துக்கும் அப்பால் பிரம்மாபுரம் கிராமம். கிராம மணியம். அதோடு புரோகிதம். என் பெயர் சூரிய நாராயண கோபால......"

"இருக்கட்டும். இப்பொழுது என்ன செய்யணும் உங்களுக்கு?"

"பன்னிரண்டு பேருக்குத் தர்சனத்துக்குச் சீட்டு வேணும்!"



"நீங்க தேர்தலிலே குதிக்கப் போறீங்களாமே...?"

"நம்மாலேயெல்லாம் குதிக்க முடியா துப்பா; நிக்கத்தான் போறேன்!"

"எல்லாம் கொடுத்தாகி விட்டது. அங்கே சீட்டு வாங்கி வைத்துக் கொண்டு நிற்கிறார் களே, அவர்களில் யாராவது உபரியாக அழைத்துப் போகக்கூடியவர்கள் இருக்கலாம். இங்கே ஒன்றும் செய்வதற்கில்லை. அங்கே போய்க் கேட்டுப் பாருங்கள்!"

தமக்கு இல்லா விட்டாலும் கிடைக்கக் கூடிய வழியையாவது கூறினாரே என்ற சந் தோஷத்தோடு அங்கே ஓடினார் புரோகிதர்.

"தம்மோடு ஆறு பேர்கள் வரலாம்" என்றார் ஒருவர்.

"என் சீட்டுக்கு இன்னும் ஐந்து பேர்கள் வரலாம்" என்றார் இன்னொருவர். இன்னும் ஒருவர் தானே. எப்படியோ பார்த்துக் கொள்ளலாம் என்ற தைரியமும், களிப்பும் அவரைத் துள்ளி எழச் செய்தன. "பிரதட்சி ணம் போதும். இப்படி வாருங்கள்!" என்று திருமணக் கோஷ்டியை நிறுத்தித் தம்முடன் அமர்த்திக் கொண்டார். கதவு திறந்தது. தலைகள் எண்ணிப் பார்த்து உள்ளே சீட்டை வாங்கிக் கொண்டு அனுப்ப ஆரம்பித்தனர். அச்சம், ஆச்சரியம் இரண்டும் சமமாகக் கலந்து ஒதுங்கி நின்ற கோஷ்டியை நோக்கி, "போங்கோ! உள்ளே!" என்று கர்ஜனை செய் தார் புரோகிதர். மணமக்களையும் மற்றவர்களை யும் முன்னால் விட்டுத் தலைகளை எண்ணுவ தற்கு அதிக அவகாசம் கொடுக்காமல் துரிதப் படுத்தினார். தமது கோஷ்டியையும் தம்மை யும் உள்ளே விட உதவிய அந்த இருவரையும் மதித்து வாயாரப் புகழ்ந்தார்.

கண்டதும் கவர்ந்து இழுத்துத் தன்பால் கலந்து கொள்ளும் சக்தி, வேங்கடரமணா வின் தனி விசேஷம் என்பதைப் பற்றி அவர் கேள்விப்பட்டுத்தான் இருந்தாரே தவிர, இது வரை அதை நேரில் அநுபவித்துப்

பார்த்ததில்லை. பங்காரு வாசற்படி மீது காலை வைத்து உள் நோக்கியதும், "ஏ! பிரபோ!" என்று கவர்ச்சியில் உள்ளம் வெடித்து அலறி விட்டார் புரோகிதர். அவருடன் இருந்த கோஷ்டியினர் எழுப்பிய கோவிந்தா முழக்கம் மற்றவர்களையும் மெய் சிலிர்க்கச் செய்துவிட்டது. சுவாமியை அகலக் கண்களைத் திறந்து அலைகடலை அண்டங்கள் பருகுவது போல் பருகியவாறு மெள்ள மெள்ள முன்னோக்கி நகர்ந்தார் புரோகிதர்.

வைரஹஸ்தம், நவரத்ன கிரீடம், வஜ்ராங்கி சேவை. இவை மட்டுமல்ல, கிடைத்தற்கரிய ஸ்ரீபாத தரிசனமும் அன்று தனி விசேஷமாக அமைந்து தேஜோமயமாக விளங்கின. இரண்டு முறை தீர்த்தப் பிரசாதம் கேட்டு வாங்கிக் கொண்டார் புரோகிதர். அதே மாதிரி சற்றுப் பிடிவாதம் செய்து, மணப் பிள்ளைக்கும், மணப் பெண்ணுக்கும் வாங்கிக் கொடுத்தார். சிரம் தாழ்த்திச் சடாரிக் கருணை பெற்றுக் கொண்டார். கண்களிலிருந்து தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் சிந்தியபடி, அர்ச்சகரை நோக்கி, "இவர்களுக்குக் கொஞ்சம் துளசிப் பிரசாதம் இன்னும் ஒரு முறை கொடுங்கள்!" என்று கேட்டுக் கொண்டு, "அம்மா, இப்படி வா. நீயும் வா. அப்பா இப்படி!" என்று அழைத்தார் மணமக்களை.

"நகருங்கள்....தரிசனம் ஆனவர்கள் நகருங்கள்!" என்று குரல்கள் கேட்ட பிறகுதான் அங்கிருந்து திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே புரோகிதரும் மற்றவர்களும் மனமில்லாமலே வெளியே வந்தார்கள்.

"உங்களுக்கு அதிர்ஷ்டம்தான், இன்று இம்மாதிரி சேவை கிடைத்தது!" என்றார் முதலில் பார்த்த பாராக்காரர். "இன்று பதினாயிரம் ரூபாய் செலவு செய்து நடத்திருக்கிறது. அலங்காரம் உற்சவம் எல்லாம்!" என்றார் பாராக்காரனோடு நின்று கொண்டிருந்த வேறொரு மனிதர். "ஆ! அப்படியா?" என்று புரோகிதரும், அவர் கோஷ்டியைச் சேர்ந்த பிரம்மாபுரம் கிராமவாசிகளும் சற்றுத் திகைத்தே விட்டார்கள்.

காணிக்கைத் தொகை பதின்மூன்று ரூபாயைத் தம்பதிகள் கையில் கொடுத்து, "இருவரும் சேர்ந்தாற்போல் உண்டியலில் போடுங்கள்" என்றார் புரோகிதர். அவர்கள் அவ்வாறே நான்கு கரங்களையும் ஒன்று குவித்து உண்டியலில் காணிக்கையைப் போட்டனர். விறுவிறு வென்று அவர்களை அழைத்துக் கொண்டு முன்னே நடந்தார் புரோகிதர். "எங்கே, ஏன்?" என்று அவர்கள் வாய் திறக்கவில்லை. பேசாமல் அவர் கூட நடந்தார்கள். எல்லாரையும் அழைத்துக் கொண்டு, தர்ம தரிசன 'க்யூ'வின் கடைசியில் போய் நின்றுகொண்டு, மறுபடியும் ஒரு முறை 'தரிசித்து விடுவோம்' என்று கூறினார்.

இரண்டு மணி நேரம் சென்றபின் தர்ம தரிசனம் கிடைத்தது. மீதமாயிருந்ததெல்லாம் இன்னும் ஒரே ஒருசடங்குதான். அதுவும் அவராகச் செய்ய நினைத்ததுதான். மாப்பிள்ளை, பெண் முதலியவர்களை யெல்லாம் ஒரு பக்கமாக உட்கார வைத்து விட்டு, பங்காரு வாசலை நோக்கி ஓடினார். தர்ம தரிசனமெல்லாம் முடிந்து வெளியே களைப்புடன் வந்து கொண்டிருந்த அர்ச்சகரிடம் ஏதோ நயந்தபடி கேட்டுக் கொண்டார். "போய் இருங்கள். வருகிறேன்!" என்றார் அவரும். முன்னதாகவே கிராமவாசிகள் கோஷ்டியுடன் நின்று கொண்டார் புரோகிதர்.

சிறு தட்டு ஒன்றுடன், அர்ச்சகரும் வந்தார். எழுந்து நமஸ்கரித்தனர் மணமக்களும் மற்றவர்களும். அர்ச்சகர் எல்லாரையும் உட்காரச் சொல்லித் தாமும் அவர்கள் முன் அமர்ந்தார். ஆசீர்வாதம் செய்து, தட்டிலிருந்த அர்ச்சனைத் தளங்களில் சிறிது எடுத்து மணமகனுக்கும், மணப் பெண்ணுக்கும் கொடுத்துப் பெயர் என்னவென்று கேட்டார் இருவரையும். "நரசிம்மலு!" என்றான் மணமகன். "மணப் பெண்ணின் பெயர்?" என்று வினவினார் அர்ச்சகர். "பொம்மி!" என்று பதில் வந்தது.

"என்ன பொம்மியா?"—அர்ச்சகர் ஆச்சரியமுற்றார். எட்டி நின்று கொண்டிருந்த பாராக்காரன் இதைக் கேட்டு, வியப்பினால் தனது புருவங்களை உயர்த்திக் கொண்டான்.

அன்றும் மறுதினமும் பொம்மி கல்யாணச் சிறப்பு பற்றித்தான் எங்கும் பேச்சாக இருந்தது. பத்திரிகைகளில் செய்திகள் பக்கம் பக்கமாக வெளியாயின. ஏழுமலையானுக்குப் பொம்மி, கல்யாணத்தை முன்னிட்டு விசேஷ அலங்காரம், அர்ச்சனைகள், வைரஹஸ்தம், வஜ்ராங்கி திருக்கோலம், நவரத்தின கிரீடம் ஆகிய விமரிசைகள் நடந்தன! தரிசனம்! இவ்வளவு அமர்க்களமாகப் பொம்மி கல்யாணம் நடந்தேறுமென்று பிரம்மாபுரம் புரோகிதரும் கூட நினைக்க வில்லை. ஊர் போய்ச் சேர்ந்து ஒரு வருஷம் வரையில் பொம்மி கல்யாணத்தைப் பற்றித்தான் அவரும் பேசிக் கொண்டிருந்தார்.

தற்கால நாகரீகம்

கைத்தறி துணிகளே



தனிப்பட்ட அழகுக்கும் கவர்ச்சி
கரமான தோற்றத்திற்கும் கைத்தறி
சேலைகளையே அணியுங்கள். பட்டிலோ
அல்லது நூலிலோ செழுமையான வர்ணங்
களிலும், மோஸ்தரிலும், கைத்தறி
சேலைகள் சிறந்தவை. கைத்தறி
துணிகள் கவர்ச்சியானவை,
நீடித்துழைப்பவை, மேலும் அவை
சிக்கனமானவையும் கூட. கைத்தறியே
தற்கால நாகரீகமாகும். இந்தியா
வின் எல்லா பிரதேசங்களிலும்
தயாராகும் கைத்தறி துணிகள் பல
ரகங்களில் கிடைக்குமிடம் :—

ஹாண்ட்லூம் ஹவுஸ்,
9, ரடன்பஜார், சென்னை-3.

தலைமை ஆபீஸ்: அகில இந்திய கைத்தறி
துணிகள் விற்பனை கூட்டுறவு சங்கம்
லிமிடெட், ஜன்மபூமி சேம்பர்ஸ், பம்பாய்-1.


FDS/HH/13-TM


பவழத்தீவு
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி
4
மூழ்கிய கொள்ளைக் கப்பலில் சிறைப்பட்டிருந்த ஆனந்தன் என்ன ஆனான் என்பதைத் தெரிந்து கொள்ளுமுன் உங்களைப் பவழத் தீவிற்கு அழைத்துச் செல்லப் போகிறேன். வாருங்கள் போகலாம்........!
எத்தனையோ விந்தையும் விசித்திரமும் பயங்கரமும் நிறைந்தது பவழத் தீவு. அதில் மக்கள் வசிக்கும் பகுதியோ மிக மிகச் சிறியது. அதை ஆண்டு வந்தவனோ சூதும் வஞ்சனையும் நிறைந்த கூலவபாணி. தீவு முழுதும் பரந்து கிடந்த கானகத்தினுள் புகுந்து அதன் அதிசயங்களைக் கண்டறிந்தவர் யாருமில்லை. அத்தகைய அதிசயங்களில் ஒன்று கந்தன். இயற்கை வளர்த்த குழந்தை அவன். கானகத்தின் செல்வன், மிருகங்களின் தோழன். அதோ......!
காட்டு நீர்வீழ்ச்சி. மெத்தென்ற பசும் புல் வெளிகள். புள்ளிமான் குட்டி ஒன்று.
அடர்ந்த மரக் கிளைகளிடையே - ஆபத்து எட்டிப் பார்க்கிறது...
கானகத்தின் அமைதியை வேங்கையின் ஆக்ரோஷமான உறுமல் குலைத்தெடுக்கிறது.
கானகத்தில் ஏற்படும் எந்தச் சிறு அசைவின் காரணத்தையும் அறியும் ஆற்றல் படைத்த - உருவம் மானின் ஈனக்குரல் கேட்டுத் திடுக்கிடுகிறது...
அது மணியின் குரலல்லவா?
மணிக்கு - ஏதோ ஆபத்து அதைக் காப்பாற்றியாக வேண்டும்.


வேங்கை-
யோடு கட்டிப்
புரண்டான்-
கந்தன். கடுமை
யான போராட்டம்
காயமடைந்த மான் குட்டியை முயல்
கள் மெள்ளப் புதர் மறைவிற்குத் தள்ளிக்
கொண்டு போகின்றன...
வேங்கையோடு போரா
டும் கந்தன் களைப்புடை
வதைக் கண்ட கிளி-
ரங்கன் உதவிக்கு -
ஓடுகிறது.
மணியின் அப்பாவான கலை
மானிடம் ரங்கன் நிலைமையை
விளக்கவே.....
விரைந்து வருகிறது கலைமான்.
ஏன் தயங்குகிறாய்?
உன் பசி வெறிக்கு-
என்னை இரையாக்
கிக் கொள்...!


ஆனால் விடுதலை
வேறு உருவில் வருகிறது
என் அருமை நண்பர்களா
நீங்கள் என்றுமே என்-
னைக் கை விட்டதில்லை.
பாவம் மணி; படுகாய மடைந்து
விட்டது. காயங்களுக்குப் பச்சிலை
... வைத்துக் கட்டியாக
வேண்டும்...
உன் பட்டுடலிலே-
பல இடங்களில் அவன் பல்-
பதிந்திருக்கிறதே மணி!...ம்...
கவலைப் படாதே.
என்ன தம்பு? எங்கே கூப்-
பிடுகிறாய்? அவசரமான விஷயமா?
அப்படி என்ன?
தொடரும்

ரீடா கூந்தலைப் பாதுகாக்கும்



தொல்லைகளைத் துரிதமாகவும் திறமையாகவும் நீக்குகிறது.

ரீடாவை உபயோகித்து மயிர்க்கால்களுக்கு போஷாக்குத் தருவதால் உங்கள் கூந்தல் நீண்டு வளர்ந்து மிருதுவாகவும் பளபளப்பான கருமை நிறத்துடனும் காணப்படும். இதிலுள்ள மருந்துச்சத்துக்கள், மயிர் கொட்டுதலை நிறுத்தி, பொடுகைபபோக்கி, நரைக்காமல் பாதுகாக்கும். புட்டியிலுள்ள ரீடாவைத் தேங்காய் எண்ணெய், கடுகு அல்லது நல்லெண்ணெயில் கலந்து எப்போதும் உபயோகியுகங்ள். காரிருள் போன்ற கருங்கூந்தல் அழகை நிச்சயம் நீங்கள் பெறலாம். ரீடாவை உபயோகிப்பதுடன் உங்கள் நண்பர்களுக்கும் சிபாரிசு செய்யுங்கள்.



ரீடா

கவர்ச்சி தரும் கூந்தலின் ரகசியம்

ரீடா கம்பெனி, சென்னை-1.

R,G TM

Family favourites...



The illustrated monthly journals, Soviet Union and Soviet Woman, have become family favourites throughout the world. The magazines reflect the kaleidoscopic variety of life of a dynamic people building a happy society.

SOVIET UNION
(Monthly in English, Hindi and Urdu)
Annual Rs. 6.75 2-year Rs. 10

SOVIET WOMAN
(Monthly in English and Hindi)
Annual Rs. 4.25 2-year Rs. 6



UNIQUE Gifts TO ANNUAL SUBSCRIBERS

A beautiful multicoloured pictorial calender of 1962 for every annual subscriber for each magazine, sent directly from Moscow with the first issue.

Reduced subscription rates for every two-year subscriber and pictorial calenders of 1962 and 1963 sent with first issues of each year.

Renewal concession of 10% reduction in the subscription rates.

Send your subscriptions to :-

NCBH. PRIVATE LTD., 6, Nallathambi Chetty St., MADRAS-2
8-B, Pycropts Road, MADRAS-5
10, West Tower Street, MADURAI
19/27 Big Bazaar Street, COIMBATORE

அன்பே ஆரமுதே

தி. ஜானகிராமன்

அத்தியாயம் நாற்பத்தொன்று

சிரிக்கிறதா அழுவதா என்று புரியாமல் ருக்மிணி தவித்தாள். 'அடி அசட்டுப் பெண்ணே!' என்று டொக்கியை மனத்திற்குள்ளேயே கடிந்து கொள்வதைத் தவிர அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தன்னைக் கண்டு, தான் செய்ததைக் கண்டு பிரமிப்பில், ஏதோ அதிசயத்தை முதலில் யாரிடமாவது சொல்லித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னவளை எப்படி வாய்விட்டுக் கடிந்து கொள்கிறது! இந்த அனந்தசாமிதான் எதற்காக இந்தப் பெண்ணிடம் இதைச் சொல்லி வைக்க வேண்டும்! இப்படி அதிர வைக்கும்படி அவ்வளவு எளிய மனம் எதற்காக அவருக்கு

யோசித்துப் பார்த்ததில் இந்த வேதனை கூட நியாயமாகத் தோன்றவில்லை. எப்படியாவது, எப்பொழுதாவது இது எல்லோருக்கும் தெரிய வேண்டியது தானே! தெரிந்து விட்டது. தெரிந்து கொண்ட மனிதன் போக்கிரி. என்ன செய்ய?.....

அவள் முகம் இலேசாகக் கறுத்தது.

''என்ன மாமி! என்னமோ போலிருக்கிறீர்களே! ரங்கன் என்ன சொன்னான்?'' என்று பரபரத்தாள் டொக்கி.

''அதுதான் சொல்லி விட்டேனே! திருப்பித் திருப்பி என்ன? உன்னைக் கொத்திக் கொண்டு போய் விடலாம் என்று ராப்பகலாக ஏங்கிக் கொண்டிருந்திருக்கிறான் — கழுகு மாதிரி. நீ நழுவி விழுந்தவுடன் ஆத்திரம் தாங்கவில்லை. அவரைப் போய் நகத்தாலும் மூக்காலும் குதறி விட்டான்....''

டொக்கியின் முகம் விழுந்து விட்டது. ''என் வாயை அடக்க முடியாது போல் இருக்கிறது மாமி. எனக்குத் தெரிகிறது வளவளவென்று பேசுகிறது. ஆனால் நரம்பு வியாதி வந்த மாதிரி, நானே அடக்க முடியாமல் பேசிக் கொண்டே போகிறேன்....சரி, நான்தான் சொன்னேன். இவன் யாரு அவரைப் போய் இரைய! இவனுக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?''

''பழைய தோஷம்.''

''ஆமாம். அவர் இவனோடு பழகினது தோஷம் தான்'' என்றாள் டொக்கி.

கடைக்குப் போன தாயார் வந்து, காப்பியைப் போட்டுக் கொடுத்துப் பிரமாத உபசாரம் செய்தாள் ருக்மிணிக்கு. அவள் சற்று நேரம் உள்ளே போன சமயம் பார்த்து, ''மாமி, சற்று இருங்கள். நான்கு வீடுகள் தள்ளிச் சிநேகிதி ஒருத்தி இருக்கிறாள். டான்ஸ் வகுப்புக்குப் போவாள். எனக்கு இன்று வர ஒழியாது என்று சொல்லி அனுப்பி விட்டு வந்து விடுகிறேன்' என்று டொக்கி வாசலைப் பார்க்கப் பறந்து விட்டாள். ருக்மிணி ''வேண்டாம் — என்ன?'' என்று வாய்க்கு வந்த வார்த்தைகளைக் கூடச் சொல்ல முடியவில்லை. சிட்டாகப் பறந்து விட்டாள்.

''எங்கே போகிறாள்?'' என்றாள் உள்ளே யிருந்த தாயார்.

ருக்மிணி சேதியைச் சொன்னதும், ''இன்னிக்கும் மட்டமா?'' என்று பெருமூச்சு விட்டாள் அவள்.

''இன்றைக்கும் என்றால்?''

''தினமும் இப்படித்தான் நடக்கிறது. ஒரு வாரமாச்சு. என்ன சாக்கிட்டாவது சொல்லலாம் என்று இடைத்ததைப் பிடித்துக் கொண்டு விடுகிறாள்.''

''காரணம்?''

''டான்ஸ் சினிமா எல்லாம் பிடிக்கவில்லையாம். படிக்கிறதாக உத்தேசமாம். எப்படி! ஸ்வாமிகளிடம் கூட அன்று ஒரு பாட்டம் சொன்னேன். அவரிலே



கலியாணம் பண்ணுகிறேன் என்றார் அப்பா. 'வேண்டாம் மெட்ராஸுக்குப் போகணும்' என்றாய். வந்தாச்சு. வந்த காரியத்தை ஒழுங்காகப் பார்க்கணுமோ இல்லையோ? இப்ப டான்ஸ், சினிமா எல்லாம் அலுத்துப் போச்சு. கலியாணம் பண்ணிக் கொள்ளென்று இந்தப் பிள்ளையாண்டான் காலில் விழாத குறையாகக் கெஞ்சறேன். மாட்டேன்....''

''எந்தப் பிள்ளையாண்டான்?''

''ரங்கன், ரங்கன் என்று ஒரு பையன். நல்ல குடும்பம். ஏகத்தாறு சொத்து. நல்ல படிப்பு. லட்சணம். அவனும் வேண்டாம், இப்ப படிக்கிறேன் என்கிறாள்'' என்று அனந்தசாமியிடம் அன்று சொன்னதையே மீண்டும் ஒரு பாட்டம் புலம்பித் தீர்த்தாள் தாயார். அனந்தசாமியைப் பொரிகைக்கு அழைத்தது போல, ருக்மிணியையும் அழைத்தாள் கடைசியில்.

டொக்கி திரும்பி வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் புறப்பட்டாள் ருக்மிணி.

''நீங்கள் சொல்லுங்கள். நாங்களெல்லாம் சொல்லி அவள் கேட்கிறவளாகத் தோன்றவில்லை'' என்று டொக்கியின் தாயார் கெஞ்சினாள். ருக்மிணியை பஸ்ஸில் ஏற்றி விடுவதற்காக டொக்கியும் கிளம்பும் பொழுதுதான் இந்த வேண்டுகோள் கிளம்பிற்று.

''என்னம்மா — என்னத்தை நீ சொல்லிக் கேட்கலை நான்? ரொம்ப நெருக்கமா யாராவது இங்கே பழகி விட்டார்களோ. பிடித்தது சனி. பொண்ணுக்கு உபதேசம் எடுத்து வைக்கக் கிளம்பி விட வேண்டியது'' என்று காய்ந்து கொண்டே காலில் செருப்பை மாட்டிக் கொண்டாள் டொக்கி.

''கேட்டீர்களா நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்.''

'பேசாமல் வா டொக்கி'' என்று கூறிக்கொண்டே நகர்ந்தாள் ருக்மிணி.


தெருவில் இறங்கிப் பத்தடி நடக்கும் வரையில் பேசவில்லை டொக்கி. பிறகு ஆரம்பித்து விட்டாள். ''பேசாமல் எப்படி இருக்கிறது? இவள் என்னுடைய சுகத்துக்காகவா இப்படிப் பறவாகப் பறக்கிறாள்? அவள் பெரிய லக்ஷா இப்பிரபுவுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கணும். பகவான் எங்கப்பாவைத் தான் காண்பித்தார். ஆயிரம், லக்ஷம் என்று சொத்துக்களைச் சாசனம் பண்ணி ரிஜிஸ்டர் பண்ணுகிற சப்-ரிஜிஸ்திரார் தான் இவளுக்கு லபித்தது. அதுவும் இரண்டாம் தாரம். ஆனால் நான் கொஞ்சம் மூக்கும் முழியுமாகப் பிறந்ததும் நம்ம ஜன்மம் இப்படி ஆயிடுத்து என்று முடங்கிப் போனவளுக்குக் கண் திறந்து விட்டது. குயுக்தியெல்லாம் தோன்ற ஆரம்பித்து விட்டது. சினிமா, நாடகம் என்று நான் அடித்துக் கொள்ளவில்லை மாமி! இவள்தான் அந்தப் பாத்தியிலே நட்டு வளர்த்தாள். இவளுக்கு யாரோ சொந்தக்காரனும். ஒரு தடிப் பயல் இங்கு வருவான். சினிமாக்காரன் வீடுகளில் சுற்றிக் கொண்டிருப்பான். படிப்பு கிடையாது. காசுக்காக எந்தக் காரியமும் செய்கிற, உணர்ச்சி இல்லாத ஜன்மம். அந்தப் புழு வந்து தான் என்னை அதள பாதாளத்திலே தள்ளியது. எங்க அம்மாவா இவள்? முதலாளி. நான் முதல் அவளுக்கு. நல்ல வேளையாக நான் சமயத்தில் விழித்துக் கொண்டேன். இல்லாவிட்டால் அன்றோடு நின்றிராது. அந்தப் பயலையும் பயமுறுத்தினேன். இனிமேல் 'இந்த வீட்டுப் பக்கம் காலை வைத்தாயோ, போலீஸில் சொல்லி விடுவேன்' என்று. இப்போது வரக்காணோம். நான் இல்லாதபோது இரண்டு மூன்றுதடவை வந்து அம்மாவோடு பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனானாம்.''

''யாரு?''

''அதான் அம்மாவுக்குச் சொந்தக்காரன் என்று சொன்னேனே. நான் அன்று பீச்சில் சொன்னேனே, அதற்கெல்லாம் இந்தப் பயல்தான் காரணம். இவன் தான் சினிமாவில் சேர்த்தாகி விட்டது என்று சொன்னான். ஒத்திகைக்குக் கார் வந்து அழைத்துப் போகும் என்று சொன்னான். யோசித்துப் பார்க்கிறபோது எங்களை ஊரிலிருந்து கிளப்பிக் கொண்டு வந்ததற்கெல்லாம் இவன் தான் ஆதிமூலம் என்று தோன்றுகிறது. ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்ல வேண்டும் மாமி. ரங்கன் இந்த இக்கட்டான சமயத்தில் வந்து காப்பாற்றினான். இன்னும் மேலே மேலே நான் தறிகெட்டு அலையாமல். அம்மாவுக்கு ரொம்பக் கோபம் அவன் மேலே. இப்போது எல்லாம் விசாரித்த பிறகு கலியாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று அவன் சொன்னதும் அதைப் பிடித்துக் கொண்டு விட்டாள். அவன் பரவாயில்லை என்றாலும் நான் கெட்டது கெட்டதுதானே! இது அவளுக்குப் புரியவில்லை. நான் எப்படிச் சொல்கிறது? புரியாதவளைக் கடுமையாகச் சொல்லித்தான் விரட்ட வேண்டும் என்றே காலையில் வெடுக்கென்று சொன்னேன், கலியாணம் கிலியாணம் என்று பேசுவதாயிருந்தால் நீ இங்கு வரவே வேண்டாம் என்று.''

ருக்மிணி ஒன்றும் பேசவில்லை. மௌனமாகக் கேட்டுக் கொண்டே நடந்தாள்.

''கலியாணம் எதற்காக மாமி! இந்த உலகத்தில் பிறந்தவர்கள் நூற்றுக்கு நூறு பேரும் கலியாணம் செய்து



எங்கேயோ ஊரில் கிடந்தோம். எங்களைக் கிளப்பிக் கொண்டு வந்து இங்கு வைத்து, சந்தி சிரிக்கப் பண்ணி, கடையில் சம்பந்தமே இல்லாத அனந்தசாமி மாமாவுக்குக் கூடைப் பழியை வாங்கி வைத்து ... இதெல்லாம் யார் மாமி செய்கிறார்கள்?''

ருக்மிணி சிரித்தாள். அவள் நினைவு கூட ஏறக்குறைய அதே ரீதியில் தான் ஓடிக் கொண்டிருந்தது.

பஸ் ஸ்டாண்ட் வந்து விட்டது.

ஃ ஃ ஃ

ருக்மிணி வீட்டுக்குள் நுழைந்ததுமே, ''எங்கேடி போயிட்டே இத்தனை நேரம்! அவர் வந்து அரை மணியாகக் காத்திண்டிருக்காரே'' என்று படிக்கிற அறையைக் காட்டினாள் அபயாம்பாள்.

''யாரு?'' என்று அறைக்குள் நுழைந்த ருக்மிணி ''அடே!'' என்று நின்றாள்.

''ம்'' என்று கப்புசாமி எழுந்து வெளியே வந்து புகையிலையைத் துப்பி விட்டுத் திரும்பினார். எப்போதும் போன்ற உற்சாகம் இல்லை அவர் முகத்தில். சிறிது நேரம் ஒன்றுமே பேசவில்லை அவர்.

''புகையிலையைத்தான் துப்பிவிட்டு வந்தீர்களே — ஏன் பேசவில்லை?'' என்று சிரித்தாள் ருக்மிணி.

''பேசினால்தான் உன் துயரத்தில் நானும் கலந்து கொள்ளுகிறேன் என்று அர்த்தமா? பேசாமலே அதை உணர முடியாதா?'' என்று ஆங்கிலமும் தமிழுமாகக் கலந்து சொன்னார் கப்புசாமி.

''என் துயரமா?'' ருக்மிணி சற்று யோசித்தாள்.

''இந்தச் சொரணை கெட்ட முண்டம் ஸ்வாமிகளை வாயில் வந்தபடியெல்லாம் இரைந்தானுமே!''

''யார் சொன்னார்கள்?''

''உங்க சித்தி வந்தாள் சாயங்காலம். சொன்னாள்.''

சித்தி அதற்குள் வந்து விட்டாள். ''நான்தாண்டி சொன்னேன். வந்ததும் வராததுமா இவன் யார் நம்மைப் பத்திப் பேச? பட்டதெல்லாம் போதாதா? எனக்கு ஆறலை. அதுதான் இவர்கிட்ட சொல்லலாம்னு சொல்லி விட்டு வந்தேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள் அபயாம்பாள்.

ருக்மிணி விவரமாக எல்லாவற்றையும் சொன்னாள். ''முப்பது வருஷக் கணக்கைப் பார்த்திருக்கிறது இந்த டொக்கி. இப்படியெல்லாம் இருக்கிற போது. நேற்றுப் பழகின சந்திரனை எப்படி இவனால் மறக்க முடிந்தது என்று ஆத்திரம் வந்திருக்கிறது.. அவனிடம் சொல்லி விட்டது. அவன் கூட்டோடு கூடாகக் கத்தி விட்டுப் போயிருக்கிறான். வேறொன்றுமில்லை.''

''நீ ரொம்பச் சாதாரணமாகச் சொல்கிறாய். எனக்கு இன்னும் கொதிப்பு அடங்கவில்லை. இந்தப் பயலோட வியாபாரம், கடை, ஸ்கூட்டர், வீடு — எல்லாத்தையும் ஒரு நிமிஷத்தில் உதறி எறிந்து விட முடியாதா என்ன?'' என்றார் கப்புசாமி.

ருக்மிணி நிமிர்ந்து பார்த்தாள் அவரை. சட்டென்று அவளுக்குப் பழைய நினைவு ஒன்று வந்தது. சித்தி டில்லியில் என்னமோ சொன்னாளே கப்புசாமியைப் பற்றி! இவ்வளவு மாறிப் போய் விட்டாரா கப்புசாமி என்ற அர்த்தத்தில்! அப்படியானால் பழைய கப்புசாமி எப்படி இருந்திருக்க வேண்டும்! இப்படிக் கடை, வியாபாரம் — எல்லாவற்றையும் உதறி விடுகிற ஆசாமியாகவா! அந்தக் கண்ணில் ஒரு கணம் பளிச்சிட்ட தீயைப் பார்த்ததும் ருக்மிணிக்குச் 'சொரேர்' என்றிருந்தது — கரண்டியைக் காய்ச்சி ஒரு தொடுப்போது கையில் வைக்கிறாற் போலத்தான்.

என்ன இது! இது என்ன பயம்!

''ப்ஸ'' என்று சூள் கொட்டினார் கப்புசாமி. ''தொலையறான் போ. இதுக்காக மனசைப் போட்டு அலட்டிக்கொள்ளாதே'' என்றார்.

''நான் அலட்டிக்கொள்ளவே இல்லை. அப்படியிருந்தால் இங்கே வருகிற சங்கதியே எழுந்திராதே.''

''ரொம்ப சரி. இந்த மாதிரி ஏது வந்தாலும் நீ கவலைப்பட வேண்டாம் என்று சொல்லத்தான் வந்தேன். சுற்றியிருக்கிறவர்களைக் கண்டு பொறாமைப்படுகிறது என்று ஆரம்பித்தால், கண்டபடி கூட நம்மை ஆள ஆரம்பித்து விடும் ... நீ ஏதாவது வருத்தப்படுகிறாயோ

என்று எண்ணித்தான் வந்தேன். நீ இப்படி இருக்கிறது எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது'' என்று மீண்டும் வெற்றிலைப் பெட்டியைத் திறந்தார் அவர்.

புத்தக அலமாரிகளைப் பார்த்தவாறே சீவலை எடுத்து வாயில் அடைத்துக் கொண்டார்.

''அப்புறம் என்ன விசேஷம்!''

''ஒரு விசேஷமுமில்லே. பிள்ளையாண்டான் அடுத்த வாரம் வருகிறானும் குடும்பத்தோடு'' என்று அலமாரியைப் பார்த்துக் கொண்டே சொன்னார் கப்பு.

''அடுத்த வாரம்!''

''ம்!'' என்று திறந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டார் அவர். ''வாசித்து விட்டு இரண்டு நாட்கள் கழித்துத் தருகிறேன்'' என்று எடுத்துக் கொண்டார். ''வரேன்'' என்று வெளியே நடந்து விட்டார்.

''ஏன் சித்தி! யாரோ யாரையோ கத்தினன் என்று குடுகுடுவென்று எதற்காக இவரிடம் சொல்லி விட்டு வந்தாய்?'' என்று கேட்டாள் ருக்மிணி.

''யாரோ யாரையோவா ...! நீயும் வேணும்னு சாமியாரா இரு. எனக்கு அப்படியெல்லாம் பொறுத்திண்டிருக்க முடியாது. இத்துனூண்டு பய இவன் என்னடி சொல்லக் கிடக்கு? அதுக்குத் தான் கப்புசாமியிட்ட சொன்னேன்.''

''கப்புசாமி என்ன பண்ணமுடியும்?''

''ம்! என்ன பண்ண முடியுமா? தலையைக் கிள்ளி எறிவார். முன்னே போய் இருந்த மாதிரி ஒரு மாசம்-ரிமாண்டிலேயும் இருந்துட்டு வருவார்.''

''என்னது? ரிமாண்டா!''

''ஆமாம்.''

ருக்மிணி வெதறிப் போய் நின்றாள்.

''என்ன சித்தி இது?''

''முப்பது வருஷமா! ஏன் நாப்பது வருஷம்கூட இருக்கும். ராமக்குண்டு, ராமக்குண்டுன்னு ஒரு தடியன் இருந்தான். பெரிய மனுஷன். நானூறு வேலி குடித்தனம். பஞ்சமகா பாதகம் அத்தனையும் பண்ணிண்டிருந்தான். கடன் கொடுக்கிறது, அப்படியே நிலத்தை எழுதிக் கட்டிக்கிறது இப்படிப் பத்துப் பன்னிரண்டு குடித்தனங்கள் எல்லாத்தையும் பறி கொடுத்துப்பட்டு ஊரை விட்டே ஓடித்து. கொஞ்சம் பார்க்கும்படியாக ஒரு பொண்ணு இருந்தால் போதும். அதை இதைச் சொல்லிக் கெடுத்துப்புடறது. குடி படைகளை இம்சை பண்ணறது. இம்சை தாங்காமல் ஏதாவது முணகினு, வீட்டுக்குத் தீ வச்சுப்பிடறது. யாராவது செருப்புப் போட்டு வாசலோட நடந்தால், கட்டி

வைச்சு அடிக்கிறது — இப்படித் தலை சுத்தி ஆடிண்டிருந்தான். ராமசாமி அய்யன் ராமசாமி அய்யன்னு பேரு. ராமக் குண்டு ராமக் குண்டுன்னு கூப்பிடுவாளாம் அவன் அம்மா. பதினஞ்சு வயசிலேர்ந்து இந்த அட்டஹாசமெல்லாம் பண்ண ஆரம்பிச்சான். ஏதாவது வரும்னு தெரிஞ்சதோ ஆயிரம் ரெண்டாயிரம் இறைச்சுத் தன்னைக்கட்டி விடுவான். வீட்டிலே ஒருத்தியைச் சமையலுக்குக் கொண்டு வச்சிண்டான். அவளோட பையன் என்னமோ ஆகாத்தியம் பாத்துடுத்தாம். அந்தக் குழந்தையையே தீர்த்துட்டான்.''

ருக்மிணி கண்ணை மூடிக்கொண்டாள்.

''சித்தி! என்னத்துக்கு இந்தப் புண்ணிய புருஷனோட கதையை இவ்வளவு விஸ்தாரமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறாய்?'' என்று முகம் சிணுங்கக் கேட்டாள்.

''ரொம்ப சந்தோஷமாச் சொல்லலைடீ நான். எல்லாருக்கும் ஒரு காலம் உண்டோல்லியோ? அதைத்தான் சொல்ல வந்தேன். நாகம்மா அத்தை வந்து இருக்கச் சொன்னாள்னு ஒரு மாசம் இருந்திருக்கா அங்கே போய் — கலியாணம் ஆயிடுத்து அப்ப — சிவன் கோயிலுக்குப் போயிண்டிருந்திருக்கா. இந்தப் பாவி அவ மேலே கண்ணைப் போட்டுட்டான். ரொம்பக் கரிசனமா இவ அத்தை வீட்டுக்கு வந்து பேசறது கொள்றது என்று ஆரம்பிச்சிருக்கான். அத்தை ஒரு நாள் சாயங்காலம் பிள்ளையார் கோயில் பக்கம் போயிருந்திருக்கா. அவ புருஷனும் வயலுக்குப் போயிருக்கிறார். அப்ப வந்து நின்னானாம் இந்தப் பாவி. என்ன பண்ணினானோ—ன்னு கத்தியிருக்கிறாள் நாகம்மா. பஞ்சாப் பறந்துட்டான். மறு நாளைக்கே விடியறதுக்கு முன்னாலே ஊரிலே கொண்டு விட்டுவிட்டா அவளை. அண்ணாகிட்டே போய் அழுதிருக்கா. அப்படியான்னானாம் சுப்பு. எண்ணி ஏழு நாட்கள் ஆகலே. ராமக்குண்டு எங்கேயோ வண்டியைக் கட்டிண்டு போய் விட்டுத் திரும்பி வரபோது, வண்டியை மறைச்சாளாம் நாலஞ்சு பேர் வந்து. ராமக் குண்டுவை மாத்திரம் இறங்கச் சொன்னான்களாம். அவன் இறங்கினதும், வண்டியை விடச் சொல்லிட்டான்களாம். பத்தே நிமிஷங்களிலே ராமக் குண்டைக் கதையாய்ப் பண்ணிட்டான்கள் நாலு பேருமா. அவ்வளவுதான் ஊர் இமிலோகப்பட்டது. சுப்புசாமியைக் கொண்டு ரிமாண்டில் வைச்சா. கேஸ் நிக்கலே. செஷன்னிலே சாட்சியில்லேன்னு தள்ளி விட்டான். அப்புறம் ஊரை விட்டுச் செட்டிநாட்டுக்குப் போய் விட்டார் சுப்பு—''

கன்னத்தில் கையை வைத்துக் கொண்டே கேட்ட ருக்மிணிக்குக் கண் குத்திட்டு நின்றது. வெகு நேரம் வரையில் வெறித்த அந்தப் பார்வை சூன்யத்திலிருந்து மீளவில்லை.

அதே சுப்புசாமிதான் ''ப்ஸ'' என்று சூள் கொட்டி இன்று வந்த துக்கத்தை விழுங்கி விட்டார். வயசுக்கு எத்தனை அருள், எத்தனை கனிவு!

''ஏன் சித்தி! இவ்வளவு தெரிஞ்சா நீ சுப்புசாமியிடம் போய் இதைச் சொன்னாய்!'' என்று மிகுந்த வேதனையோடு கேட்டாள் அவள்.

''தப்பா ஏதுவும் நடக்கணும்னு சொல்லலேடி. ஒரு பாவமும் அறியாத வாளைப் பார்த்து ஏன் ஒரு பாவி இல்லாததைப் பொல்லாததைச் சொல்லணும்! — ஒரு வருஷமா — ரெண்டு வருஷமா — முப்பது வருஷங்கள் — எனக்குக்கூடச் சொல்லாமே இப்படித் தபசாப் பண்ணி இப்படி வந்து சேர்ந்தியேடி குழந்தே — இப்படிப் பண்ணினதுக்கெல்லாம் இந்த வார்த்தை தானா?'' என்று கண்டம் உடைந்து பேச முடியாமல் விக்கினாள் சித்தி.

''பேசாமல் இரு, சித்தி.''

சித்தி கண்ணைத் துடைத்துக்கொண்டு வாயைத் திறந்து அனல் மூச்செறிந்து கொண்டே நின்றாள். சற்று நின்றுவிட்டுச் சமையலறையைப் பார்க்க நடந்தாள்.

பழைய, புதிய சுப்புசாமிகளின் நிழல்கள் ருக்மிணியின் முன் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. கால் தரிக்காமல் அவர் அலைகிற அலைச்சல்! பம்பாய், கல்கத்தா, டில்லி என்று அவர் பறக்கிற பறப்பு! தண்டிக்கிற உரிமையைக் கடவுளிடமிருந்து ஒரு தடவை பறித்துக் கொண்டதற்கு ஓர் ஆயுள் முழுவதையுமா தண்டம் கட்ட வேண்டும்!

மறுநாள் பாடத்துக்குத் தயார் செய்துகொள்ள வேண்டிய நினைவு வந்தது. புத்தகத்தை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தாள் அவள். ஆனால் புத்தகத்தில் மனம் செல்லவில்லை. சுப்புசாமியைத்தான் சுற்றிச் சுற்றி வந்தது.

''இன்று சீக்கிரமே வந்து விட்டேன்'' என்று குரல் கேட்டது. வெளியேயிருந்து வந்த அனந்தசாமி சாவிக்காக நின்று கொண்டிருந்தார்.

அனந்தசாமிக்கு இரவு உணவைக் கொண்டு சென்று பரிமாறியபொழுது, மந்தைவெளிக்குப் போய் வந்தது, டொக்கி சொன்னது — அனைத்தையும் சொல்லி விட்டாள் ருக்மிணி.


கைகழுவி விட்டு, துடைத்துக் கொண்டே வந்த அனந்தசாமி சொன்


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின் லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ்
122. கன்ஸராசால்... பம்பாய்-2.


கோலினஸ்

பற்சிதைவை ஒழித்து வாய் நாற்றத்தை அகற்றுகிறது.

நிச்சயமான ஆதாரம்!



பற்சிதைவுக்கும் வாய் நாற்றத்துக்கும் காரண மான அநேகமான கிருமிகளைக் "கோலினஸ்" பற்பசை அறவே அழித்து விடுகிறதென ஆராய்ச்சிக்கூடத்துச் சோதனைகள் நிரூபிக் கின்றன.



காலையிலும் இரவிலும் அரை அங்குல அளவு கோலினஸ் கொண்டு உங்கள் பற்களை இரண்டு நிமிடங்களுக்குத் தேயுங்கள். அதன் விசேஷமான உட்புகும் நுரை உங்கள் பல்லிடுக்குகளிலிருந்துகொண்டு பற் சிதைவுக்கும் வாய் நாற்றத்துக்கும் காரண மான உணவுத் துணுக்குகளை அகற்றுகிறது.

தவறாமல் வழக்கமாக **கோலினஸ்** உபயோகிப்பதால்

- பற்சிதைவு ஒழிக்கப்படுகிறது.
- வாய்நாற்றம் அறவே அகற்றப்படுகிறது.
- பற்கள் பளபளப்பாக வெண்மையாகின்றன.
- ஈறுகள் வலுப்படுகின்றன.

வேறெந்தப் பற்பசையும் உங்களுக்கு இதைவிட அதிக திருப்தியை அளிக்காதென உங்கள் பல்டாக்டர் கூறுவார்!



கோலினஸ் குளோரோபிலும் கிடைக்கிறது.

Registered User: GEOFFREY MANNERS & COMPANY LIMITED

னார். "நான் வீட்டிலேயே தங்கியிருக்கிறேன். ஆனால் வீட்டில் இருக்க வேண்டியவர்களுக்கு இருக்க முடியாது போல் இருக்கிறது."

ருக்மிணி பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கீழே வந்தாள். படியிறங்கும் பொழுது மேலே ஏறிக் கொண்டிருந்தான் ஒருவன்.

"ஐயா இருக்காங்களா?"

"இருக்காங்க" என்று மீண்டும் ஏறி யாரோ வந்திருப்பதைச் சொன்னாள். பங்காரு உள்ளே வந்தான்.

"சாமி! நான்தாங்க பங்காரு."

"அடெடே! வாப்பா!"

"தம்பி வந்திருக்கு சாமியைப் பார்க்கணும்னு" என்று ஒதுங்கி நின்றான்.

"'யாரு? காசியா?"

"ஆமாங்க. கீழ இருக்கு வண்டியிலே வரலாமான்னு உங்களைக் கேட்டு வரச்சொல்லிச்சு."

"என்னப்பா கேள்வி இது! நான் என்ன ஆபீசரா! தம்புரானா! வரச் சொல்லு!"

அவன் போனதும் "நீங்கள் கூடப் பார்க்கலாம், அருண்குமாரை" என்றார் அனந்தசாமி.

"அவனா வந்திருக்கிறான்?"

"ஆமாம். ரொம்ப நல்ல பையன்."

"ஆ!" என்று அந்தத் தீர்ப்பைக் கேட்டுக் குழம்பி, அவர் உண்மைதான் சொல்கிறாரா என்று அறிய முயல்வது போல அவரைப் பார்த்தாள்.

"தங்கமான பையன்."

"ம்!"

"ஆமாம். தங்கத்துக்கு ஒரு பாவமும் தெரியாது. ஆனால் பொல்லாதது என்று நாமெல்லாம் நம் குறைகளையெல்லாம் அதன் தலையில் போட்டு விடுகிறோம். இல்லையா?.." என்று நிறுத்திக் காசிலிங்கம் வரும் 'ஓசையைக் கவனித்தார் அனந்தசாமி.

"வரணும், வரணும்."

"வணக்கம்!" என்று சற்றுத் திரும்பி ருக்மிணிக்கும் வணக்கம் சொன்னான் காசிலிங்கம்.

அனந்தசாமி ருக்மிணியை அறிமுகப் படுத்தி வைத்தார்.

"இவரைப் பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. பாகவதர் சொல்றாப் போல இவரைத் தெரியாதென்றால் நாகரிகத்தோடு தொடர்பில்லாதவர்கள் தான் சொல்லுவார்கள்."

"எங்க வாத்தியாரை யாரானே சொன்னாங்க? சொல்லட்டும், சொல்லட்டும். வாத்தியாருங்களைத் தவிர யார் கிட்டத்தான் குட்டுப் படப் போறோம்? எப்பவுமே இருக்கிற நாகரிகம், வந்து வந்து மக்கிப் போற நாகரிகம்னு ரெண்டு தினுசு உண்டு. இரண்டாவது நாகரிகத்தைத் தான் சொல்லி யிருப்பாங்க அவங்க!"

"பார்த்தீங்களா! உங்கள் மாதிரி படிக்கவில்லை அவர். ஆனால் பேசுற பேச்சைப் பாருங்கள்" என்றார் அனந்தசாமி, ருக்மிணியைப் பார்த்து.

காசிலிங்கத்தைச் சற்று வியப்புடன் தான் பார்த்தாள் ருக்மிணி.

"படித்தால் தான் என்ன? படிக்கிறதனால் ரொம்பப்பேருக்கு பயமும் சந்தேகமும் அரை குறை நம்பிக்கையும் தான் படிகின்றன. படிப்போடு இதையெல்லாம் சேர்த்துச் சொல்லிக் கொடுத்து விடுகிறார்கள்...."

"பயமும் கொஞ்சம் வேண்டியது தானுங்களே" என்றான் காசி. "நானும் இப்படித் தாந்தோணியாத்தான் இருக்கிற வழக்கம். ஆனால் குழந்தைக்குச் சீக்கு வந்ததிலேர்ந்து ஒண்ணும் புரியாமல்,- அலமாங்கிட்டேன். ஐயா வந்தப்புறம், கொஞ்சம் நிதானம், யோசிக்கிறது எல்லாம் வந்திரிக்க."

அவன் குழந்தைக்கு வந்துள்ள வியாதியைப் பற்றி ருக்மிணியிடம் சொன்னார் அனந்தசாமி.

சற்றுப் பேசிக் கொண்டிருந்தவன் "சரி, வரட்டுங்களா?" என்று விடை பெற முயன்றான் காசிலிங்கம்.

"என்ன விசேஷம் வந்தது?"

"ஒண்ணுமில்லீங்க. சும்மாத்தான் பார்க்கலாம்னு வந்தேன்."

ருக்மிணிதான் இருப்பதால்தான் வந்த காரியம் வெளிவரத் தயங்குகிறதென்று எண்ணி, விடைபெற்றுக் கொண்டு கீழே போனாள்.

கடைக்கண்ணால் அவள் போன திசையைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான் அவன்.

"ஏதாவது சொல்ல வேண்டும் என்று வந்தீர்களா?"

"ஆமாங்க. எப்படிச் சொல்றதுன்னு தான் புரியலை."

"என்ன?"

"சாமிக்கு எவ்வளவோ செய்ய முடியும். ஏன் இந்தப் பையனை இப்படியே வச்சிருக்கீங்கன்னு தான் புரிய மாட்டேங்குது எனக்கு."

"எந்தப் பையனை?"

"நம்ம ரங்கனைத்தான். அவரு என்னமோ புத்தி புரண்டாப்பல பேசிக் கிளம்பிட்டாருங்களே. எனக்கு ஒன்றுமே

புரியலே. இன்னிக்கு மத்தியானம் 'செட்'டிலே உட்கார்ந்திருந்தேன். வந்தார். தனியாகப் பேசணும்னாரு. போனேன். என்னமோ உளற ஆரம்பிச்சாரு. எனக்குத் தூக்கி வாரிப்போட்டுது. நிமிர்ந்து பார்த்தேன். ஏதாவது பிரமை புடிச்சிருக்கோன்னிட்டு. கடைசிலே கேட்டுக்கூட விட்டுப்புட்டேன். என்ன உடம்பு உங்களுக்குன்னு. உடம்பு சரியாத்தானிருக்கு. குழம்பிப் போயோ இல்லாட்டி போதையிலேயோ பேசறேன்னு நினைக்க வாணும். நிதானமா நல்லாத் தெரிஞ்சிட்டு, யோசிச்சுத் தான் சொல்றேன்னாரு. அடவிதியேன்னு தலையிலே அடிச்சுக்கிட்டேன்."

"என்ன சொன்னார்—அதைச் சொல்லுங்களேன்."

"அவருதான் சகதியிலே விழுந்து புரண்டாரு. நானும் அதைச் சொல்லி அதே சேத்திலே புரளணுமா....! ஆனா ஐயாகிட்டே சொல்லலாம்னு வந்தப்புறம் பேசாம இருக்கவும் முடியலே.."

"சொல்லுங்கள். என்னைப் பத்தித் தான் சொன்னாரோ?"

"ஆமாம்."

"பொல்லாதவன்னு சொன்னாரோ?"

"ஒரு சொல்லிலே சொல்லலே. அளந்து அளந்து கொட்டினாரு. சாமி வேஷத்தையெல்லாம் கண்டு நம்பாதேன்னாரு குழந்தையை அவர் கிட்ட காமிக்கவே காமிக்காதேன்னாரு. பணம் பிடுங்கின்னாரு அவருக்குப் பணம் எதுக்கையான்னு கேட்டேன். வெறும் சன்னியாசி பணம் இல்லாம காலத்தை ஓட்டறதுக்குன்னு என்னென்னமோ உளறினாரு."

"அப்புறம் உளறினதையும் சொல்லுங்கள். இப்பொழுது இங்கு இருந்தாரே இந்த அம்மாளைப் பற்றிச் சொன்னாராக்கும்?"

"ஆமாம்" என்று உடல் குறுகி, குனிந்து கொண்டான்.

"இதற்காகத்தான் பணம் பிடுங்கறேன் என்று சொன்னாராக்கும்?"

"ம்க்கும், எப்படி இந்தத் துர்ப்புத்தி வந்தது அவருக்குன்னுதாங்க புரியலே. இப்படியே விட்டா பெரிசா வளந்துருவாரோன்னு பயமாயிருக்கு, எனக்கு. எனக்கு அவரைக் கவனிச்சுக்கமுடியும்."

"அப்படி யென்றும்?"

"இப்படி உளரும் இருக்கும்படியா பாடம் சொல்லிக் கொடுக்க முடியும்."

"எப்படி?"

"நல்ல முறையாச் சொல்றது. இல்லே தாளு வழியையும் பார்த்துப்பிடறது."

அனந்தசாமி சிரித்தார்.

"இமேர்னு ஏன் அவங்க மேலே இந்தக் கோபம் உனக்குன்னு கேட்டுப் பார்த்தேன். சொல்ல மாட்டேன் விட்டாரு."

"விஷயம் பிரமாதமில்லே. உங்களுக்குத்தான் குஸுமாவைத் தெரியுமே. அவளைக் கலியாணம் பண்ணிக் கொள்ளத் துடியாகத் துடிக்கிறார். அவளுக்கு விருப்பமில்லே. முடியவே முடியாதென்று சொல்லி விட்டாள்."

"குஸுமாவையா?"

"ஆமாம்."

"வேறு யாரோ பெண்ணைல்ல பண்ணிக்கப்போகிறதாக இருந்தாரு? அதைக் கூட எனக்குத் தெரியுமே?"

"யாரு?"

"எங்க ஊருக்கிட்ட தான் ஊரு அவங்களுக்கு. கட்டுசாமின்னு ஒரு செட்டியார்கிட்டே ஏஜண்டா யிருக்கிறாங்க. அவங்க வீட்டுக்கு அடிக்கடி போற வழக்கம் இவரு. அவருக்குத் தங்கச்சி மக ஒண்ணு இருக்கு."

"அதே தான். அது ஒரு நாளைக்கு இங்கே வந்தது. குஸுமாவும் அந்தச் சமயம் இங்கே வந்திருந்தது. நான் நானு ரங்குவையும் ஒரே சமயத்திலே கூப்பிட்டிருந்தேன். குஸுமாவுக்குச் சேதி தெரிஞ்சு போச்சு. அந்தப் பெண்ணைப் பார்த்ததிலிருந்து. இவர் மேலே கொஞ்ச நஞ்சம் இருந்த பிடிப்பும் விட்டுப் போயிடுத்து, அதுக்கு."

"ம்... அப்படியா!" என்றான் காசிலிங்கம். அப்படியே மௌனமாக உட்கார்ந்திருந்தான். "நீங்க இரண்டு பேரையும் ஒரே சமயத்திலே கூப்பிட்டு வச்சது மகாபாவம்னு நெனச்சிட்டாரு. இல்லீங்களா?"

"......"

"படிப்பிலேயே பயம் வரும்னு சொன்னீங்களே இந்த அம்மா. யோக்கியத் தனம்லே வந்திருக்காப்பல இருக்கு?"

"படிப்பு காரணமில்லே."

"இந்தத் துர்புத்தி வராம இருக்க இவரு படிப்பு உதவலேயேங்கறேன் சாமி."

பேச்சுத் தொட்டுத் தொட்டு வளர்ந்தது. "நான் அவரைக் கூப்பிட்டு விசாரிக்கிறேன்" என்றான் அவன்.

"அவசியமில்லே. சிநேகிதம் என்ற முறையில் நீங்கள் ஏதாவது சொல்வதைத் தடுக்க முடியாது. ஆனால் அவரைப்போல் தவறாக நீங்களும் ஒன்றும் சொல்லவோ, செய்யவோ கூடாது."

"அது தெரியாதுங்களா?" என்றான் காசிலிங்கம். (தொடரும்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

அவசரம்
அவசரம்
அவசரம்

கடுமையான சுரம். உடல் நிலை கவலைக்
கிடமாயிருக்கிறது... உடனே செய்தி அனுப்ப வேண்டும்

அதற்காகவே "ப்ரயாரிட்டி" தந்தி உள்ளது

நோய், விபத்து, மரணம் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் "ப்ரயாரிட்டி" தந்தியை உபயோகியுங்கள்.

எல்லா எக்ஸ்பிரஸ், அவசர தந்திகளைவிட இது வேகமாகப் போய்ச்சேரும். செலவும் அதிகம் இல்லை. வழக்கமான எக்ஸ்பிரஸ் தந்திக்கு உள்ள கட்டணம்தான் இதற்கும்.

தந்தியை அனுப்பும்போது மட்டும் "ப்ரயாரிட்டி" என்று குறிப்பிடுங்கள்

உங்களுக்கு சிறந்த முறையில்
சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் தந்தி இலாகா

DA 60/623

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



அன்னையின் அன்புலகிலே...
பொன்னான பொருள்களையன்றி
வேறுண்டோ?

ஆதரவுக்கு ஆதரவான
அன்னைக்கு ஆதரவு:
டால்டா

ஆதாரவே உருவான மகராசி... அன்பைப் பொழியும் முகராசி ...அருமையான பொருள்களைத் தருவதே அவள் கைராசி! கறி கூட்டு முதல் கறிவடாம் வரையில் எதனிலும் இனிமை ...கருத்துள்ள தாய்க் குலத்திற்குக் கைகொடுக்கும் டால்டா வனஸ்பதியின் பேருதவி! தரத்திலுயர்ந்த தாவர எண்ணெய்களாலான, தூய டால்டா ...வளரும் வயதினருக்கு வேண்டிய வைட்டமின்கள் அடங்கிய வனஸ்பதி...அறுசுவைச் சமையலுக்கு உறுதுணையான டால்டா...நம்மவர்க்கே உரிமை யன்றோ ..



டால்டா வனஸ்பதி: அறுசுவைச் சமையலுக்கு உறுதுணை

DL. 70A-X52 TM

இந்துஸ்தான் லீவர் தய